தமிழரசு
16-6-1997 ரூ.3







# சுற்றுப்புறச் சூழல் சிறப்பிதழ்

## இந்த இதழில்...


அரசின் கொள்கை கோட்பாடுகள் --- 2

மரம் - திறம் --- 7

மரங்களைப் பாடுவேன் --- 9
- கவிஞர் வைரமுத்து

மரம் வளர்ப்பும் பயன்களும் --- 11
- சி.கே. ஸ்ரீதரன்
ப.அ. மணி

அது ஏன்? --- 13
-கவிஞர் வாலி

இலக்கியத்தில் மரங்கள் --- 14

மரங்கள் --- 17
-கவிஞர் மு.மேத்தா

ஆறில் ஒரு பங்கு --- 18
-மகாகவி பாரதியார்

மகிழ்ச்சி செய் --- 30
-கவிஞர் அறிவுமதி

மண்ணின் பண் --- 31
-சிபிச்செல்வம்

சூழலியல் --- 33

மாதுளை மரம் --- 35

துன்ப சினேகிதன் --- 39
-கவிஞர் கண்ணதாசன்

ஊனமுற்றோருக்கு அரசு வழங்கும் ஒப்பற்ற உதவிகள் --- 40
-மைதிலி கே. ராஜேந்திரன்

ஆசிரியர் மடல் --- 48



**தமிழரசு**
திருவள்ளுவர் ஆண்டு 2028
ஆனித் திங்கள் : 2
மலர் : 27 இதழ் : 24
16.6.1997
விலை ரூ.3

# அரசின் கொள்கை கோட்பாடுகள்

*14.6.1997* அன்று அரசு தலைமைச் செயலகத்தில் நடைபெற்ற மாவட்ட ஆட்சித் தலைவர்கள், காவல்துறைத் தலைவர்கள் மாநாட்டில் மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் ஆற்றிய தொடக்க உரையின் முக்கியப் பகுதிகள் வருமாறு:

இந்த அரசில் என்னையும், அமைச்சர்களையும், உயர் அதிகாரிகளையும் யாரும் எவரும் எளிதில் சந்தித்துக் குறைகளைக் கூறவும், அவர்களின் நியாயமான கோரிக்கைகள் இந்த அரசினால் விரைந்து கவனிக்கப் படவும் நல்ல சூழ்நிலைகள் உருவாகியுள்ளன என்று தமிழகம் முழுவதும் பரவலாகப் பேசப் படுகின்றது.

கடந்த ஓராண்டாக, தமிழகத்தின் ஒட்டுமொத்த மேம்பாட்டுக்கான பல திட்டங்களைத் தீட்டி இந்த அரசு செயல்படுத்தி வருகிறது. குறிப்பாகத் தொழில் வளர்ச்சிக்காகவும், ஊரக வளர்ச்சிக்காகவும், ஏழை எளிய நடுத்தரப் பிரிவு மக்களின் முன்னேற்றத்திற்காகவும் பல்வேறு திட்டங்களைச் சிறப்பாக நிறைவேற்றி வருகிறது.

அரசின் மேல்மட்டங்களில் காணப்படும் நிர்வாகத் தூய்மையும் செயல் திறனின் வேகமும் கீழ்மட்டங் களுக்கும் சென்றடைய வேண்டும் என்பதுதான் என்னுடைய விழைவாகும். எனவே தமிழகம் முழுவதும் அனைத்துத் துறை களிலும் அனைத்து மட்டங்களிலும் தூய்மையான - திறமையான நிர்வாகம் நடந்திட நீங்களெல்லாம் ஒத்துழைக்க வேண்டுமெனக் கேட்டுக் கொள்கிறேன்.

சீரழிந்த நிலையில் இருந்த நிர்வாக இயந்திரத்தைச் சரிசெய்து, தூய்மையான நல்ல நிர்வாகம் அமைந்திட இந்த அரசு எடுத்த நடவடிக்கைகளில் ஒரு சிலவற்றைக் குறிப்பிட விரும்புகிறேன்.

ஒற்றை ஒப்பந்தப்புள்ளி முறை ஒழிக்கப்பட்டு ஒளிவு மறைவற்ற வெளிப்படையான ஒப்பந்த நடைமுறைகள் செயல்படுத்தப் பட்டுள்ளன.



கனிமத் துறையில் தவறுகளைத் தடுத்திட-முந்தைய அரசினால் புகுத்தப்பட்ட விதி 39 நீக்கப்பட்டு, பல கோடி ரூபாய் அரசுக்கு வருவாயாக ஈட்டப்பட்டுள்ளது.

மேலும், நிர்வாகத்தைச் செம்மைப்படுத்திட நிர்வாகத்தில் ஊழலைத் தடுத்திட இந்த அரசினால் நீதிபதி இராமானுஜம் கமிஷன் நியமிக்கப்பட்டுள்ளது.

வருவாய் நிர்வாகத்தைச் சீர்படுத்திட முன்னாள் தலைமைச் செயலாளர் திரு.சபாநாயகம் தலைமையில் உயர்நிலைக் குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

மாநிலத்தின் பத்திரப்பதிவு நடைமுறைகளை ஒழுங்குபடுத்திட அதிகாரிகளைக் கொண்ட நிபுணர் குழு ஒன்றும் அமைக்கப் பட்டுள்ளது.

நிர்வாகம் பற்றிய தகவல்களைப் பெறுவதற்குச் சாதாரண குடி மகனுக்கும் உரிமை வழங்கக்கூடிய "தகவல் உரிமைச் சட்டம்" என ஒரு புதிய சட்டத்தை நிறைவேற்றி யுள்ளோம்.

பத்து ஆண்டுகளுக்கு மேலாக நடைபெறாதிருந்த உள்ளாட்சி மன்றத் தேர்தல் களையும் கூட்டுறவுச் சங்கங் களுக்கான தேர்தல்களையும் வெற்றிகரமாக நடத்தி முடித் துள்ளோம். உள்ளாட்சி மன்றங் களுக்கு உரிய அதிகாரங் களையும் கூடுதல் நிதி ஆதாரங்களையும் உருவாக்கித் தந்துள்ளோம். மேலும் அதிகாரங்களை வழங்கு வதற்கான வழி வகைகளை மாநிலத் திட்டக்குழு வாயிலாக பரிசீலித்துக் கொண்டி ருக்கிறோம்.

ஆட்சிப் பொறுப்பேற்ற நேரத்தில் ஊரக வளர்ச்சித் துறையில் மட்டும் முந்தைய அரசு பல ஆண்டுகளாக முடிக்காமல் பல்வேறு நிலைகளில் விட்டுச் சென்ற ரூ.150 கோடி மதிப்புடைய ஒரு இலட்சத்து பதினான்காயிரம் பணிகள் இந்த அரசினால் நிறைவேற்றி முடிக்கப் பட்டுள்ளன.

இரண்டாம் பசுமைப் புரட்சியை உருவாக்கும் நோக்கத்துடன் தரிசு நிலங்களையும் மானாவாரி நிலங்களையும் மேம்படுத்திட

முன்னாள் துணைவேந்தர் திரு. வி. சி. குழந்தைசாமி அவர்கள் தலைமையில் வல்லுநர் குழு ஒன்று அமைக்கப் பட்டது. அக்குழு தர விருக்கும் பரிந்துரைகளை ஏற்று விரைந்து செயல்படுத்திடத் திட்ட மிட்டுள்ளோம்.

## தொழில் வளம்

தொழில்துறையில் மிகப்பெரிய வளர்ச்சியை எதிர்நோக்கிப் பல்வேறு வெளிநாட்டுத் தொழில் முனை வர்களுடன் இந்த அரசு ஒப்பந்தங்கள் செய்து கொண்டதன் காரணமாகப் பல பெரிய தொழிற் சாலைகள் தமிழகத்திலே உருவாகி வருகின்றன. தொழில் வளாகங்களில் ஒருமுனைத் தீர்வு மையம் (Single Window Clearance) செயல்பட சட்டம் நிறை வேற்றப்பட்டுள்ளது. மேலும் தொழில் வளர்ச்சிக்குத் தேவையான அடிப்படை கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தவும், புதிதாக உருவாக்கவும் பல நடவடிக்கைகள் எடுக்கப் பட்டுள்ளன. கூடுதலாக 6,000 மெகாவாட் மின்உற்பத்தி செய்ய நடவடிக்கை எடுத்துள் ளோம். புதிய தொழில் பேட்டைகள், இரசாயனத் தொழில் வளாகம், கணினி தொழில் நகரம், கணினி தகவல் சாதனத் தொழில் வளாகம் என்று தமிழகம் தொழில் மயமாகத் திகழத் திட்டங்கள் பல தீட்டிச் செயல்படுத்தி வருகிறோம்.

ரூ.450 கோடி செலவில் 5 ஆயிரத்து 800 புதிய பேருந்துகளை வாங்கிட ஆணையிடப்பட்டு படிப் படியாக வாங்கப்பட்டு வருகிறது.

மனைவரி ரத்து செய்யப்பட்டு நிலுவைத் தொகை தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது.

ரூ.24 கோடி செலவில் பட்டா பாஸ் புத்தகம் வழங்க ஆணையிடப் பட்டுள்ளது.

நிர்வாக வசதிகளுக்காக நான்கு புதிய மாவட்டங்கள் உருவாக்கப் பட்டுள்ளன.

ஆண்டுதோறும் மாநில அளவிலும், மாவட்ட அளவிலும் முதல் மூன்று இடங்களைப் பெறும் பத்தாம் வகுப்பு மற்றும் பன்னிரெண்டாம் வகுப்பு மாணவர்கள் 174 பேருக்கு மேல் படிப்புக்கான செலவுகளை அரசே ஏற்றுக் கொண்டுள்ளது.

பட்டதாரிகளாக இதுவரை யாருமே இல்லாத குடும்பத்தைச் சேர்ந்த மாணவர்களில் மொத்தம் 300 மதிப்பெண்களில் முதல் பத்து இடங்களைப் பெறுவோர்களின் கல்விக்கான முழுச் செலவையும் பொறியியல் கல்லூரியிலோ, மருத்துவக் கல்லூரியிலோ, பல் மருத்துவக் கல்லூரியிலோ, வேளாண்மைக் கல்லூரியிலோ, கால்நடை மருத்துவக் கல்லூரி யிலோ அவர்கள் விரும்பும் தொழிற் கல்விப் படிப்பினை படிக்க ஆகும் கல்விச் செலவை இந்த அரசே எற்றுக்கொண்டுள்ளது.

கிராமப்புறப் பள்ளி மாணவர் களுக்குப் பொறியியல் கல்லூரிகளில் 15 விழுக்காடு இட ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## வேலை வாய்ப்பு

வேலை வாய்ப்புப் பதிவு முன்னுரிமைப்படி, கடந்த ஆண்டில் 11 ஆயிரத்து 652 இடைநிலை ஆசிரியர்கள் நியமிக்கப் பட்டுள்ளார்கள்.

மேலும் இரண்டாயி ரத்துக்கும் மேற்பட்ட பட்டதாரி ஆசிரியர்களும், முதுகலை பாட ஆசிரி யர்களும் இந்த அரசினால் நியமனம் செய்யப் பட்டுள்ளார்கள்.

இந்த ஆண்டில் மேலும் பல்வேறு வகை ஆசிரியர்கள் ஏறத்தாழ 14 ஆயிரம் பேர் வேலை வாய்ப்பைப் பெற இருக்கிறார்கள்.

திருநெல்வேலியில் புதிய சட்டக் கல்லூரி தொடங்கப்பட்டுள்ளது.

திருச்சியில் புதிய மருத்துவக் கல்லூரி இந்த ஆண்டு துவங்கப் படவிருக்கிறது.

சேலத்தில் புதிய பல்கலைக் கழகம் இந்த ஆண்டு துவங்கப் படுகிறது.

சொந்தக் கட்டடம் இல்லாத 600 ஆரம்பச் சுகாதார நிலையங் களுக்குக் கட்டடங்களைக் கட்ட அரசு ஆணையிட்டுள்ளது.

1996-97ஆம் ஆண்டில் ரூ.250 கோடி செலவில் நபார்டு நிதி உதவியுடன் சாலைகளை மேம் படுத்தும் பணிகளை நிறை வேற்றி வருகிறோம். மேலும் 1997-98ஆம் ஆண்டுக்கு இதுவரை 148 கோடி ரூபாய் சாலைகள் மேம்படுத்தும் பணிக்காக ஒதுக்கீடு கிடைத்துள்ளது.

இது தவிர நகர்ப்பகுதி சாலை மேம்பாட்டுப் பணிகளுக்காக ரூ.35 கோடி நிதி வழங்கப்பட்டுள்ளது.

10 ஆண்டுகளுக்கும் மேலாக நியமிக்கப்படாமல் இருந்த சாலைப் பணியாளர்கள் பதவிகளில் இந்த ஆண்டில் 10 ஆயிரம் பேர் நியமிக்கப்பட உள்ளனர்.

முன்னாள் கிராம அதிகாரிகள் 15,000 பேருக்கு ஓய்வூதியம் வழங்க இந்த அரசு ஆணையிட்டுள்ளதோடு, ஓய்வூதியம் மட்டுமின்றி, பத்தாண்டு கால நிலுவைத் தொகையாக ஒவ்வொருவருக்கும் 23,000 ரூபாய் கிடைப்பதற்கான ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

## ஆதிதிராவிடர் நலன்

நிரப்பப்படாமல் உள்ள ஆதி திராவிடர் பழங்குடி மக்களுக்குரிய 18+1 சதவிகிதப் பணியிடங்கள்

### முதல் பக்க அட்டைப்படம்

மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் தமது பிறந்த நாளான 3.6.97இல் நாடெங்கும் மரங்கள் நடுமாறு கோரிக்கை விடுத்திருந்தார்.

### இரண்டாவது பக்க அட்டைப்படம்

“எல்லா மார்க்கங்களையும் சமமாகப் பாவிக்க வேண்டும்; அதுதான் மதச்சார்பற்ற தன்மையின் உண்மையான அர்த்தம்!” - என்றுரைத்த கண்ணியத் திற்குரிய காயிதே மில்லத் அவர்கள் 102வது பிறந்த நாள் 5.6.97.

### கடைசிப் பக்க அட்டைப்படம்

சிற்பக் கலைமட்டுமல்ல; ஓவியமும் உள்ளம் கவரும் நுண்கலையே என்பதை உணர்த்தி யிருக்கிறார் ஓவியர் திரு, பத்மவாசன்.

அனைத்தையும் மிக விரைவில் நிரப்பிட ஆணையிடப்பட்டுள்ளது.

ஆதிதிராவிட வகுப்பினரில் ஆசிரியப் பணிக்குத் தகுதி பெற்றவர்கள் கிடைக்காத காரணத்தால், தமிழகம் முழுவதும் 17 ஆசிரியப் பயிற்சி நிறுவனங்களில் ரூ.5 கோடி செலவில் ஆதிதிராவிட மாணவர்களுக்கெனத் தனி ஆசிரியப் பயிற்சிப் பிரிவுகள் இந்த ஆண்டில் தொடங்கப்படுகின்றன.

தென் மாவட்டங்களில் ஏற்பட்ட வறட்சியைப் போக்க 42 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

ஆதிதிராவிடர்களுக்கு இலவச வீட்டுமனைகள் வழங்கிடும் திட்டத்தை நீட்டித்து ஏழை எளிய, மிகவும் பிற்படுத்தப்பட்டோருக்கும் வீட்டுமனை வழங்க ரூ.10 கோடி.

பிற்படுத்தப்பட்டோருக்கு ரூ.5 கோடி.

முன்னேறிய வகுப்பில் எளியவர்களுக்கு ரூ.3 கோடி.

ஆபத்தான நோய்களுக்கு ஏழைகள் செய்துகொள்ளும் மருத்துவ அறுவை சிகிச்சைக்கு ரூ.15 கோடி.

என அரசு அறிவித்துள்ள திட்டங்களை நிறைவேற்ற உங்கள் ஆர்வமிக்க பணியை எதிர்பார்க்கின்றேன்.

சென்ற ஆண்டைப்போல் இல்லாமல், இந்த நிதியாண்டில் உரிய காலத்தில் வரவு-செலவுத் திட்ட அறிக்கை பேரவையில் நிறைவேற்றப்பட்டு வரலாற்றிலே இதுவரை இல்லாத வகையில் திட்ட செயலாக்கங்களுக்குத் தேவையான ஆணைகள் மே திங்களிலேயே வெளியிடப்பட்டு விட்டன. மேலும் பகுதி II திட்டங்களின் (Part II Schemes) கீழ் அறிவிக்கப்பட்ட 588 திட்டங்களுள், இதுவரை 571 திட்டங்களுக்கு ஆணைகள் வழங்கப்பட்டுள்ளன.

தலைமைச் செயலகத்தில் நானும் அமைச்சர்களும் உயர்நிலை அலுவலர்களும் ஆணைகளை வெளியிடுவதில் காட்டியுள்ள விரைவையும் வேகத்தையும் துறைத்தலைவர்களும் மாவட்ட ஆட்சியர்களும் கடைப்பிடித்திட வேண்டுமென்று விரும்புகிறேன்.

நாம் நமக்குரிய திட்டங்களை நிறைவேற்றி முடித்து விடுவோமேயானால், மத்திய அரசிடமிருந்து கூடுதல் நிதி ஒதுக்கீடுகளை நம்மால் பெற்றிட முடியும்.

### பொது விநியோகம்

பெரும்பாலான மக்கள் பொது விநியோகத் திட்டத்தின் மூலம் வழங்கப்படும் இன்றியமையாப் பொருள்கள் குறித்தகாலத்தில் குறித்த அளவில் கிடைத்திட வேண்டும் என்று விரும்புகிறார்கள். அரசு மீது மக்கள் வைக்கும் நம்பிக்கைக்கு ஓர் ஆதாரத் திட்டமாக இந்தப் பொது விநியோகத் திட்டம் விளங்குகிறது. அந்த நம்பிக்கையைக் காத்து, அதனை மேலும் வளர்க்கும் வகையில் இந்தப் பொது விநியோகத் திட்டத்தைத் தமிழகம் முழுவதிலும் சீராகச் செயல்படுத்துவதில் மாவட்ட ஆட்சியர்கள் தனிக்கவனம் செலுத்திட வேண்டும்.

1 யூனிட் உள்ள குடும்பத்திற்கு 12 கிலோ அரிசியும்.

1½ யூனிட் உள்ள குடும்பத்திற்கு 14 கிலோ அரிசியும்.

2 யூனிட் உள்ள குடும்பத்திற்கு 16 கிலோ அரிசியும்.

2½ யூனிட் உள்ள குடும்பத்திற்கு 18 கிலோ அரிசியும்.

3 யூனிட்டும் அதற்கு மேலும் உள்ள குடும்பங்களுக்கு 20 கிலோ அரிசியும் (ஒரு யூனிட் என்பது பெரியவர்களையும் ½ யூனிட் என்பது குழந்தைகளையும் குறிக்கும்)

வழங்கப்பட வேண்டுமென்ற இந்த அரசின் எண்ணம் முழுமையாக நிறைவேறும் பொருட்டு, மாவட்ட ஆட்சித் தலைவர்கள் இத்திட்டத்தை உன்னிப்பாகக் கவனித்து செயல்படுத்திட வேண்டும்.

குறைகள் நிகழா வண்ணம் மாவட்ட ஆட்சியர்கள் இதில் நேரடியாகக் கவனம் செலுத்தி, பொது விநியோகத் திட்டத்தின் பயன்கள் முழுமையாய் மக்களுக்குக் கிடைப்பதை உறுதிப்படுத்திட வேண்டுகிறேன்.

ஏறத்தாழ 2000 கோடி ரூபாய் உள்ளாட்சி அமைப்புகள் மூலம் பல்வேறு திட்டங்களுக்குச் செலவிடப்படுகின்றது. மத்திய மாநில அரசுகளின் நிதியுதவியுடன் வேலைவாய்ப்பு உறுதித் திட்டம், ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டம், இந்திரா வீட்டுவசதித்திட்டம் போன்ற திட்டங்கள் நடைமுறைப் படுத்தப்படுகின்றன.

உள்ளாட்சி அமைப்புகள் மூலம் நிறைவேற்றப்படும் இந்த வேலை வாய்ப்புத் திட்டங்களால், கிராமப்புற விவசாயத் தொழிலாளர்கள், கூலி வேலை செய்பவர்கள், நிலமற்ற ஏழை எளியவர்கள் பெருவாரியாகப் பயன்பெறமுடியும்.

### பாதுகாக்கப்பட்ட குடிநீர்

பாதுகாக்கப்பட்ட குடிநீர் வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதற்கென்றே இந்த ஆண்டு ரூ.450 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. தமிழகத்தில் வறட்சியால் பாதிக்கப்பட்டுள்ள மாவட்டங்களிலும், குடிநீர்த் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ள பல பகுதிகளிலும் குடிநீர் வசதிகளைச் செய்து கொடுத்திட அரசு ஆவன செய்துள்ளது.

குடிநீர் வசதியற்ற 154 குடியிருப்புகளுக்கு இந்த ஓராண்டில் குடிநீர் வசதி செய்துதரப்பட்டுள்ளது. வரும் ஐந்தாண்டுத் திட்டக் கால இறுதிக்குள் அனைத்து ஊரகக் குடியிருப்புகளுக்கும் குறைந்தபட்சம் நபர் ஒருவருக்கு நாளொன்றுக்கு சராசரி 40 லிட்டர் அளவு பாதுகாக்கப்பட்ட குடிநீரை வழங்குவதற்கான ஏற்பாடுகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. சென்ற ஆண்டு, 2,700-க்கு மேற்பட்ட விசைப்பம்புகள் மக்களுக்குப் பயன்படும் வகையில் பழுது பார்க்கப்பட்டுள்ளன.

சில இடங்களில் மின்விசைப் பம்புகள், கைப்பம்புகள் ஆகியவற்றில் சிறுசிறு பழுதுபார்க்கும் பணிகளில் கூட மிகவும் காலதாமதம் ஏற்பட்டு, மக்களுக்குக் குடிநீர் வசதிகள் கிடைப்பதில் பிரச்சினைகள்

தோன்றுவதாகக் கூறப்படுகின்றது. மாவட்ட ஆட்சியர்கள் இதுபோன்ற பிரச்சினைகளுக்கு முன்னுரிமை தந்து, முனைப்புடன் செயல்பட வேண்டும்.

### நலிந்தோர் நலன்

நலிந்த பிரிவினருக்கான நலத் திட்டங்களைத் தீட்டுவதில் இந்த அரசு எப்போதுமே சிறப்புக் கவனம் செலுத்தி வருகிறது என்பதையும் பலராலும் பாராட்டப்பெற்றுள்ள பின்வரும் நல்வாழ்வுத் திட்டங்கள் இந்த அரசால் உருவாக்கப்பட்டவை தாம்!

1967-68ஆம் ஆண்டில் சிறப்பான மகளிர் மன்றங்களுக்கு ஊக்கத் தொகை வழங்கும் திட்டம்.

1968ஆம் ஆண்டில் தொண்டு நிறுவனங்கள்/சேவை இல்லங்கள் நடத்த மானியம் வழங்கும் திட்டம்.

1971ஆம் ஆண்டில் தொழுநோய் இரவலர்கள் மறுவாழ்வு இல்லத் திட்டம்.

1972ஆம் ஆண்டில் கண்ணொளி வழங்கும் திட்டம்.

1973ஆம் ஆண்டில் கை ரிக்ஷாவை அகற்றி சைக்கிள் ரிக்ஷா வழங்கும் திட்டம்.

1974-75ஆம் ஆண்டில் பணிபுரியும் பெண்களுக்கு விடுதிகள் கட்ட தொண்டு நிறுவனங்களுக்கு மானியம் அளிக்கும் திட்டம்.

1975ஆம் ஆண்டில் ஆதரவற்ற சிறுவர்களுக்கான கருணை இல்லம் அமைக்கும் திட்டம்.

டாக்டர் தர்மாம்பாள் அம்மையார் நினைவு விதவை மறுமண நிதி உதவித்திட்டம்.

1989-90 மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவு திருமண உதவித்திட்டம்.

அதே ஆண்டில் முத்துலெட்சுமி ரெட்டி அம்மையார் நினைவு மகப்பேறு உதவித்திட்டம்.

அஞ்சுகம் அம்மையார் நினைவு கலப்புத் திருமண உதவித்திட்டம்.

வறுமைக்கோட்டிற்கு கீழே உள்ள அனைவருக்கும் இலவச வேட்டி சேலை வழங்கும் திட்டம்.

இந்தத் திட்டங்களை எல்லாம் செயல்படுத்துவதில் மாவட்ட ஆட்சித் தலைவர்களுடைய நேரடிக்கவனம் தேவை என்பதை வலியுறுத்த விரும்புகிறேன்.

சமூக நலத் திட்டங்களைச் செயல்படுத்துவதில் எவ்வித முறைகேடுகளும் நிகழாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். மாவட்டங்களில் இத்தகைய திட்டங்களைச் செயல் படுத்துவதற்குப் பொறுப்பாக உள்ள சமூக நலத்துறை அலுவலர்களைக் கண்காணித்து, முறைகேடுகள் ஏதும் நடைபெறாமல் பார்த்துக்கொள்ள வேண்டியது மாவட்ட ஆட்சித் தலைவர்களின் பொறுப்பாகும்.

### நமக்கு நாமே!

"நமக்கு நாமே" எனும் திட்டத்தைப் பற்றி இந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையில் குறிப்பிட்டிருந்தேன்.

கிராமத்திலே ஒருங்கிணைந்த மனித ஆற்றலை உருவாக்கி, அரசின் உதவிக்கரத்தைக் கொண்டு அந்தக் கிராமத்தின் அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றிக் கொள்ளும் வகையில் "நமக்கு நாமே" என்ற திட்டம் செயற்படுத்தப்பட இருக்கிறது. பஞ்சாயத்துராஜ் சட்டத்திலே கிராமச் சபைகள் மிக முக்கியமான இடத்தைப் பெறுகின்றன.

ஊராட்சியில் உள்ள வாக்காளர்கள் ஒன்றுகூடி "ஊர்மக்கள் மன்றம்" ஒன்றை அமைத்துக்கொள்ள வேண்டும். இரண்டு மாதத்திற்கு ஒரு முறை அந்த மன்றம் கூடி அந்த ஊரினுடைய தேவைகளையும் பிரச்சினைகளையும் விவாதித்து எந்தெந்தத் திட்டங்களை நிறை வேற்றலாம் என்பவைகளையெல்லாம் வரையறுப்பதோடு அந்தத் திட்டங்களை நிறைவேற்றுவதிலும் அந்த மக்களே பங்கு பெற வேண்டும். இதுதான் "நமக்கு நாமே திட்டம்".

இத்திட்டத்தை வெற்றிபெறச் செய்வதற்கான முயற்சிகளில், அரசு அதிகாரிகள் தங்களை ஈடுபடுத்திக் கொண்டு, இத்திட்டம் வெற்றி அடைந்திட ஒத்துழைக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். பயிற்சியிலுள்ள இரண்டு இளம் அரசு அலுவலர்கள் அண்மையில் என்னைச் சந்தித்து தாங்கள் சென்று வந்த இரண்டு கிராமங்களில் உள்ள நிலையை நேரில் விளக்கியதோடு இந்த "நமக்கு நாமே" திட்டத்தை கிராம மக்கள் வரவேற்கத் தயாராக இருக்கிறார்கள் என்றும் தெரிவித்தார்கள்.

ஒவ்வொரு பணியையும் நிறைவேற்றிட ஒரு செயல்முறைத் திட்டத்தைத் (Action Plan) தயாரித்து, அதன்படி திட்டப் பணிகளை விரைந்து முடித்திட நடவடிக்கைகள் மேற்கொள்ளப் படவேண்டும். நில மாற்றம் செய்வதில் காலதாமதம், நிலம் ஒப்படை செய்வதில் கால தாமதம், கையகப்படுத்துவதில் காலதாமதம், பிற துறைகளில் ஒப்புதல் கிடைப்பதில் காலதாமதம் என்ற நிலையெல்லாம் மாற வேண்டும். ஒவ்வொரு துறையும் மற்றொரு துறையோடு ஒருங்கிணைந்து செயலாற்ற வேண்டும். துறைகளுக்கு இடையே உள்ள வேறுபாடுகள் திட்டப் பணிகளை விரைந்து நிறைவேற்றுவதற்கு இடையூறாய் அமைந்திடக் கூடாது.

### பணிகளை விரைவுபடுத்திட...

திட்டப் பணிகளை நிறை வேற்றும்போது, எந்தத் துறையிலாவது முன்னேற்றம் இல்லாமல் சுணக்கம் காணப்பட்டால் அதுகுறித்து அத்துறை அலுவலருக்கு அறிவுரை கூறிப் பணிகளை விரைவுபடுத்திட வேண்டும். மேலும், 'முதலமைச்சர் வளர்ச்சிப் பணி கண்காணிப்புக் குழு'விற்கும் தகவல் தெரிவிக்க வேண்டும்.

தவறு செய்பவர்கள் யாராக இருந்தாலும், அவர்கள் மீது தயவு தாட்சண்யம் இன்றி நடவடிக்கை எடுத்து தண்டனை வழங்கப்பட வேண்டும் என்பதில் காவல்

துறையினர் உறுதியுடன் செயல் பட்டாக வேண்டும்.

அண்மைக் காலமாய்த் தவறான வழி காட்டுதல்கள் காரணமாகத் தென் மாவட்டங்களில் சாதிகளின் பெயரால் இளைஞர்கள் உணர்ச்சி வசப்பட்டு, தங்களுக்குள் இழைத்துக் கொள்கிற வன்முறைகளை எண்ணும்போது தமிழ்ச்சமுதாயத்தின் மீது ஆழ்ந்த அக்கறை கொண்டுள்ள எவரையும் அது வேதனைப்படுத்தாமல் இருக்க முடியாது.

மாவட்டங்களைப் பொறுத்தவரை அந்தந்த மாவட்ட ஆட்சியாளர்கள்தாம் அரசின் பிரதிநிதிகளாக மக்களால் கருதப்படுகிறார்கள். எனவே, மாவட்ட ஆட்சியர்கள் தத்தம் மாவட்டங்களில் பதற்றத்திற்குள்ளாகின்ற பகுதிகளை அடையாளம் கண்டு, அடிக்கடி பார்வையிட்டு, அமைதிக் குழுக்களை அமைத்து அப்பகுதிகளில் வாழும் மக்களிடையே பாதுகாப்பையும் நல்ல நம்பிக்கையையும் ஏற்படுத்திட வேண்டும். மாவட்டக் காவல் கண்காணிப்பாளர், அப்பகுதிகளில் ரோந்துப் பணிகளுக்கு ஏற்பாடு செய்து கண்காணிக்க வேண்டும்.

### காவல்துறைப் புகார்

காவல் நிலையத்திற்கு வருபவர்கள் ஏதோ ஒரு வகையில் பாதிக்கப்பட்டு, பாதுகாப்பு உதவி நாடி வருபவர்களாகத்தான் இருப்பார்கள். அவர்களிடம் பரிவு காட்டி-அவர்கள் தரும் புகார் ஒவ்வொன்றையும் பதிவு செய்து, அவற்றின் மீது முறையான நடவடிக்கைகள் எடுக்கப்படுவதன் மூலம் மக்களிடையே பாதுகாப்பு உணர்வு வளர்க்கப்படவேண்டும்.

சில இடங்களில் சிலர் தரும் வழக்குகளைப் பதிவு செய்வதே இல்லை எனும் குற்றச்சாட்டுகள் அடிக்கடி வருகின்றன. இத்தகைய குற்றச்சாட்டுகள் தடுக்கப்பட்டாக வேண்டும். இதன் பொருட்டு, பெறப்படும் புகார் அனைத்தையும் பதிவு செய்து அதற்கு அடையாளமாக ஒப்புதல் அட்டை ஒன்றைப் புகார் செய்தவர்க்கு வழங்கிட வேண்டும் என்றும், ரெயில் மற்றும் பேருந்தில் பயணம் செய்யும்போது ஏற்படுகிற குற்றங்கள் குறித்து புகார் மனுக்களை பொதுமக்கள் எந்தக் காவல் நிலையத்தில் கொடுத்தாலும், அங்கே பெற்றுக்கொள்ள வேண்டுமென்றும், புகார் மனு கொடுக்கப்பட்ட காவல்நிலையத்திற்கு அதிகாரம் இல்லாமல் இருந்தால்-எந்த காவல் நிலையத்திற்கு அதிகாரம் உள்ளதோ, அந்தக் காவல் நிலையத்திற்கு அந்தப் புகார் மனுவை அனுப்பி வைக்க வேண்டியது, புகார் மனுவைப் பெற்றுக்கொண்ட காவல் நிலையத்தின் பொறுப்பு என்றும் அறிவுரைகளை அரசு அண்மையில் வழங்கியுள்ளது.

காவல்துறை, பொதுமக்களின் நண்பனாக விளங்கவேண்டும் என்பதும், பொதுமக்களைக் கண்ணியமாக நடத்திட வேண்டும் என்பதும், காவல் நிலையம் வருகின்ற அனைவருமே குற்றவாளிகள் என்ற வகையில் நடத்தப்படக்கூடாது என்பதும் இந்த அரசின் அணுகுமுறையாகும். இதை உணர்ந்து, உதவிகோரி காவல் நிலையத்திற்கு வரும் பொதுமக்களை ஒழுங்காக நடத்தி, வேண்டிய உதவிகளைச் செய்திட வேண்டுமென்பது காவல்துறையினரின் கடமையாகும்.

அதேபோல், காவல்துறை அலுவலர்கள் - எல்லா மட்டத்திலேயும் - தங்களைப் பொதுமக்கள் எளிதில் அணுகக்கூடிய வகையில் பணியாற்றிட வேண்டும் என்பதும், அதிலேயும் குறிப்பாக மாவட்டங்களில் பணிபுரிகின்ற காவல்துறை அதிகாரிகள் காவல் துறை சம்பந்தப்பட்ட கோரிக்கைகளைக் கேட்டறிந்து அவற்றை உடனுக்குடன் களைவதற்கு உதவுபவர்களாக இருக்க வேண்டும்.

ஒவ்வொரு திங்கட்கிழமை தோறும், காவல்துறை கண்காணிப்பாளரும், சரகக் காவல்துறைத் துணைத் தலைவரும் (D.I.G.) தலைமையிடத்தில் பொதுமக்களைச் சந்திக்க வேண்டுமென்று, ஏற்கனீவே அரசு ஆணை உள்ளது. இதுமட்டுமல்லாது, காவல்துறை அதிகாரிகள் தலைமை இடத்தில் இருக்கின்ற மற்ற நாட்களிலும், வெளி ஊர்களுக்கு முகாம் செல்கின்ற போதும் பொதுமக்கள் குறைகளைக் கேட்டறிந்து, அவற்றை உடனுக்குடன் களைய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

சட்டம்-ஒழுங்கைப் பராமரிக்கின்ற முக்கியமான பணியில் வருவாய்த் துறையும் காவல்துறையும், ஒருங்கிணைந்து செயல்பட வேண்டியது மிகமிக அவசியம்.

### கண்ணியமான அணுகுமுறை

காவல்துறை அலுவலர்கள் நான் ஏற்கெனவே குறிப்பிட்டதைப்போல, மக்களுக்கு நண்பர்களாக இருப்பதோடு, நல்ல வழிகாட்டியாகவும் இருக்க வேண்டும். நல்ல குணநலன்களும், கட்டுப்பாடு மிக்க கடமை உணர்வும் கொண்டவர்களாகக் காவல்துறை அலுவலர்கள் இருந்தால்தான், எந்த விமர்சனத்திற்கும் 'ஆளாகாமல் அவர்களால் குற்றம் புரிவோர் மீது தக்க நடவடிக்கை எடுக்க முடியும். எனவே காவல்துறை அலுவலர்களுக்குக் கண்ணியமான அணுகுமுறையும், கட்டுப்பாடான செயல்முறையும் மிக அவசியம் என்பதை நான் வலியுறுத்த விரும்புகிறேன்.

கள்ளச் சாராயத்தை ஒழிப்பதை ஒரு மக்கள் இயக்கமாக (Mass Movement) நடத்த வேண்டும். அதற்கு மாவட்ட ஆட்சியரும், மாவட்ட காவல் துறை அதிகாரியும் முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும். கள்ளச் சாராயத்தை ஒழிக்க மக்களே முன்வரும்போது அவர்களுக்கு முழு ஒத்துழைப்பு கொடுத்து சமுதாயத்திற்காக நடத்தப்படும் அந்த நல்ல பணியினை ஊக்குவிக்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

கள்ளச் சாராயம் காய்ச்சுபவர்கள், விற்பவர்கள் யாராக இருந்தாலும், அந்த அளவுக்குச் செல்வாக்குப் பெற்றவர்களாக இருந்தாலும் அவர்கள் மீது அச்சமின்றி நடவடிக்கை எடுக்கின்ற அதிகாரிகளை இந்த அரசு உரிய முறையில் பாராட்டும். ★

# மரமும் திறமும்!

ஒட்டடைக் குச்சி போன்ற உருவமைப்போடு, விண்தொடும் அளவுக்கு ஓங்கி நிற்கிறது பனைமரம். அதன் நிமிர்ந்த தோற்றமே அதற்கொரு கம்பீரத்தை - அகம்பாவத்தை - ஆணவத்தைக் கொடுக்கிறது.

ஆற்றங்கரையிலே நிற்கின்ற அந்தப் பனைமரம், கீழே தன் காலடியில் இளைத்துப்போய் நிற்கின்ற சின்ன நாணலைப் பார்த்துக் கேலி செய்து சிரிக்கிறது; ஆற்று நீரின் வேகத்தைக் கூடத் தாளாமல் நடுங்கிக் கொண்டிருக்கிற நாணல் வாயடைத்துப் போகிறது.

ஒருநாள் பலத்த புயலடிக்கிறது. நிமிர்ந்து நின்ற பனைமரம் வேரோடும் - வேரடி மண்ணோடும் கீழே சாய்ந்து விடுகிறது!

காற்றடிக்கும் திசையிலெல்லாம் வளைந்து கொடுத்த மெல்லிய நாணல், அந்தப் புயலுக்குப் பின்னாலும் வீழ்ந்து விடாமல், எப்போதும்போல அடக்கமும் ஒடுக்கமுமாக நின்று, அனுதாபத்தோடு அந்தப் பனைமரத்தைப் பார்க்கிறது. 'திமிரடித்தனத்தின் முடிவு இப்படித்தான் இருக்கும்!'.

என்னதான் வலியவர்களானாலும் எளியவர் களைக் கேலி பேசக்கூடாது!

என்னதான் உயர்ந்தவர்களானாலும் தாழ்ந்த வர்களை ஏளனம் செய்யக்கூடாது!

அகம்பாவமும் ஆணவமும் ஒருவரை வீழ்த்திவிடும்!

அடக்கமும் பணிவுமே ஒருவரை நிமிரச் செய்திடும்!

-இந்தக் கருத்துடைய பாடலொன்றை நாமெல்லாம் பாலபாடத்திலே படித்திருக்கிறோம். அதேபோல், நமக்கெல்லாம் பாடம் புகட்டும் முத்தான பாடல் ஒன்றினை-

'வெற்றிவேற்கை' மூலம் அதிவீரராம பாண்டியனார் தம் பேரப்பிள்ளைகளாகிய நமக்கெல்லாம் சொத்தாக விட்டுச் சென்றிருக்கிறார்.

அந்தப் பாடலின் கருப்பொருள்-

**ஒரு பனை மரம்;**
**ஒரு ஆல மரம்!**

கரிய நிறத்தோடு, வாட்டசாட்டமாக உள்ள, ஒருவனை-'ஆளைப்பாரு நனைந்த பனை மர மாட்டம்!' என்று கேலி செய்வது தென்மாவட்ட மக்கள் வழக்கம்.

அப்படியொரு பனைமரம் நிற்கிறது, வேகாத வெய்யிலில் அவ்வழியே வருகின்ற கவிஞர் அம்மரத்தின் தலை நிழலில் களைப்பாற நிற்கிறார்; சிறிது நேரந்தானிருக்கும். அந்த நிழல் நகர்ந்து விடுகிறது. அவரும் அதற்கேற்ப நகர்ந்து கொள்கிறார்!.

அடுத்த சிறிது நேரத்தில் மீண்டும் அந்த நிழல் சூரிய ஒளிக்கேற்ப விலகிவிடுகிறது; புலவர் பெருமானுக்கோ எரிச்சலாகி விடுகிறது!

பரட்டைத் தலையோடு நிற்கும் அந்தப் பனை மரத்தைக் கழுத்து வலிக்குமளவுக்கு நிமிர்ந்து பார்க்கிறார்; ஏளனச் சிரிப்போடு கீழே பார்க்கிறார்.

ஒரு பனங்கொட்டை கரேலென்று - கிடக்கிறது; கையிலெடுக்கிறார் - 'நெடுநெடுவென நிமிர்ந்து நிற்கும் பனைமரத்தின் விதைதான் எத்தனைப் பெரிதாக இருக்கிறது! இருந்து என்ன பயன்...? இந்த ஒரு மரத்தால் என் ஒருவனுக்கே நிரந்தர நிழல் தரமுடியவில்லையே!

பெருமூச்சால் ஏறி இறங்குகிறது நெஞ்சு. அடுத்த வினாடியே அவருடைய சிந்தனை ஆல மர மொன்றைக் கற்பனை செய்து பார்க்கிறது. மீனின் சினையை விடச் சிறிய விதைதான் ஆலமரத்திற்கு! விழுதுக் கரங்களை ஊன்றி விரிந்து நிற்கும் அந்தக் கனத்த மரத்தின் படர்ந்த நிழலில்-தமது குதிரைப் படை, தேர்ப்படை, யானைப் படையோடு ஒரு மன்னவனே தங்கி இளைப்பார முடியுமே!...

பனை விதை பெரிது-அதன் மூலம் வளரும் மரம் தரும் நிழல் கொடுக்கும் பயன் சிறிது! ஆலின் விதை சிறிது - அதன் மூலம் வளரும் மரம்தரும் சுகமோ பெரிது!

-இவ்வாறு இரண்டையும் ஒப்பிட்டு பார்த்து உவகை கொள்ளுகிறது அவருடைய மனம்; அந்த உவகை, ஒப்பற்றதோர் கவிதையாக வெளிப்படுகிறது; இதோ அந்த இன்தமிழ்ப் பாடல்;

***'தேம்படு பனையின் திரள்பழத் தொருவிதை***
***வான்உற ஓங்கி வளம்பெற வளரினும்***
***ஒருவர்க் கிருக்க நிழல்ஆ காதே!***
***தெள்ளிய ஆலின் சிறுபழத் தொருவிதை***
***தெண்ணீர்க் கயத்துச் சிறுமீன் சினையினும்***
***நுண்ணிதே ஆயினும் அண்ணல் யானை***
***அணிதேர்ப் புரவி ஆட்பெரும் படையொடு***
***மன்னர்க் கிருக்க நிழலா கும்மே!'***

★★★

'பெண்ணைக் கண்டால் பேயும் இரங்கும்' என்பதுண்டு; அதைக் கேட்கும் மங்கையர் சினப்பதுண்டு-வெகுண்டு சிவப்பதுண்டு!



அப்படிப் பேய் இரங்குமோ இரங்காதோ, நமக்குத் தெரியாது! வெள்ளையாகச் சொன்னால் - அதற்குச் சரியான பொருள் என்ன - புரியாது!

ஆனால், பூத்துக் குலுங்கிடும் ஒரு மரம்; முன்னழகும் பின்னழகும், முத்தான சொல்லழகும் கண்ணழகும் கழுத்தழகும் கட்டான உடல் அழகும் கொண்ட கன்னியொருத்தியின் ஸ்பரிசத்திற்காகத் தானே தலை தாழ்ந்து விடுகிறதாம்!

இதயம் வருடும் இனிய அந்தக் காட்சியினை நமக்குப் படம் பிடித்துக் காட்டுகிறது நளவெண்பா!

வசீகரம் மிக்க வண்ணப்பூக்கள்-இலைகளைவிட அதிகம் பூத்துள்ள தலையினை உடைய மரம் அது!

மாலை வேளை; சற்று தூரத்திலே தன் மனதுக்கினியவள் வருவதைக் காண்கிறான் அந்தக் காளை!

'ஒரு பூங்கொத்தை ஒடித்துக் கொடுத்தால், காதல் மணக்கும் நம் எண்ணமும் இதயமும் அவளால் இன்னும் உணரப்படுமே! நெஞ்சின் நெருக்கம் மேலும் வலுப்படுமே!' - இப்படி நினைத்தது அவன் மனம்.

அந்தக் கிளைநோக்கித் தாவினான்; எட்ட வில்லை; அவன் அவசரத்திற்குப் பூங்கொத்து கிட்டவில்லை!

மறுமுறையும் தாவினான்; மீண்டும் அதே நிலை!

இதற்குள் அவளே அவனருகே வந்துவிட்டாள்; அவனோ, எண்ணியது முடியவில்லையே என்று நொந்துவிட்டான்!

அவனைப் புரிந்து கொண்டு, மெள்ளச் சிரித்தது அந்தப் பருவநிலா! வெட்கித்துப்போய் நிற்கும் அவனைப் பார்த்தாள் அவள்; பிறகு, அந்த மரத்தின் கிளையைப் பார்த்தாள். காந்தளாகச் சிவந்திருந்த தனது மென் கரத்தை அதைநோக்கி ஏந்தினாள்.

என்ன விந்தை! மலர்கள் பூத்துக் குலுங்கிய அந்தக் கிளை அவளுக்கு எட்டும்படி பணிந்தது; தானே வளைந்தது! அது மட்டுமல்ல; நோய் செய்யும் பார்வைக் காரியான பஞ்சின் மெள்ளடிப் பாவையின் பாதத்தையே தொடுமளவில் தாழ்ந்ததாம் அது!

நளவெண்பா நாயகன் மெச்சிடும் பூச்சொரியும் அந்த ஆச்சரியப் பாடல் இதோ;

***பாவையர் கைதீண்டப் பணியாதார் யாவரே?***
***பூவையர்கை தீண்டலுமப் பூங்கொம்பு - மேவியவர்***
***பொன்னடியில் தாழ்ந்தனவே பூங்குழலாய் காணென்றான்***
***மின்னெடுவேற் கையான் விரைந்து!***

**- பி.எல்.இராசேந்திரன்**

# மரங்களைப் பாடுவேன்

- கவிஞர் வைரமுத்து

வாரும் வள்ளுவரே
மக்கட் பண்பில்லாதவரை
என்ன சொன்னீர்?
மரம் என்றீர்
மரம் என்றால் அவ்வளவு
மட்டமா?

❒

வணக்கம் ஔவையே
நீட்டோலை வாசியான்
யாரென்றீர்?
மரம் என்றீர்
மரம் என்றால் அத்தனை இழிவா?

❒

விண்மீனுக்குத் தூண்டில்போடும்
கிளைகள்
சிரிப்பை ஊற்றிவைத்த
இலைகள்
உயிர் ஒழுகும்
மலர்கள்
மனிதன் தரா ஞானம்
மரம் தரும் எனக்கு

❒

மனிதன் தோன்றுமுன்
மரம் தோன்றிற்று
மரம் நமக்கண்ணன்
அண்ணனைப் பழிக்காதீர்

❒

மனித ஆயுள்
குமிழிக்குள் கட்டிய கூடாரம்
மரம் அப்படியா...?
வளரும் உயிர்களில்
ஆயுள் அதிகம் கொண்டது
அதுவேதான்



பக்கத்தில் யாரது?
பாரதிதானே
பாஞ்சாலி மீட்காத
பாமரரை என்னவென்றீர்?
நெட்டை மரங்கள் என்றீர்
மரங்களென்றால் அவ்வளவு கேவலமா?

❒

மரம்
சிருஷ்டியில் ஒரு சித்திரம்
பூமியின் ஆச்சரியக்குறி
நினைக்க நினைக்க
நெஞ்சூறும் அனுபவம்

❒

மனித வளர்ச்சிக்கு
முப்பது வந்தால்
முற்றுப்புள்ளி
மரம்
இருக்கும்வரை பூப்பூக்கும்
இறக்கும்வரை காய்காய்க்கும்

❒

வெட்டி நட்டால்
கிளை மரமாகுமே
வெட்டி நட்டால்
கரம் உடம்பாகுமா?

மரத்தை அறுத்தால்
ஆண்டு வளையம்
வயது சொல்லும்
மனிதனை அறுத்தால்
உயிரின் செலவைத்தான்
உறுப்பு சொல்லும்

❐

மரத்திற்கும் வழுக்கைவிழும்
மறுபடி முளைக்கும்
நமக்கோ
உயிர் பிரிந்தாலும்
மயிர் உதிர்ந்தாலும்
ஒன்றென்றறிக

❐

மரங்கள் இல்லையேல்
காற்றை எங்கேபோய்ச்
சலவை செய்வது?

❐

மரங்கள் இல்லையேல்
மழைக்காக எங்கேபோய்
மனுச் செய்வது?

❐

மரங்கள் இல்லையேல்
மண்ணின் மடிக்குள்ளே
ஏதப்பா ஏரி?

❐

பறவைக்கும் விலங்குக்கும்
மரம்தரும் உத்தரவாதம்
மனிதர்நாம் தருவோமா?

மனிதனின் முதல் நண்பன்
மரம்

மரத்தின் முதல் எதிரி
மனிதன்

ஆயுதங்களை மனிதன்
அதிகம் பிரயோகித்தது
மரங்களின் மீதுதான்

❐

உண்ணக்கனி-ஒதுங்க நிழல்
உடலுக்கு மருந்து-உணர்வுக்கு விருந்து
அடையக்குடில்-அடைக்கக் கதவு
அழகு வேலி-ஆடத்தூளி
தடவத் தைலம்-தாளிக்க எண்ணெய்
எழுதக் காகிதம்-எரிக்க விறகு

மரந்தான்
மரந்தான்
எல்லாம் மரந்தான்!

மறந்தான்
மறந்தான்
மனிதன் மறந்தான்!

❐

பிறந்தோம்
தொட்டில்
மரத்தின் உபயம்

நடந்தோம்
நடைவண்டி
மரத்தின் உபயம்

எழுதினோம்
பென்சில் - பலகை
மரத்தின் உபயம்

மணந்தோம்
மாலை சந்தனம்
மரத்தின் உபயம்

புணர்ந்தோம்
கட்டில் என்பது
மரத்தின் உபயம்

துயின்றோம்
தலையணைப் பஞ்சு
மரத்தின் உபயம்

நடந்தோம்
பாதுகை ரப்பர்
மரத்தின் உபயம்

இறந்தோம்
சவப்பெட்டி பாடை
மரத்தின் உபயம்

எரிந்தோம்
சுடலை விறகு
மரத்தின் உபயம்

மரந்தான்
மரந்தான்
எல்லாம் மரந்தான்!

மறந்தான்
மறந்தான்
மனிதன் மறந்தான்!

❐

மனிதா

மனிதனாக வேண்டுமா?
மரத்திடம் வா!

ஒவ்வொரு மரமும்
போதிமரம்.

"இந்தப் பூக்கள் விற்பனைக்கல்ல"
என்ற நூலிலிருந்து.
வெளியீடு : சூர்யா இலக்கிய வெளியீடு
4வது குறுக்குத் தெரு, சென்னை-24.

# மரம் வளர்ப்பும் அதனால் ஏற்படும் பயன்களும்

“எந்த வகை மரங்களுக்கு ஊறு விளைவித்தாலும் அபராதம் விதிக்க வேண்டும். அந்த மரம் பயன்படும் தன்மைக்கு ஏற்ப அபராதம் அதிகரித்து இருக்க வேண்டும். இதுவே விதியாகும். ஒவ்வொரு வகை மரமும் ஒவ்வொரு வகை பயன் உள்ளதாகும்”.

*- மனுதர்ம சாஸ்திரம்*

ஆதி மனிதன் விலங்குகளைப் பழக்கப்படுத்தி விவசாயத்தை விரிவாக்கம் செய்யும் பொழுதே காடுகள் அழியத் தொடங்கிவிட்டன. மேலும் மனிதன் “நாகரீகம்” ஆனவுடன் “வளர்ச்சி” என்ற பெயரில் லாப நோக்கத்திற்காக வனங்கள் அழிக்கப்பட்டு வந்தன.



வனங்கள் என்பது மரங்களோடு மட்டுமல்லாமல் காளான்கள், செடி கொடிகள் மூலிகைகள் போன்ற பல்லுயிர்களும் செறிந்த அமைப்பாகும். வனப் பிரதேசத்தின் சீரழிவைச் சீரமைக்க முடியாது என்று தெரிந்திருந்தும் வனங்கள் அழிவதைத் தடுக்க இயலாதது வருந்தத் தக்கதாகும்.

பண்டைய நாட்களில் பரந்து விரிந்துள்ள ஓர் ஆலமரத்தின் அல்லது அரச மரத்தின் அல்லது மரங்கள் அடர்ந்த நிழலார்ந்த தோப்புகளின் அடியில்தான் கிராமப் பஞ்சாயத்தும், கிராமச் சந்தைகளும் திருவிழாக்களும் நடைபெற்றன. கிராமக் குல தெய்வங்களான ஐயனார், பிடாரி போன்ற தெய்வங்கள் கிராமக் கோடியில் ஏதாவது ஒரு தோப்பில்தான் கொலு வீற்றிருந்தன. நாளடைவில் நாகரிக வளர்ச்சி காரணமாகச் சாலைவசதிகள், கட்டுப்பாடற்ற நகர்மயமாக்குதல், எரிவிறகுத் தேவைகள், தொழிற்சாலை மயமாக்கல் போன்றவற்றால் மரங்கள் வெட்டப்பட்டுக் கட்டடங்களாகவும், சாலைகளாகவும் கோயில்களாகவும் இன்னபிற தேவைகளாகவும் மாற்றப்பட்டு மனிதச் சமுதாயத்திற்கு உற்ற துணையாக இருந்துவரும் மரங்கள் அழிக்கப்பட்டு வருகின்றன.

இன்றைய தினம் மரங்கள் பணம் காய்க்கும் பொருளாக விளம்பரம் செய்யப்பட்டு தனியார் நிறுவனங்களால் பொதுமக்களைக் கவர்ந்திழுக்கும் பொருளாக மாற்றப்பட்டு ஆங்காங்கே ஓரினப் பயிர்கள் தோட்டங்களாக உருவெடுத்து வருகின்றன. இவற்றில் பொதுமக்கள் முதலீடு செய்யுமுன் அந்நிறுவனங்களின் செயல்பாடுகளைப் பொதுமக்கள் நன்கு அறிந்துகொண்டு அதன்பிறகு முதலீடு செய்வது புத்திசாலித்தனமாகும். மேலும் மரங்கள் மீது முதலீடு செய்ய நிறுவனங்களை நாடுவதைத் தவிர்த்து தனிநபர் மரங்களை வீடுகளிலும் விவசாய நிலங்களிலும் நட்டுப் பயன்பெறுவது சாலச்சிறந்தது.

நாட்டின் இயற்கை அமைப்பைக் கவினுறு பூம்பொழிலாகவும், நிழல் மரச் சோலைகளாகவும் மாற்றும் முயற்சியாக அன்றைய இந்தியப் பேரரசின் விவசாய அமைச்சர் திரு.கே.எம். முன்ஷி அவர்களால் 1950-ஆம் ஆண்டு மரம் நடும் விழா அல்லது வன மகோத்சவம் தேசியப் பெருவிழாவாகத் தொடங்கப்பட்டு 47 ஆண்டுகளுக்குப் பிறகும், நாம் மரங்கள் அழிக்கப்பட்டு வரும் வேகத்திற்கு ஈடாக மரக்கன்றுகளை நட்டபாடில்லை. பொதுமக்கள் விழிப்புணர்வு கொண்டு மரம் நடும் இயக்கத்தைப் பேரியக்கமாகவும், மக்கள் தொண்டாகவும் கருதி வருங்காலச் சந்ததியினர் வளமுடன் வாழ வழிசெய்ய வேண்டும்.

இந்தியாவின் சுற்றுச்சூழல் சமநிலையைப் பாதுகாக்கக் குறைந்தபட்சம் 33% மரங்களால் நிலப்பரப்பு மூடப்பட வேண்டும் எனச் சுற்றுச்சூழல் வல்லுநர்கள் கருதுகிறார்கள். ஆனால் தற்பொழுது 23% நிலப்பரப்பு மட்டுமே வனங்களாகவும் மரங்கள் நிறைந்த பகுதியாகவும் உள்ளது. அதிலும் 14.4% நிலப்பரப்பு மட்டுமே அடர்ந்த காடுகளும் மரங்களும் உள்ளடக்கிய பகுதியாகும் என விண்கோள் மூலம் எடுக்கப்பட்டு படங்களின் கணக்கெடுப்புகள் தெரிவிக்கின்றன. ஆனால் தமிழகத்தில் 17% நிலப்பரப்பு மட்டுமே வனங்களாகும். தமிழகத்தில் இயற்கைக் காடுகள் மேற்குத் தொடர்ச்சி மலையிலும் கிழக்குத் தொடர்ச்சி மலைப் பகுதிகளிலும் பெரும்பகுதி உள்ளன. இயற்கை வனப்பகுதிகளை நீக்கி எஞ்சி உள்ள சமவெளிப் பகுதிகளில் மரங்களைப் பெருமளவில் நட்டால்தான் 33% குறியீட்டை நாம் அடைய இயலும். சமவெளியில் மரங்களை நடும்பொழுது நமது தேவை, சுற்றுச்சூழல் சமநிலை, வருங்காலச் சேமிப்பு ஆகியவற்றைக் கருத்தில்கொண்டு இயற்கை வனங்களில் காணப்படும் பல்லுயிர்கள் செறிந்த அமைப்பாகச் சமவெளிகளை மாற்றவேண்டும்.

---

திரு **சி.கே. ஸ்ரீதரன்,** இ.வ.ப.,
திரு **ப.அ. மணி,** இ.வ.ப.,

ஊட்டி, கொடைக்கானல், ஏர்க்காடு, ஏலகிரி போன்ற கோடை வாசஸ்தலங்கள் சுற்றுலா அபிவிருத்தி என்ற பெயரில் கான்கிரிட் வனங்களாக மாறிவருவது வருந்தத்தக்கதாகும். கொல்லிமலை போன்ற சிறிய மலைகளில் அணைகள் கட்டுதல் என்ற பெயரில் அரிய மூலிகைகள் அழிந்துவிடும் அபாயத்தில் உள்ளன. கம்பம் பள்ளத்தாக்குப் பகுதிகளில் வறண்ட காற்றுடன் கூடிய மண் மழையால் விலை நிலங்கள் பாதிக்கப்படுகின்றன. எனவே பாலைவனங்கள் பரவுவதைத் தடுக்கவும், நிலத்தடி நீர் குறைவதைத் தடுக்கவும் மரங்களை அதிக அளவில் நட்டு மழைவளத்தைப் பெருக்கலாம்.

மரங்கள் மூலம் வருமானம் கிடைப்பதுடன் அவை ''இயற்கை'' வங்கியில் ''வைப்பு நிதியாக'' விளங்குகின்றன. மேலும் மரங்கள் நடுவது பூமித்தாய்க்கு நாம் செய்யும் உயர்ந்த அஞ்சலியாகும். மரங்களே உண்மையான யோகிகளாகும். மரங்களே தன்னலமற்ற பணிக்கு அடையாளங்களாகவும் விளங்குகின்றன.

ஒரு நாட்டின் வாழ்க்கைத் தரத்தைக் கணக்கிட அந்த நாட்டில் எந்த அளவு வெட்டுமரம் பயன்படுகிறது என்பதும் ஓர் அளவுகோளாகக் கொள்ளப்படுகிறது. உலகில் தனி நபர் ஒருவருக்கு ஜப்பான் நாடு 0.38 க.மீ., பிரான்ஸ் 0.45 க.மீ., பிரிட்டன் 0.53 க.மீ, அமெரிக்கா 0.80 க.மீ., ஆஸ்திரேலியா 2.14 க.மீ., கனடா 4.04 க.மீ., இந்தியா 0.04 க.மீ. என்ற அளவில் வெட்டுமரங்களைப் பயன்படுத்துகிறது. இந்தியாவில் தனியார் பயன்படுத்தும் வெட்டுமரத்தில் 70% விறகாக இருக்கிறது. முன்னேறிய நாடுகளுடன் ஒப்பிடுகையில் இது மிகவும் மோசமான நிலைமையாகும். போதிய அளவு விறகு கிடைக்காததால் இந்திய கிராமிய மக்கள் மாட்டுச் சாணத்தை எரிபொருளாகப் பயன்படுத்துகின்றனர். இந்தியாவில் ஆண்டுதோறும் 8 கோடியே 10 லட்சம் டன் அளவு சாணம் எரிபொருளாக எரிக்கப்படுகிறது.

இதனால் வயல்களில் எருவாகப் பயன்படும் உரம் வீணடிக்கப்படுவதுடன் உணவு உற்பத்தி குறையவும், யூரியா போன்ற இரசாயன உரங்கள் அதற்கு ஈடாகப் பயன்படுத்தப்பட்டும் வருகிறது. பெருமளவு உரங்கள் இறக்குமதியால் நாட்டின் அந்நியச் செலாவணி வீணாகிறது.

தென் மாநிலங்களில் குறைந்த வனப்பரப்பை உடையது தமிழகம் தான். இதனால் கடும் வறட்சியை நமது மாநிலம் அடிக்கடி சந்திக்க நேரிடுகிறது. அஸ்ஸாம் போன்ற மாநிலங்களில் வனப்பரப்பு அதிக அளவில் உள்ளதால் அங்கு 50 ஆண்டுகட்கு ஒருமுறை மட்டும் வறட்சி தாக்குகிறது. மேலும் மரங்களினால் மண்வளம் பாதுகாக்கப்படுவதுடன் மழையினால் ஏற்படும் நீரோட்டத்தால் மண் அரிமானம், மண்சரிவு இல்லாமல் பாதுகாக்கப்படுகிறது.

இந்தியாவில் ஆண்டுதோறும் 300 மில்லியன் கி.மீ.க்கு மேலாக மரம் எரிபொருளாகப் பயன்படுகிறது. இதில் பெரும்பகுதி வனங்களிலிருந்து பெறப்படுவதால் வனம் சீரழிந்து விடுகிறது. இதனைச் சரிசெய்ய இயற்கை வனத்திற்கு வெளியே எரிமரங்கள் உற்பத்தி செய்வதுடன், மாற்று எரிசக்தி வழிமுறைகளையும் நடைமுறைப்படுத்தவேண்டும்.

பூமிக்கோளத்தை, குளோரோ-புளோரோ கார்பன் போன்ற மாசு வாயுக்கள் விண்வெளி ஓசோன் படலத்தில் ஏற்படுத்திய ஓட்டையால் புற ஊதா கதிர்களின் தாக்குதலினின்று காப்பாற்ற, மரங்கள் நிறைந்த வனங்களில் மட்டுமேதான் முடியும், மரங்களை வெட்டுவதால், நச்சுக்காற்றுகள் பூமியை வெப்பமடையச் செய்வதுடன் பசுமை அகவிளைவை (Green House Effect) உருவாக்கி, அமில மழையை பூமியில் பெய்யச் செய்து உயிரினங்களுக்கு பலத்த சேதத்தை ஏற்படுத்துகின்றது. இதனைச் சரிசெய்ய பசுமை நிறைந்த வனங்களாலும் மரங்களாலும் தான் முடியும்.

தமிழகத்தின் மக்கள் வாழ்வில் ஏற்றம் பெற்றிட, ஒளிமயமான எதிர்காலத்திற்கும் ஒவ்வொரு குடிமகனும் தம்மால் இயன்ற மரக்கன்றுகளை நட்டு பாரதி கண்ட வலிமையான பாரதத்தை உருவாக்குவோம்!

*"பார்க்கும் மரங்கள் எல்லாம் நந்தலாலா! - உன்*
*பச்சை நிறம் தோன்றுதையா நந்தலாலா!"*

*- பாரதியார்*

ஒரு மரத்தை நட்டு வளர்க்கும்போது நீங்கள் மரத்தை மட்டும் வளர்க்கவில்லை.

| | | |
|---|---|---|
| நீங்கள் | உணவை | வளர்க்கிறீர்கள் |
| " | உடையை | வளர்க்கிறீர்கள் |
| " | வீட்டை | வளர்க்கிறீர்கள் |
| " | அறிவை | வளர்க்கிறீர்கள் |
| " | ஆரோக்கியத்தை | வளர்க்கிறீர்கள் |
| " | வேலைவாய்ப்பை | வளர்க்கிறீர்கள் |
| " | சேமிப்பை | வளர்க்கிறீர்கள் |
| " | எரிபொருளை | வளர்க்கிறீர்கள் |
| " | கால்நடைகளை | வளர்க்கிறீர்கள் |
| " | தொழிற்சாலையை | வளர்க்கிறீர்கள் |
| " | மண்வளத்தை | வளர்க்கிறீர்கள் |
| " | நீர்வளத்தை | வளர்க்கிறீர்கள் |
| " | வருவாயை | வளர்க்கிறீர்கள் |

நீங்கள் எதிர்காலத்தில் நம்பிக்கையை வளர்க்கிறீர்கள்!

இதைவிடச் சிறந்த பணி - மனதிற்கு நிறைவு தரும் பணி எதுவும் இல்லை! ★

# அது ஏன்?

- கவிஞர் வாலி

மரங்கள்
தமக்குள்
முனகிக்கொண்டன
இந்த மனிதர்கள்
நம்மைக் கொண்டு
பல
சிலுவைகளைச்
செய்து விடுகிறார்கள்
ஆனால்
தம்மைக் கொண்டு
அவர்களால்
இன்னமும்
ஓர்
ஏசுவைத்
தயாரிக்க
இயலவில்லையே.
அது ஏன்?



**"பொய்க்கால் குதிரைகள்"**
என்ற நூலிலிருந்து
வெளியீடு : கலைஞன் பதிப்பகம்
10, கண்ணதாசன் சாலை,
சென்னை - 17.

# இலக்கியத்தில் மரங்கள்



வேரல் வேலி வேர்கோட் பலவின்
சாரல் நாட! செவ்வியை ஆகுமதி
யாரஃது அறிந்திசி னோரே சாரல்
சிறுகோட்டுப் பெரும்பழம் தூங்கி யாங்கிவன்
உயிர்தவச் சிறிது காமமோ பெரிதே!

- குறுந்தொகை.

பூத்தாலும் காயா மரமுமுள; மூத்தாலும்
நன்கறியார் தாமும் நனியுளர் - பாத்தி
விதைத்தாலும் நாறாத வித்துள பேதைக்கு
உரைத்தாலும் தோன்றா துணர்வு.

- பழமொழி நானூறு.

வளையும்வேய் நிமிரும்; வளையா நெடுமரம்
கிளையுடன் கெடுமே கிளர்காற் றதனில்!

- மனோன்மணியம்.

மரத்தை மறைத்தது மாமத யானை
மரத்தின் மறைந்தது மாமத யானை
பரத்தை மறைத்தது பார்முதற் பூதம்
பரத்தின் மறைந்தது பார்முதற் பூதம்!

- திருமந்திரம்.

ஆற்றங் கரையின் மரமும் அரசறிய
வீற்றிருந்த வாழ்வும் பாழ்படும் - ஏற்றம்
உழுதுண்டு வாழ்வதற் கொப்பில்லை கண்டீர்
பழுதுண்டு வேறோர் பணிக்கு!

- ஔவையார்.

கானரணும் மலையரணும் கடலரணும்
சூழ்கிடந்த கலிங்கர் பூமி
தான்அரணம் உடைத்தென்று கருதாது
வருவதும்அத் தண்டு போலும்!

- கலிங்கத்துப்பரணி.

கட்டி யணைத்திடும் பெண்டிரும்
மக்களும் காலத்தச்சன்
வெட்டி முறிக்கும் மரம்போல்
சரீரத்தை வீழ்த்திவிட்டால்
கொட்டி முழக்கி அழுவார்
மயானம் குறுகியப்பால்
எட்டி அடிவைப்ப ரோஇறை
வாகச்சி ஏகம்பனே!

- பட்டினத்தார்.

நாக்கு உணருதின்னு நடுக்காடு போனாலும் - நீங்க
நாக்கிலிடும் பச்சைத்தண்ணி-எனக்கு
நடுக்காடு தீர்த்தமல்லோ!
பல்லு உணருதின்னு பழனிமலை போனாலும் - நீங்க
பல்லிலிடும் பச்சைத்தண்ணி
பழனிமலைத் தீர்த்தமல்லோ!

- நாட்டுப்புறப் பாடல்

வாழையடி வாழையென வந்ததிருக் கூட்ட
மரபினில்யான் ஒருவனன்றோ வகையறியேன்!...

- வடலூரார்

கிளையினில் பாம்பு தொங்க
விழுதென்று குரங்கு தொட்டு
விளக்கினைத் தொட்ட பிள்ளை
வெடுக்கெனக் குதித்த தைப்போல்
கிளைதொறும் குதித்துத் தாவிக்
கீழுள்ள விழுதை யெல்லாம்
ஒளிப்பாம்பாய் எண்ணி எண்ணி
உச்சிபோய்த் தன்வால் பார்க்கும்!

-புரட்சிக்கவிஞர் பாரதிதாசன்

## எச்சம்

ஒரு வாகன உற்பத்தியாளன்

பூமியைப் பிளப்பவன்
காகிதத் தயாரிப்பாளன்
பாறை உடைப்பவன்
கசாப்பு வெட்டுபவன்
இரும்பு இளக்குபவன்
மீன் பதப்படுத்துபவன்
ஆகியோரின் கனவுகள்
இயற்கையின் கனவை விட
'மாற்றுக்' குறைந்தது
என்று யார் கூறுவது?

"நாங்கள் இல்லாமல் நீங்கள் வாழ இயலாது"
அவர்கள் இறுமாப்புடன் கூறுகின்றனர்.
"உங்களோடு சேர்ந்து வாழ்வதும் முடியாது"
அமைதியைக் கிழித்துக்கொண்டு வருகிறது பதில்.

உலகத்தின் வளத்தினிடையே
மௌனமாக
பஞ்சம் கால்நீட்டிப் படுத்திருக்கிறது.
ஒட்டி உலர்ந்த குழந்தையின் பசிக்குரல் போல
அது தீனமாக ஒலிக்காதுதான்.
ஆனால் அதற்காக அதன் கொடூரத்தைக்
குறைத்து மதிப்பிட்டு விட
முடியாது.

ஒரு நாள்
அது விசுவரூபமெடுக்கும்.
உலகம் முழுவதையும் தன் காலடியில் போட்டு
நசுக்கும்
குரூரமாகச் சிரிக்கும்.

சுரங்கங்கள் சுரண்டி முடிக்கப்பட்டிருக்கும்போது,
காட்டுமரங்களின் அடித்தண்டுகள்
கல்லறைக் கற்களாக மாறி இருக்கும்போது,
கடைசிப் புள்ளிமானும் ஒருஜோடிக் காலணிகளாக
உருமாறி இருக்கும்போது,
செத்த மண்ணில் பூவின் விதைக்காக
ஒரு சிட்டுக்குருவி அலைந்து தவிக்கும்போது,
ஓங்கி வீசும் புழுதிக் காற்று
நிலத்தை மூடி விழுங்கிக் கொண்டிருக்கும்போது,
அந்தப் பச்சை ஏரியின் குழம்பிய சேறு
கடைசிக் கொக்கையும் பிடித்திழுத்துச் சுருட்டிக்
கொள்ளும்போது-

இயற்கையை விட மனிதன்
"மாற்றுக்" குறைவாகவே கனவுகளைக் கண்டு
கொண்டிருந்தான்
என்றுகூற யார் மிஞ்சி இருப்பார்?

## இயற்கை அன்னையை அங்கஹீனப்படுத்தும் இழி செயல் தொடரலாமா?

மனிதனுக்கு எதுவுமே போதுமானதாக
இருக்கவில்லை.
இரும்பை உருக்கிய உலைகள்
மரத்தை அறுத்த ஆலைகள்
எண்ணை வடித்த இயந்திரங்கள்
எதிரியைக் கொன்ற துப்பாக்கிகள்
மீன்களைப் பிடித்த வலைகள்
எல்லாமே
பெரிதாக இருக்க ஆசைப்பட்டான்.
அவன் கற்பனைக்கு மிஞ்சிப் பெரியதாய்.
அவனது இந்த 'லட்சியத்தி' ற்குக் குறுக்கே வரும்
எதையும்
அழித்து நொறுக்கி நிர்மூலமாக்க அவன்
தயங்கவேயில்லை.

ஆனால்

பிரபஞ்ச விதிகள் எளிமையானவை.
மீறுவோர் அதற்கான விலைகளைக் கொடுத்தே
ஆகவேண்டும்.
இயற்கையைப் பொறுத்தவரை
டினோசாரும், மனிதனும் ஒன்றுதான்.

உலகில் உள்ள ஒவ்வொரு உயிரினத்தின் வாழ்வும்
ஏனைய மரம், செடி, கொடி மற்றும் பிற
உயிரினங்களோடு பின்னணிப் பிணைந்துள்ளது.
ஒன்றின் அழிவில் மற்றது வளர முடியாது.
மனிதன் மீன் இனத்தையே ஒட்டுமொத்தமாக
அழிக்கும்போது
அங்கு மீன் இனம் மட்டும் பாதிக்கப்படுவதில்லை;
ஏனைய உயிரினங்களும் மெல்லச் சாகின்றன.
மனிதன் காடுகளை சகட்டுமேனிக்கு அழித்து
நிர்மூலமாக்கும்போது
அங்கு மரங்கள் மட்டும் அழிவதில்லை;
மற்ற உயிரினங்களும் கடுமையாகப்
பாதிக்கப்படுகின்றன.
இயற்கை அன்னையை அங்கஹீனப்படுத்தும் இந்த
இழிசெயல்
இன்னும் எவ்வளவு காலம் தொடரும்?
நம் தலைமுறை கடைசியா?
நமக்கு அடுத்த தலைமுறை கடைசியா?



# பூவுலகே !

நீ விடைபெறப் போகிறாயா ?
சாகும் தருவாயில் இயற்கை அன்னை.
வளர்ச்சிப் பொன்னாடையில் குதறப்பட்ட பூமி
வெளிச்ச புள்ளிகளுக்கிடையே எமனின் அழைப்பு
நலிந்த குடிசைகளிலிருந்து தீன ஓலங்கள்
சுற்றுலாப் பயணிகள் இறைத்த வெள்ளி நாணயங்கள்
மாசுப்பட்ட நீரால் செத்துக் கரை ஒதுங்கும் சீல்கள்
இன்றைய உலகின் கண்ணாடியாய்
"இயற்கை அள்ள அள்ளக் குறையாது"
என்ற தத்துவத்தைக் கேலி செய்யும்
நடைமுறையாய் நீ!

ஆனால் முன்பு அப்படி இல்லை.
பிரம்மாண்டமான காட்டெருமை,
சீறிப்பாயும் புலி,
கோரப்பல்லுடைய ஓநாய்
ஆளுயரக் கழுகு
ஆகியவை
இன்னும் வலிமையாய்
ஏராளமாய்ப் பெருகி
பூவுலகில் அலைந்து கொண்டிருந்தன.
அவைகள்
பருவகாலங்கள் தழுவி அனுப்பிய
மலர்மரங்கள் வாசனை தூவி அனுப்பிய
காற்றை மட்டும் சுவாசித்தன.

அப்பொழுது
எதுவும் 'எடுக்க'ப்படவில்லை
எல்லாம் 'கொடுக்க'ப்பட்டது
பூமி மரத்திற்குக் கொடுத்தது.
மரம் பூமிக்குக் கொடுத்தது.
வாழ்வின் இழைகளைத் தெள்ளிய நீர் நனைத்துச்
சென்றது.
பெய்த மழை தெளிவாய் இருந்தது.
வீசிய காற்றும் "என்னைத் தூய்மைப்படுத்து" என்று
கெஞ்சிக் கொண்டிருக்கவில்லை
அமைதிதான் இருந்த ஒரே இசை
மழைதான் விழுந்த ஒரே கண்ணீர்
யாருக்கும் தீங்கு விளைவிக்காத விலங்கினங்கள்
முதலில் வந்தன.

ஆனால் முதல் என்பது முடிவானதல்ல.

-**"இன்னும் மீதமிருக்கிறது நம்பிக்கை"**
*என்ற நூலிலிருந்து...*
*வெளியீடு : பூவுலகின் நண்பர்கள்*
*306/6, பெல்லி ஏரியா,*
*அண்ணாநகர், சென்னை-40.*

# மரங்கள்

- கவிஞர் மு. மேத்தா



மானுட ஆண்மைக்கு
மண் கொடுத்த சீதனங்கள்
மரங்கள்!

நாங்கள்-
சிறகுத் துடுப்புகள்
செலுத்திச் செல்கிற
படகுப் பறவைகளின்
பயணியர் விடுதிகள்!

எந்தப் பறவைக்கும்
இருக்க இடங்கொடுக்கும்
பொதுவுடைமை வீடுகள்!
அதனால்தான்...
தராதரம் அறியாத
தான்தோன்றிப் பறவைகள்
எங்கள் தலைமீதே
எச்சமிட்டுச் செல்கின்றன!

நாங்கள்
சூடு படுகின்ற
சொந்தக்காரர்களுக்காக
விரித்தே வைத்திருக்கும்
வெண்கொற்றக் குடைகள்!
மழைக்கு ஒதுங்கும்
மர நிலையங்கள்
சரியாகப் போடாத
சல்லடைப் பந்தல்கள்
பாத சாரிகளின்
பணிமனைக் கூடங்கள்!

மனிதர்கள்
வாங்கி வைக்காத
மண்ணின் விசிறிகள்!

❑

மானுடர் கரங்களில்
அகப்பட்டுக் கொண்ட
மண்ணின் கைதிகள்...
அதனால்தான்
ஊருக்கு வெளியே
உட்கார்ந்திருந்தாலும்
எங்கள்
மார்பிலும் தோளிலும்
எண்களை எழுதி
மாட்டி வைக்கிறார்கள்!

❑

நாங்கள் -
காற்று மன்னவன்
கால்நடை யாத்திரையைக்
கண்டு முரசறையும்
கட்டியங்காரர்கள்!

தரையில் நடக்கப்
பிரியப்படாத போது
காற்று எங்கள்
தலைகளின் மீதே
நடந்து செல்கிறது!

இரவுக் காற்றின்
ஈர உதடுகளோடு
உறவு கொள்கிறோம்
உலராத எச்சிலைப்
பனித்துளி யாக்கிப்
பரிசளிக்கின்றோம்!

❑

தென்றலின் பார்வையில்
செல்லப் பிள்ளைகள்;
நாங்கள்
புயலின் கண்களில்
புரட்சிக்காரர்கள்!

❑

சட்டையை மாற்றும்
சாரைப் பாம்புகளுடன்
சண்டையிட்டுக் கொண்டோம்
ஆதலால்
காலந்தோறும்
ஒரே உடையை
உடுத்தியிருக்கிறோம்!

காலத்துக்குக் காலம்
எங்கள் உடை
கனமாகி வருகிறது.

எங்கள் உடுக்கையை
யாரேனும்
கழற்றவோ
மாற்றவோ வந்தால்
தடுக்க முடியாமல்
கண்ணீர் வடிக்கிறோம்.

❑

வெட்டி யெடுத்தால்
விறகாவோம்...வெய்யிலிலே
சுட்டு எடுத்தாலும்
சுறுசுறுப்பாய் அடுப்பெரிப்போம்!

நாங்கள்
கல்லில் எறிந்தாலும்
கம்பில் அடித்தாலும்
பரிசு கொடுக்கின்ற
பண்பின் வார்ப்புகள்!

வானத்தில் நடக்கும்
நட்சத்திர இரவு
விளையாட்டு மேடையில்
தவறி விழுவதைத்
தாங்கிப் பிடிப்பதற்காக
மண்ணில் கட்டிய
வலை விரிப்புகள்!

❑

மனிதர்கள்
தூங்கிய பிறகும்
வானத்தில் விளக்கெரிவது
மரங்களுக்காகவே!

---

*-"கண்ணீர்ப் பூக்கள்"*
*என்ற நூலிலிருந்து*
*வெளியீடு : திருமகள் நிலையம்*
*55, வெங்கட் நாராயணா தெரு,*
*சென்னை-17.*

# ஆறில் ஒரு பங்கு

**- மகாகவி பாரதியார்**

<u>முகவுரை</u>

*ஒரு ஜாதி ஓர் உயிர்; பாரத நாட்டிலுள்ள முப்பது கோடி ஜனங்களும் ஒரு ஜாதி. வகுப்புகள் இருக்கலாம்; பிரிவுகள் இருக்கலாகாது; வெவ்வேறு தொழில் புரியலாம்; பிறவி மாத்திரத்தாலே உயர்வு தாழ்வு என்ற எண்ணம் கூடாது. மத பேதங்கள் இருக்கலாம்; மத விரோதங்கள் இருக்கலாகாது.*

*இந்த உணர்வே நமக்கு ஸ்வதந்திரமும் அமரத்தன்மையும் கொடுக்கும். "நாந்ய; பந்தா வர்த்ததே அயநாய" வேறு வழியில்லை.*

*இந்நூலை, பாரத நாட்டில் உழவுத் தொழில் புரிந்து நமக்கெல்லாம் உணவு கொடுத்து ரக்ஷிப்பவர்களாகிய பள்ளர், பறையர் முதலிய பரிசுத்தத் தன்மை வாய்ந்த வைசிய சகோதரர்களுக்கு அர்ப்பணம் செய்கிறேன்.*

*- ஆசிரியன்.*

*அத்தியாயம் - 1*

மீனாம்பாள் வீணை வாசிப்பதிலே ஸரஸ்வதிக்கு நிகரானவள். புரசை வாக்கத்திலுள்ள எங்கள் வீட்டிற்கு அவள் வரும் சமயங்களி லெல்லாம் மேல் மாடத்து அறையை அவளுடைய உபயோகத்துக்காகக் காலி செய்து விட்டு விடுவது வழக்கம். நிலாக் காலங்களில் இரவு எட்டு மணிக் கெல்லாம் போஜனம் முடிந்துவிடும். ஒன்பது மணி முதல் நடுநிசி வரையில் அவள் தனது அறையில் இருந்து வீணை வாசித்துக் கொண் டிருப்பாள். அறைக்கு அடுத்த வெளிப் புறத்திலே பந்தரில், அவளுடைய தகப்பனார் ராவ்பகதூர் சுந்தரராஜுலு நாயுடு கட்டிலின்மீது படுத்துக்கொண்டு, சிறிது நேரம் வீணையைக் கேட்டுக் கொண்டிருந்து, சீக்கிரத்திலே குறட்டைவிட்டு நித்திரை செய்யத் தொடங்கிவிடுவார். ஆனால், மகாராஜன் குறட்டைச் சத்தத்தால் வீணைச் சத்தம் கேளாதபடி செய்துவிடமாட்டார்; இலேசான குறட்டைதான். வெளிமுற்றத்தின் ஓர் ஓரத்திலே நான் மட்டும் எனது "பிரம்மச்சாரி" படுக்கையைப் போட்டுக் கொண்டு படுத்திருப்பேன். வீணை நாதம் முடிவுறும் வரை, என் கண்ணிமைகளைப் புளியம் பசை போட்டு ஒட்டினாலும் ஒட்டமாட்டா. மீனாம்பாளுடன் அறையிலே படுத்துக் கொள்ளும் வழக்கமுடைய எனது தங்கை இரத்தினமும் சீக்கிரம் தூங்கிப்போய் விடுவாள். கீழே, எனது தாயார், தமையனார், அவரது மனைவி முதலிய அனைவரும் தூங்கிவிடுவார்கள். எனது தமையனார் மனைவி, வயிற்றிலே சோற்றைப் போட்டுக் கைகழுவிக் கொண்டிருக்கும்போதே, குறட்டை விட்டுக் கொண்டிருப்பாள். இடையிடையே குழந்தைகளின் அழுகைச் சத்தம் மட்டிலும் கேட்கும். தமையனாருக்குக் கோட்டையில் ரெவினியூ போர்டு ஆபீஸிலே உத்தியோகம். அவருக்கு நான்கு வருடங்களுக்கொரு முறை ஆபீஸில் பத்து ரூபாயும், வீட்டில் இரண்டு குழந்தைகளும் "ப்ரமோஷன்".

வஸந்த காலம்; நிலாப்பொழுது; நள்ளிரவு நேரம், புரசைவாக்கம் முழுதும் நித்திரையிலிருந்தது. இரண்டு ஜீவன்கள்தான் விழித்து இருந்தன. நான் ஒன்று; மற்றொன்று அவள்.

கந்தர்வ ஸ்திரீகள் "வீணை" வாசிப்பதுபோல மீனாம்பாள் வாசிப்பாள். பார்ப்பதற்கும் கந்தர்வ ஸ்திரீயைப் போலவே இருப்பாள். அவளுக்கு வயது பதினாறு இருக்கும். கதையை வளர்த்துக்கொண்டு ஏன் போகவேண்டும்? மன்மதன் தனது அம்பொன்றின் முனையிலே என் பிராணனைக் குத்தி எடுத்துக்கொண்டு போய் அவள் வசம் ஒப்புவித்து விட்டான். அடடா! அவளது இசை, எவ்வளவு நேரம் கேட்ட போதிலும், தெவிட்டாது. தினந்தோறும் புதுமை தோன்றும், அவள் முகத்தில் தோன்றுவது போல. அவளுடைய தந்தையாகிய ராவ்பகதூர் சுந்தரராஜுலு நாயுடு எனது தாயாருக்கு ஒன்றுவிட்ட அண்ணன். தஞ்சாவூர் முதலிய பல ஜில்லாக்களில் நெடுங்காலம் போலீஸ் இன்ஸ்பெக்டர் உத்தியோகம் பார்த்து ஸர்க்காருக்கு நன்றாக உழைத்ததினால் "ராவ் பகதூர்" என்ற பட்டம் பெற்றவர். சுதேசியம் தொடங்கும் முன்பாகவே இவர் வேலையிலிருந்து விலகி விட்டார். இதை எதன் பொருட்டாகச் சொல்லுகிறேன் என்றால் அவருக்குக் கிடைத்த பட்டம் வெறுமே சில சுதேசியத் தலைவர்கள், மீது "ரிப்போர்ட்" எழுதிக் கொடுத்துச் சுலபமாகச் சம்பாதித்த பட்டமன்று; யதார்த்தத்திலேயே திறமையுடன் உழைத்ததினாற் கிடைத்த பட்டம். குழந்தை முதலாகவே மீனாம்பாளை எனக்கு விவாகம் செய்து கொடுக்க வேண்டும் என்பது அவருடைய கருத்து. அந்தக் கருத்து நிறைவேறுவதற்கு நேர்ந்த விக்கினங்கள் பல. அவ்விக்கினங்களில் பெரும்பான்மையானவை என்னாலேயே உண்டாயின.

நான் சுமார் பதினாறு பிராயம்வரை சென்னைக் கிறிஸ்தியன் காலேஜில் படித்துக் கொண்டிருந்தேன். "வேத கால முதலாக இன்று வரை பாரத தேசத்திலுள்ள ரிஷிகள் எல்லோரும் ஒன்றும்

தெரியாத மூடர்கள், அர்ஜுனனும், காளிதாஸனும், சங்கராசாரியாரும், சிவாஜியும், ராமதாஸரும், கபீர்தாஸரும், அதற்கு முன்னும் பின்னும் நேற்றுவரையிலிருந்த பாரத தேசத்தார் அனைவரும் நெஞ்சில் வளர்த்து வந்த பக்திகளெல்லாம் இழிந்த அநாகரீகமான "மூடபக்திகள்" என்பது முதலான ஆங்கிலேய "சத்தியங்கள்" எல்லாம் என் உள்ளத்திலே குடிபுகுந்து விட்டன. ஆனால், கிறிஸ்துவப் பாதிரி ஒரு விநோதமான ஜந்து. ஹிந்து மார்க்கத்திலும், ஹிந்து நாகரீகத்திலும் பக்தி செலுத்துவது பேதைமை என்று ருஜுப்படுத்திக் கொண்டு வரும்போதே, அவர் கொண்டாடும் கிறிஸ்து மார்க்கமும் மூடபக்தி என்று வாலிபர் மனதில் படும்படி ஏற்பாடு செய்துவிடுகிறார். மத விஷயங்களைப் பற்றி விஸ்தாரமான விவகாரங்கள் எழுதி, படிப்பவர்களுக்கு நான் தலைநோவு உண்டாக்கப் போவதில்லை; *சுருக்கம் : நான் எனது பூர்வ மதாசாரங்களில் பற்று நீங்கி, "ஞான ஸ்நாநம்" பெறவில்லை; பிரம்ம ஸமாஜத்திலே சேர்ந்துகொண்டேன்.*

சிறிது காலத்திற்கு அப்பால், பட்டணத்தில் படிப்பை நிறுத்திவிட்டு, வீட்டில் யாரிடமும் சொல்லாமல் கல்கத்தாவுக்குப் புறப்பட்டுப்போய், அங்கே பிரம்ம ஸமாஜத்தாரின் மார்க்க போதனை கற்பிக்கும் பாடசாலையொன்றிலே சேர்ந்து சில மாதங்கள் படித்தேன். பிரம்ம ஸமாஜத்தாரின் "உபதேசி"களில் ஒருவனாக வெளியேற வேண்டும் என்பது என்னுடையநோக்கம். அப்பால் அங்கிருந்து பஞ்சாப், ஹிந்து ஸ்தானம் முதலிய பல பிரதேசங்களில் யாத்திரை செய்து கொண்டு, கடைசியாகச் சென்னப்பட்டணம் வந்து சேர்ந்தேன். நான் ஹிந்து மார்க்கத்தைவிட்டு நீங்கியதாக எண்ணி, எனது ஜாதியார் என்னைப் பல விதங்களில் இம்சை செய்தார்கள். இந்த இம்சைகளினால் எனது சித்தவுறுதி நாளுக்கு நாள் பலம் அடைந்ததேயல்லாமல், எனக்கு மனச்சோர்வு உண்டாகவில்லை.

எனது தகப்பனார்- இவர் பெயர் துபாஷ் ராமசந்திர நாயுடு-வெளிவேஷ மாத்திரத்தில் சாதாரண ஜனங்களின் ஆசார விவகாரங்களை வைத்துக் கொண்டிருந்தார்; எனினும், உள்ளத்தில் பிரம்மஸமாஜப் பற்று உடையவர். ஆதலால், நான் வாஸ்தவமான பரமாத்ம பக்தியும், ஆத்ம விசுவாஸமும், எப்போதும் உபநிஷத்துக்கள் படிப்பதில் சிரத்தை கொண்டிருப்பது கண்டு, அவருக்கு அந்தரங்கத்தில் மிகுந்த உவகையுண்டாயிற்று. வெளி நடப்பில் என் மீது கோபம் பாராட்டுவது போலிருந்தாரேயன்றி, எனது பந்துக்கள் சொற்படி கேட்டு என்னைத் தொல்லைப்படுத்தவில்லை. ஸகல ஸௌகரியங்களும் எனக்கு முன்னைக் காட்டிலும் அதிகமாக நடக்கும்படி வீட்டில் ஏற்பாடு செய்து வைத்திருந்தார்.

ஆனால், எனது தமையன் மாத்திரம் என்னிடம் எக்காரணம் பற்றியோ மிகுந்த வெறுப்பு பாராட்டினான். நான் தலையிலே பஞ்சாபிகளைப் போலப் பாகை கட்டிக் கொள்வது வழக்கம். "15" ரூபாய்க் குமாஸ்தாக்களுக்கென்று பிரத்தியேகமாக அழகு, அந்தம், ஆண்மை எதுவுமின்றி ஏற்பட்டிருக்கும் கும்பகோணத்துப் பாகை நான் கட்டிக் கொள்ளுவதில்லை. இதுகூடத் தமையனுக்குக் கோபம் உண்டாக்கும். "ராஜபுத்ருடு வீடு, தொங்க விதவா! தலலோ மகா ஆடம்பரமு பகடி வீடிகி!"



என்று எதெல்லாமோ சொல்லி ஓயாமல் திட்டிக் கொண்டிருப்பான். இப்படியிருக்க ஒருநாள் எனது தகப்பனார் திடீரென்று வாயுக்குத்தி இறந்து போய்விட்டார். அவருக்குப் பிரம்மஸமாஜ விதிப்படி கிரியைகள் நடத்த வேண்டும் என்று நான் சொன்னேன். எனது தமையன் சாதாரண ஆசாரங்களின்படிதான் நடத்தவேண்டும் என்றான். பிரமாத கலகங்கள் விளைந்து, நானூறு மத்தியஸ்தங்கள் நடந்த பிறகு, மசானத்தில் அவன் தனதிஷ்டப்படி கிரியைகள் முடித்த பின்பு நான் எனது கொள்கைப்படி பிரம்ம ஸமாஜ குரு ஒருவரை வைத்துக்கொண்டு கிரியைகள் செய்தேன். இதுவெல்லாம் எனது மாமா ராவ் பகதூர் சுந்தரராஜுலு நாயுடுக்கு என்மீது மிகுந்த கெட்ட எண்ணம் உண்டாகும்படி செய்துவிட்டது. ஆதலால், விவாகம் தடைப்பட்டுக்கொண்டே வந்தது. ஆனால், இறுதிவரை, என்னை எப்படியேனும் சீர்திருத்தி, எனக்கே தனது மகளைப் பாணிக்கிரஹணம் செய்து கொடுக்க வேண்டும் என்பது அவருடைய இச்சை.

வஸந்தகாலம், நிலாப்பொழுது, நள்ளிரவு நேரம். புரசைவாக்கம் முழுமையும் நித்திரையிலிருந்தது. விழித்திருந்த ஜீவன்கள் இரண்டே. ஒன்று நான்; மற்றொன்று அவள். இன்பமான காற்று வீசிக் கொண்டிருந்தது. மேல் மாடத்தில், மீனாம்பாளுடைய அறையிலிருந்து, முறைப்படி வீணைத் தொனி கேட்டது. ஆனால், வழக்கப்படி குறட்டை கேட்கவில்லை. ராவ்பகதூர் குறட்டை மாமா ஊரிலில்லை. வெளியே ஒரு கிராமத்துக்குப் போயிருந்தார். நான் நிலா முற்றத்தில் எனது கட்டிலின் மீது உட்கார்ந்துகொண்டிருந்தேன். என் உள்ளத்திலோ, இரண்டு எரிமலைகள், ஒன்றையொன்று சீறியெதிர்த்துப் போர் செய்து கொண்டிருந்தன. இவற்றுள்ளே, ஒன்று காதல்; மற்றொன்று-பின்பு தெரியவரும். வீணைத்தொனி திடீரென்று நின்றது. சிறிது நேரத்தில், எனது பின்புறத்தில் ஒரு ஆள் வந்து நிற்பது உணர்ந்து, திரும்பிப்பார்த்தேன். மீனாம்பாள்!



இப்பொழுதுதான் நாங்கள் புதியதாகத் தனியிடத்திலே சந்தித்திருக்கிறோமென்றும், அதனால் இங்கு நீண்டதோர் காதல் வர்ணனை எழுதப்படுமென்றும் படிப்பவர்கள் எதிர்பார்க்க வேண்டாம். இவ்விதமாக நாங்களிருவரும் பலமுறை சந்தித்திருக்கிறோம். மீனாம்பாள் மஞ்சத்தின் மீது உட்கார்ந்தாள்.

''மீனா! இன்று உன்னிடத்திலே ஒரு விசேஷம் சொல்லப்போகிறேன்'' என்றேன். ''எனக்கு அது இன்னதென்று ஏற்கனவே தெரியும்" என்றாள்.

"என்னது, சொல்லு ?"

''நீ பிரம்மச்சரிய சங்கற்பம் செய்து கொள்ளப்போகிறாய் என்ற விசேஷம்".

''ஏன் ? எதற்கு ? எப்படி ? உனக்கு யார் சொன்னார்கள் ?" என்று கேட்டேன்.

"வந்தே மாதரம்" என்றாள்.

மீனாம்பாளுடைய அறிவுக்கூர்மை எனக்கு முன்னமே தெரியுமாதலால், அவள் சொல்லியதிலிருந்து அதிக வியப்புண்டாகவில்லை.

அதன்பின், நான் அவளிடம் பின்வருமாறு கூறலாயினேன்: ''ஆம், பாரத தேசத்தை இப்போது பிரம்மசாரிகளே ரக்ஷிக்க வேண்டும். மிக உயர்ந்திருந்த நாடு மிகவும் இழிந்து போய்விட்டது. இமயமலையிருந்த இடத்தில் முட்செடிகளும், விஷப்பூச்சிகளும் நிறைந்த ஒரு பாழுங்காடு இருப்பதுபோல் ஆய்விட்டது. அர்ஜுனன் வாழ்ந்த மாளிகையில் வெளவால்கள் தொங்குவது போலிருக்கிறது. இதைப் பிரம்மசாரிகளே காப்பாற்ற வேண்டும். பொப்பிலி ராஜாவின் மகனாகவேனும் ராஜா ஸர் ஸவலை ராமசாமி முதலியார் மகனாகவேனும் பிறவாமல் நம் போன்ற சாதாரண குடும்பங்களிலே பிறந்தவர்கள் விவாகம் செய்து கொண்டால், இந்தப் பஞ்ச'நாட்டில் அவர்களுக்கு மூச்சு முட்டிப்போகிறது. குருவியின் தலையிலே பனங்காயை வைப்பதுபோல, இந்த நரிக்கூட்டத்திலுள்ள ஒரு வாலிபன் தலையிலே ஒரு குடும்ப பாரத்தைச் சுமத்தும்போது, அவனுக்குக் கண் பிதுங்கிப் போய்விடுகிறது. அவனவனுடைய அற்பக் காரியங்கள் முடிவு பெறுவதே பகீரத ப்ரயத்தனம் ஆய்விடுகிறது. தேச காரியங்களை இவர்கள் எப்படிக் கருதுவார்கள்? பிரம்மச்சாரிகள் வேண்டும்; ஆத்ம ஞானிகள் வேண்டும்; தம் பொருட்டு உலக சுகங்களை விரும்பாத தீரர்கள் வேண்டும். இந்த சுதேசியம் கேவலம் ஒரு லௌகிக காரியமன்று. இது ஒரு தர்மம். இதில் பிரவேசிப்பவர்களுக்கு வீர்யம், தேஜஸ், கர்மயோகித் தன்மை முதலிய அரிய குணங்கள் வேண்டும். நான் பிரம்மச்சரிய விரதத்தைக் கைக்கொள்ளலாமென்று நினைத்திருக்கிறேன்.ஆனால்-

மீனா:- "ஆனால், நான் அதற்கு ஒரு சனியாக வந்து குறுக்கிட்டிருக்கிறேன் என்று சொல்லுகிறாய் ?"

''பார்த்தாயா, பார்த்தாயா! என்ன வார்த்தை பேசுகிறாய் ? நான் சொல்ல வந்ததைக் கேள். எனது புதிய சங்கற்பம் ஏற்படு முன்னதாகவே, என் உயிரை உனக்கு அர்ப்பணம் செய்துவிட்டேன். இப்போது எனது உயிருக்கு வேறொரு கடமை ஏற்பட்டிருக்கிறது. அவ்விஷயத்தில் உனது கட்டளையை எதிர்பார்த்திருக்கிறேன்'' என்றேன். அவள் ஏதோ

மறுமொழி சொல்லப்போனாள். அதற்குள் வாயிற்புறத்தில் ஒரு வண்டி வந்து நிற்கும் சப்தம் கேட்டது.

"நாயன்னா வந்துவிட்டார், நான் போகிறேன்" என்று சொல்லி ஒரு முத்தத்துடன் பிரிந்தாள்.

குறட்டை நாயுடு கதவை உடைத்து, உள்ளிருக்கும் குறட்டைகளை யெல்லாம் எழுப்பி, மேலே வந்து படுத்து அரை நாழிகைக்கெல்லாம் தமது தொழிலை ஆரம்பித்துவிட்டார். இரண்டு ஜீவன்கள் அன்றிரவு முழுதும் விழித்திருந்தன. ஒன்று நான்; அவள் மற்றொன்று.

## அத்தியாயம் - 2

மேல் அத்தியாயத்தின் இறுதியில் குறிக்கப்பட்ட செய்தி நிகழ்ந்ததற்கு அப்பால், சில மாதங்கள் கழிந்து போயின. இதற்கிடையே எங்களுடைய விவகாரத்திற் பல மாறுபாடுகள் உண்டாயிருந்தன. ''வந்தே மாதாம்'' மார்க்கத்தில் நான் பற்றுடையவன் என்பதை அறிந்த ராவ் பகதூர் எனக்குத் தமது கன்னிகையை மணஞ்செய்து கொடுப்பது" என்ற சிந்தனையை அறவே ஒழித்துவிட்டார். சில மாதங்களாக, அவர் தமது சாச்வத வாஸஸ்தானமாகிய தஞ்சாவூரிலிருந்து புரசைவாக்கத்துக்கு வருவதை முழுவதும் நிறுத்திவிட்டார். இதனிடையே, மீனாம்பாளுக்கு வேறு வரன்கள் தேடிக் கொண்டிருந்ததாகவும் பிரஸ்தாபம் ஏற்பட்டது. அவளிடமிருந்தும் யாதொரு கடிதமும் வரவில்லை. ஒருவேளை முழுதும் மறந்துபோய் விட்டாளா? பெண்களே வஞ்சனையின் வடிவம் என்று சொல்லுகிறார்களே, அது மெய்தானா? "பெண்ணெனப் படுவகேண்மோ, உள் நிறைவுடைய வல்ல, ஓராயிரமனத்தவாகும்'' என்று நான் சீவகசிந்தாமணியிலே படித்தபோது, அதை எழுதியவர் மீனாம்பாளைப் போன்ற ஸ்திரீயைக் கண்டு அவளுடைய காதலுக்குப் பாத்திரமாகும் பாக்கியம் பெறவில்லை போலும் என்று நினைத்தேனே. இப்போது, அந்த ஆசிரியருடைய கொள்கைதான் மெய்யாகி விட்டதா? நான் இளமைக்குரிய அறிவின்மையால், அத்தனைப் பெருமை வாய்ந்த ஆசிரியரது கொள்கையைப் பிழையென்று கருதினேன் போலும்!

''அடா மூடா! உனக்கு ஏன் இதில் இவ்வளவு வருத்தம்? நீயோ பிரம்மச்சரிய விரதத்திலே ஆயுளைக் கழிக்க வேண்டும் என்ற எண்ணத்தை நாள்தோறும் மேன்மேலும் வளர்த்து வருகின்றாய்? மீனா மற்றொருவனை மணஞ்செய்து கொண்டால் உனக்கு எளிதுதானே? நீயோ வேறொரு பெண் மீது இல்வாழ்க்கையில் மையல் கொள்ளப் போவதில்லை. இவளொருத்திதான் உனது விரதத்திற்கு இடையூறாக இருந்தாள். இவளும் வேறொருவனை மணஞ்செய்து கொண்டு அவன் மனைவியாய் விடுவாளாயின் உனது விரதம் நிர்விக்கினமாக நிறைவேறும். ஈசனன்றோ உனக்கு இங்ஙனம் நன்மையைக் கொண்டு விடுகிறான்? இதில் ஏன் வருத்தமடைய வேண்டும்?" என்று சில சமயங்களில் என்னுள்ளம் தனக்குத்தானே நன்மதி புகட்டும்.

மீண்டும், வேறொரு விதமான சிந்தை தோன்றும்:- ''அவள் நம்மை மறந்திருக்கவே மாட்டாள். மாமா சொற்படி கேட்டு அவள் வேறொருவனை மணஞ்செய்து கொள்ளவே மாட்டாள். எனது பிராணனோடு ஒன்றுபட்டவளாதலால், எனது நெஞ்சத்திலே ஜ்வலிக்கும் தர்மத்தில் தானும் ஈடுபட்டவளாகி அந்த தர்மத்திற்கு இடையூறு உண்டாகும் என்று அஞ்சி, எனக்கு ஒன்றும் எழுதாமலிருக்கிறாள். ஆமடி, மீனா! உன்னை நான் அறியேனா? எதுவரினும் நீ என்னை மறப்பாயா? அந்தக் கண்கள் "உன்னை மறக்க மாட்டேன்" என்று எத்தனை முறை என்னிடம் பிராமாணம் செய்து கொடுத்திருக்கின்றன! அந்தக் கண்கள்! அந்தக் கண்கள்! ஐயோ, இப்பொழுதுகூட என் முன்னே நிற்கின்றனவே! அவை பொய் சொல்லுமா?"

அப்பால் ஒரு உள்ளம்... ''அடா! நல்ல துறவடா உன் துறவு! நல்ல பக்தியடா உன் பக்தி! நல்ல தர்மம்! நல்ல சிரத்தை! ஆரிய நாட்டை உத்தாரணம் செய்வதற்கு இப்படியன்றோ பிள்ளைகள் வேண்டும்? பீஷ்மர் வாழ்ந்திருந்த தேசமல்லவா? இப்பொழுது அதற்கு உன்னைப் போன்றவர்கள் இருந்து ஒளி கொடுக்கிறார்கள்! சீச்சி! நாய் மனமே! அமிருத வெள்ளத்தை விட்டு வெறும் எலும்பைத் தேடிப் போகிறாயா? லோகோத்தாரணம் பெரிதா? உனது புலனின்பம் பெரிதா? தர்ம சேவை பெரிதா, ஸ்திரீ சேவை பெரிதா? எதனைக் கைக்கொள்ளப் போகிறாய் சொல்லடா சொல்?"

பிறகு வேறொரு சிந்தனை: - ''எப்படியும் அவளிடமிருந்து ஓர் உறுதி கிடைத்தால், அதுவே நமக்குப் பெரியதோர் பலமாயிருக்கும். நீ தர்ம பரிபாலனம் செய். என் பொருட்டாகத் தர்மத்தைக் கைவிடாதே. நான் மரணம் வரை உன்னையே மானஸிகத் தலைவனாகக் கொண்டு நோம்புகள் இழைத்துக் காலம் கழிப்பேன். ஸ்வர்க்கத்திலே நாம் இருவரும் சேர்ந்து வாழலாம் என்று அவள் உறுதி தருவாளானால், இந்த ஜன்மத்தில் ஜீவ்யம் வெகுசுலபமாய் இருக்கும்".

அப்பால் ''ஒரே அடியாக, இவளுக்கு இன்னொருவனுடன் விவாகம் நடந்து முடிந்துவிட்டது என்று செய்தி வருமானால், கவலை விட்டிருக்கும். பிறகு, இகத்தொடர் ஒன்றுமேயில்லாமல், தர்ம சேவையே தொழிலாக நின்றுவிடலாம்".

பின் மற்றொரு சிந்தை:- "ஆ! அப்படி ஒரு செய்தி வருமானால் பின்பு உயிர் தரித்திருப்பதே அரிதாய்விடும். அவளுடைய அன்பு மாறிவிட்டது என்று தெரிந்தபின், இவ்வுலக வாழ்க்கை யுண்டோ?"

அப்பால் பிறிதொரு சிந்தை: - அவள் அன்பு! மாதர்களுக்கு அன்பு என்றதோர் நிலையும் உண்டா? வஞ்சனை, கோபம் இரண்டையும் திரட்டிப் பிரம்மன் ஸ்திரீகளைப் படைத்தான்.

இப்படி ஆயிர விதமான சிந்தனைகள் மாறி மாறித் தோன்றி எனது அறிவைக் கலக்கின. ஆன்ம வுறுதியில்லாதவனுடைய உள்ளம், குழம்பியதோர் கடலுக்கு ஒப்பாகும். இதனைப் படிக்கின்றவர், ஒரு கணம் சாக்ஷி போல் நின்று தமது உள்ளத்தினிடையே நிகழும் புரட்சிகளையும், கலகங்களையும், பார்ப்பாராயின், மிகுந்த வியப்பு உண்டாகும். மனித வாழ்க்கையிலே இத்தனைத் திகைப்புகள் ஏன் உண்டாகின்றன?

"மறப்பும் நினைப்புமாய் நின்ற லஞ்ச மாயா மனத்தால் வளர்ந்தது தோழி"-

இவ்வாறிருக்கையில் ஒரு நாள் திடீரென்று எனது கையில் மீனாம்பாளின் கடிதமொன்று கிடைத்தது. அதனை இங்கு தருகின்றேன். அதைப் படித்துப் பார்த்த பொழுது என்னுள்ளம் என்ன பாடுபட்டிருக்கும் என்பதை நீங்களே யோசித்துக் கொள்ளுங்கள்-

ஓம்.

தஞ்சாவூர்.

உடையாய்,

இக்கடிதம் எழுதத் தொடங்கும் போதே எனது நெஞ்சு பதறுகிறது. எனக்கு எப்படி எழுதுகிறது என்று தெரியவில்லை. ஐயோ இது என்னுடைய கடைசிக்கடிதம்! உன் முகத்தை நான் இனி இவ்வுலகில் பார்க்கப் போவதில்லை.



''நாயன்னா'' வருகிற தைமாதம் என்னை இவ்வூரில் புதிய இன்ஸ்பெக்டராக வந்திருக்கும் மன்னார் என்பவனுக்குப் பலியிட வேண்டுமென்று நிச்சயம் செய்துவிட்டார். கலியாணத்துக்கு வேண்டிய சாமக்கிரியைகளெல்லாம் தயாராகின்றன. உனது பெயரைக் கேட்டால், வேட்டை நாய் விழுவதுபோல் விழுந்து, காதால் கேட்க முடியாத கெட்ட வார்த்தைகள் சொல்லி நிந்திக்கிறார். நான் தப்பியோடி விடுவேன் என்று நினைத்து என்னை வெளியேறாதபடி காவல் செய்து வைத்திருக்கிறார். நீ ஒரு வேளை இச்செய்தி கேட்டு இங்கு வருவாய் என்று கருதி, நீ வந்தால் வீட்டுக்கு வரமுடியாமல் செய்ய, இவரும் மன்னாரென்பவனும் சேர்ந்து நீசத்தனமான ஏற்பாடுகளும் செய்து வைத்திருக்கிறார்கள். அவன் நாயன்னாவின் பணத்தின் மீது கண் வைத்து, இந்த விவாகத்தில் ஆசை மூண்டிருக்கிறான். என்னுள்ளத்திலே அவனிடம் மிகுந்த பகைமையும், அருவருப்பும் உள்ளனவென்றும், இப்படிப்பட்ட பெண்ணைப் பலவந்தமாகத் தாலி கட்டினால் அவனுக்கு வாழ்நாள் முழுதும் துக்கமிருக்குமேயல்லாது சுகமிருக்காது என்றும் சொல்லியனுப்பினேன். அதற்கு அந்த மிருகம், "எனக்கு அவளுடைய உள்ளத்தைப் பற்றி லக்ஷ்யமில்லை. அதைப் பின்னிட்டு சரிப்படுத்திக் கொள்வேன். முதலாவது, பணம் என்கையில் வந்து சேர்ந்தால், பிறகு அவள் ஓடிப்போய் அந்த ஜெயிலுக்குப்போகிற பயலுடன் சேர்ந்து கெட்டுத் திரிந்துவிட்டுப் பிறகு சமுத்திரத்தில் விழுந்து சாகட்டும்" என்று மறுமொழி கொடுத்தனுப்பிவிட்டது.

அநேக தினங்களாக எனக்கு இரவில் நித்திரை என்பதே கிடையாது. நேற்றிரவு படுக்கையின் மீது கண் மூடாமல் படுத்துப் புரண்டு கொண்டிருந்தேன். அப்போது கனவு போன்ற ஒரு தோற்றமுண்டா யிற்று. தூக்கமில்லாத போது, கனவு எப்படி வரும்? அஃது கனவு மில்லை, நினைவுமில்லை; ஏதோ ஒரு வகையான காட்சி. அதில் அதி பயங்கரமான ரூபத்துடன், இரத்தம் போன்ற சிவந்த விழிகளும் கரிய மேகம் போன்ற மேனியும், வெட்டுண்ட தலைகளின் மாலையும் கையில் சூலமுமாகக் காளிதேவி வந்து தோன்றினாள். நான் நடுங்கிப் போய், ''மாதா என்னைக் காத்தருள் செய்ய வேண்டும்'' என்று கூறி வணங்கினேன். உடனே திடீரென்று அவளுடைய உருவம் மிக அழகியதாக மாறுபட்டது. அந்த ஸௌந்தர்யத்தை என்னால் வருணிக்க முடியாது. அவளுடைய

திருமுடியைச் சூழ்ந்து கோடி சூரியப் பிரகாசம் போன்ற தேஜோ மண்டலம் காணப்பட்டது. கண்கள் அருள்மழை பொழிந்தன. அப்போது தேவி எனக்கு அபயப் பிரதானம் புரிந்து பின்வருமாறு சொல்லலாயினள்! "குழந்தாய், உனது அத்தான் கோவிந்தராஜனை எனது சேவையின் பொருட்டாக எடுத்துக்கொள்ளப் போகிறேன், உனக்கு இம்மையில் அவனைப் பெற முடியாது. நீ பிறனுக்கு மனைவியாகவும் மாட்டாய். உனக்கு இவ்வுலகத்தில் இனி எவ்வித வாழ்வுமில்லை; உங்கள் வீட்டுக் கொல்லையில், வடமேற்கு மூலையில், தனியாக ஒரு பச்சிலை படர்ந்திருக்கக் காண்பாய். நாளைக் காலை ஸ்நானம் செய்து பூஜை முடிந்தவுடனே அதில் இரண்டு இலைகளை எடுத்துத் தின்றுவிடு. தவறாதே!'' மேற்கண்டவாறு கட்டளை கொடுத்துவிட்டுப் பராசக்தி மறைந்து போயினள்.

காலையில் எழுந்து அந்தப் பச்சிலையைப் பார்க்கப் போனேன். வானத்திலிருந்து ஒரு காகம் இறங்கிற்று. அது அந்தப் பச்சிலையைக் கொத்தி உடனே தரையில் மாண்டு விழக் கண்டேன். தேவியின் கருத்தை அறிந்துகொண்டேன். இன்று பகல் பத்து நாழிகைக்கு அந்த இலைகளை நான் தின்று பரலோகம் சென்று விடுவேன். நின் வரவை எதிர்பார்த்து அங்கும் கன்னிகையாகவேயிருப்பேன். நீ உனது தர்மங்களை நேரே நிறைவேற்றி மாதாவுக்கு திருப்தி செய்வித்த பிறகு அவள் உன்னை நான் இருக்குமிடம் கொண்டு சேர்ப்பாள். போய் வருகிறேன். ராஜா! ராஜா! என்னை மறக்காதே. வந்தே மாதரம்".

இக் கடிதத்தைப் படித்துப் பார்த்தவுடன் மூர்ச்சை போட்டு விழுந்து விட்டேன்.

### அத்தியாயம் - 3

மீனாம்பாளுடைய "மரண ஓலை" கிடைத்ததின் பிறகு இரண்டு வருஷங்கள் கழிந்துவிட்டன. இதனிடையே எனக்கு நிகழ்ந்த அனுபவங்களை யெல்லாம் விஸ்தாரப்படுத்திக் கொண்டு போனால் பெரிய புராணமாக வளரும். சுருக்கமாகச் சொல்லுகிறேன். அந்த ஆற்றாமையால் வெளியேறிய நான் அப்படியே காஷாயம் தரித்துக்கொண்டு துறவியாக வடநாட்டிலே ஸஞ்சாரம் செய்து வந்தேன். "வந்தே மாதர" தர்மத்தை மட்டிலும் மறக்கவில்லை. ஆனால் என்னை சர்க்கார் அதிகாரிகள் பிடித்துச் சிறையிடும் படியான முயற்சிகளிலே நான் கலக்கவுமில்லை; ஜனங்களுக்குள் ஒற்றுமையும் பலமும் ஏற்படுத்தினால், ஸ்வதந்திரம் தானே சித்தியாகும் என்பது என்னுடைய கொள்கை. காரணத்தை விட்டுப் பயனைச் சீறுவதில் என் மனங்குவியவில்லை. அங்கங்கே சில சில பிரசாரங்கள் செய்ததுண்டு. இதுபற்றி, சில இடங்களில் என்னைப் போலீஸார் தொடரத் தலைப்பட்டார்கள். இதனால் நான் ஜனங்களிடையே நன்றாகக் கலந்து நன்மைகள் செய்துகொண்டு போக முடியாதபடி பல தடைகள் ஏற்பட்டன. ஆகவே, எனது பிரசங்கங்களிலிருந்து எனது நோக்கத்திற்கு அனுகூலத்திலும் பிரதிகூலமே அதிகமாக விளையலாயிற்று. இதையும் தவிர எனது பிரசங்கங்களைக் கேட்டு ஜனங்கள் மிகவும் வியப்படைவதையும் மற்றவர்களைக் காட்டிலும் எனக்கு அதிக உபசாரங்கள் செய்வதையும் கண்டு உள்ளத்திலே கர்வம் உண்டாகத் தலைப்பட்டது.

"இயற்கையின் குணங்களிலிருந்து செய்கைகள் பிறக்கின்றன. மூடன் "நான் செய்கின்றேன்'' என்று கருதுகின்றான்'' என்ற பகவத்கீதை வாக்கியத்தை அடிக்கடி மனனஞ் செய்து கொண்டேன். இந்த வீண் கர்வம், நாளுக்கு நாள் மிகுதியடைந்து என்னை விழுங்கி, யாதொரு காரியத்திற்கும் பயன்படாமற் செய்து விடுமோ? என்ற அச்சம் உண்டாயிற்று. வெளிக்குத் தெரியாமல் எவருடைய மதிப்பையும், ஸன்மானத்தையும் எதிர்பார்க்காமல் ஸாதாரணத்தொண்டு இழைப்பதற்கு என்னை மாயா வைத்திருக்கிறாள் என்பதை அறிந்து கொண்டேன். எனவே, பிரசங்கக் கூட்டங்களில் சேர்வதை நிறுத்தி விட்டேன். சில தினங்களுக்கு அப்பால், எனக்குப் போலீஸ் சேவகர்கள் செய்யும் உபசாரங்களும் நின்று போய்விட்டன. பாதசாரியாகவே பல இடங்களில் சுற்றிவிட்டு, பலபல தொழில்கள் செய்துகொண்டு லாஹூர் நகரத்துக்குப் போய்ச் சேர்ந்தேன்.

அங்கே லாலா லஜபதிராய் போன்ற பலரைப் பார்க்க வேண்டுமென்ற இச்சை ஜனித்தது. அவரைப் போய்க் கண்டதில், அவர் என்னிடம் நம்பிக்கை கொண்டவராகி, கோசல நாட்டுப் பிரதேசங்களில் கொடிய பஞ்சம் பரவியிருக்கிறதென்றும், பஞ்சத்தில் கஷ்டப்படும் ஜனங்களுக்குச் சோறு-துணி கொடுக்க வேண்டுமென்ற கருத்துடன் தாம் நிதிகள் சேர்த்து வருவதாகவும், பல வாலிபர்கள் தம்மிடமிருந்து திரவியங் கொண்டுபோய்ப்



பஞ்சமுள்ள ஸ்தலங்களில் இருந்து உழைத்து வருவதாகவும் தெரிவித்துவிட்டு, ''நீரும் போய் இவ்விஷயத்தில் வேலை செய்யக் கூடாதா?'' என்று கேட்டார்.

ஆ! ராமச்சந்திரன் அரசு செலுத்திய நாடு! வால்மீகி முனிவர் புகழ்ந்து போற்றிய நாடு! அங்கு, ஜனங்கள் துணியும் சோறுமில்லாமல், பதினாயிரக் கணக்காகத் தவிக்கிறார்கள்! அவர்களுக்கு உதவி செய்யப் போவாயா என்று என்னைக் கேட்கவும் வேண்டுமா? அவர்களெல்லோரும் எனக்குத் தெய்வங்களல்லவா? அவர்களுக்கு வேண்டியன செய்ய முடியாவிட்டால், இந்தச் சதையுடம்பை எதன் பொருட்டாகச் சுமக்கிறேன்? லாலாவிடம் அனுமதி பெற்றுக்கொண்டு போய்ச் சிறிது காலம் அந்தக் கடமையைச் செய்துகொண்டு வந்தேன். அங்கு கண்ட காட்சிகளைப்பற்றி எழுத வேண்டுமா? எழுதுகிறேன். கவனி. தேவலோகத்தைப் பற்றிக் கேள்வியுற்றிருக்கிறாயா? சரி. நரகத்தைப் பற்றிக் கேள்வியுற்றிருக்கிறாயா? சரி. தேவலோகம் நரகலோகமாக மாறியிருந்தால் எப்படி தோன்றுமோ, அப்படித் தோன்றியது, பகவான் ராமச்சந்திரன் ஆண்ட பூமி. நான் அங்கிருந்த கோரங்களையெல்லாம் உங்களிடம் விரித்துச் சொல்ல வேண்டும். புண்ணிய பூமியைப் பற்றி இழிவுகள் சொல்வதினால் ஒருவேளை சிறிது பாவம் உண்டாகக்கூடும். அந்தப் பாவத்தைத் தவிர வேறென்ன பயன் கிடைக்கப்போகிறது? உன்னால் எனது தாய் நாட்டிற்கு என்ன பயன் கிடைக்கப்போகிறது? எழுந்திருந்துவா, பார்ப்போம். எத்தனை நாள் உறங்கி இப்படி அழியப்போகிறீர்களோ? அட பாப ஜாதியே, பாப ஜாதியே! இது நிற்க. ஓரிரண்டு மாதங்களுக்கு அப்பால், லாலா லஜபதிராய் எங்களுக்குக் கடிதம் எழுதி, இனி அந்த வேலை போதும் என்று கட்டளை பிறப்பித்துவிட்டார்.

கோசல நாட்டுப் பிரதேசங்களில் பஞ்சத்தின் சம்பந்தமாக நான் வேலை செய்த சில மாதங்களில், ஏற்கனவே என் மனதில் நெடுங்காலமாக வேரூன்றியிருந்த ஒரு சிந்தனை பலங்கொண்டு வளரலாயிற்று. தணிந்த வகுப்பினரின் நன்மை-தீமைகளிலே, நமதுநாட்டில் உயர்ந்த வகுப்பினரென்று கூறப்படுவோர் எவ்வளவு தூரம் அசிரத்தையும், அன்னியத் தன்மையும் பாராட்டுகிறார்கள் என்பதை நோக்குமிடத்து எனது உள்ளத்தில் மிகுந்த தளர்ச்சி உண்டாயிற்று. தென்னாட்டைப் போலவே வடநாட்டிலும் கடைசி வகுப்பினர் என்பதாகச் சிலர் கருதப்படுகின்றனர். தென் நாட்டைப்போலவே வடநாட்டிலும், இந்த வகுப்பினர் பெரும்பாலும் விவசாயத் தொழிலையே கைக்கொண்டிருக்கிறார்கள். உழவுத் தொழில் உடைய இவர்கள் சாஸ்திரப்படி வைசியர்கள் ஆகவேண்டும். ஆனால் இவர்களிலே பலர் மாட்டிறைச்சி தின்பது முதலிய அனாசாரங்கள் வைத்துக் கொண்டிருப்பதால், ஹிந்து ஜாதி இவர்களைத் தாழ்வாகக் கருதுகின்றது. ஹிந்து நாகரிகத்திலே, பசுமாடு மிகப் பிரதானமான வஸ்துக்களிலே ஒன்று. ஹிந்துக்களின் நாகரிகம் விவசாயத் தொழிலைப் பொறுத்து நிற்கின்றது. விவசாயத் தொழிலுக்குப் பசுவே ஜீவன். ஆதலால், ஹிந்துக்கள் புராதனகால முதலாகவே கோ மாம்ஸத்தை வர்ஜனம் செய்துவிட்டார்கள். ஒரு சிறு பகுதி மட்டும் வர்ஜனம் செய்யாதிருப்பதுகண்டு, ஜாதிப் பொதுமை அப்பகுதியைத் தாழ்வாகக் கருதுகின்றது. இது முற்றிலும் நியாயம். ஆனால், பஞ்சம் நோய் முதலிய பொதுப்பகைவருக்கு முன்பு, நமது உயர்வு-தாழ்வுகளை விரித்துக்கொண்டு நிற்பது மடமை. தாழ்ந்த ஜாதியாரை நாம் மிதமிஞ்சித் தாழ்த்தி விட்டோம். அதன் பயன்களை நாம் அனுபவிக்கிறோம். "ஹிருதயமறிந்திடச் செய்திடுங் கர்மங்கள் இகழ்ந்து பிரிந்துபோமே?"

"முற்பகல் செய்யிற் பிற்பகல் விளையும்" நாம் பள்ளர் பறையருக்குச் செய்வதை யெல்லாம், நமக்கு அன்னிய நாடுகளில் பிறர் செய்கிறார்கள். நமது சிருங்ககிரி சங்கராச்சாரியாரும், வானமாமலை ஜீயர் ஸ்வாமிகளும் நெட்டால், திரான்ஸ்வால் தேசங்களுக்குப் போவார்களானால் ஊருக்கு வெளியே சேரிகளில் வாசம் செய்ய வேண்டும். ஸாதாரண மனிதர்கள் நடக்கும் ரஸ்தாக்களில் நடக்கக் கூடாது. பிரத்யேகமாக விலகி நடக்கவேண்டும். பல்லக்குகள், வண்டிகள், இவற்றைப்பற்றி யோசனையே வேண்டியதில்லை. சுருக்கம்; நாம் நமக்குள்ளேயே ஒரு பகுதியாரை நீசர்களென்று பாவித்தோம்; இப்போது நம்மெல்ரோரையுமே உலகத்தார் மற்றெல்லா நாட்டினரைக் காட்டிலும் இழிந்த நீசர்களாகக் கருதுகிறார்கள். நம்முள் ஒரு வகுப்பினரை நாம் தீண்டாத வகுப்பினர் என்று விலக்கினோம்; இப்போது வேத மார்க்கஸ்தர் மகம்மதியர் என்ற இருபகுதி கொண்ட நமது ஹிந்து ஜாதி முழுதையுமே உலகம் தீண்டாத ஜாதி என்று கருதுகிறது. உலகத்தில் எல்லா ஜாதியாரிலும் வகுப்புக்கள் உண்டு. ஆனால் தீராத பிரிவுகள் ஏற்பட்டு ஜாதியைத் துர்பலப்படுத்தி விடுமானால், அதிலிருந்து நம்மைக் குறைவாக நடத்துதல் அன்னியர்களுக்கு எளிதாகிறது. ''ஊர் இரண்டுபட்டால் கூத்தாடிக்குக் கொண்டாட்டம்''.

1200 வருடங்களுக்கு முன்பு, வடநாட்டிலிருந்து மகம்மதியர்கள் பஞ்சாப் நாட்டில் பிரவேசித்த போது நம்மவர்களின் இம்சை பொறுக்க முடியாமல் வருந்திக் கொண்டிருந்த பள்ளர்-பறையர் பேரிகை கொட்டி, மணிகள் அடித்துக் கொண்டுபோய் எதிரிகளுக்கு நல்வரவு கூறி அவர்களுடன் கலந்துகொண்டதாக இதிஹாஸம் சொல்லுகின்றது. அப்போது நமது ஜாதியைப் பிடித்த நோய் இன்னும் தீராமலிருக்கிறது. பஞ்சத்தில் பெரும்பாலும் பள்-பறை வகுப்பினரே மடிந்து போகிறார்கள். இதைப்பற்றி மேற்குலத்தார்கள் வேண்டிய அளவு சிரத்தை செலுத்தாமலிருக்கின்றனர். எங்கிருந்தோ வந்து ஆங்கிலேயப் பாதிரிகள் பஞ்சம் பற்றிய ஜனங்களுக்குப் பலவித உதவிகள் செய்து, நூற்றுக்கணக்கான மனிதர்களையும், முக்கியமாக - திக்கற்ற குழந்தைகளையும், கிறிஸ்து மதத்திலே சேர்த்துக் கொள்ளுகிறார்கள். ஹிந்து ஜனங்களின் தொகை வருஷந்தோறும் அதிபயங்கரமாகக் குறைந்து கொண்டு வருகிறது. மடாதிபதிகளும், ஸந்நிதானங்களும் தமது தொந்தி வளர்வதை ஞானம் வளர்வதாகக் கொண்டு ஆனந்த மடைந்து

வருகின்றனர். ஹிந்து ஜனங்கள்! ஹிந்து ஜனங்கள்! நமது இரத்தம், நமது சதை, நமது எலும்பு, நமது உயிர்-ஹிந்து ஸ்தானத்து ஜனங்கள்-ஏனென்று கேட்பாரில்லாமல் பசிப்பிணியால் மாய்ந்து போகின்றனர்.

கோ மாமிசம் உண்ணாதபடி அவர்களைப் பரிசுத்தப்படுத்தி, அவர்களை நமது ஸமூகத்திலே சேர்த்து அவர்களுக்குக் கல்வியுந் தர்மமுந் தெய்வமும் கொடுத்து நாமே ஆதரிக்க வேண்டும். இல்லாவிட்டால், அவர்களெல்லோரும் நமக்குப் பரிபூர்ண விரோதிகளாக மாறிவிடுவார்கள். இந்த விஷயத்திலே எனது சிறிய சக்திக்கு இயன்றவரை முயற்சிகள் செய்யவேண்டும் என்ற அவா எனது உள்ளத்தில் வளரலாயிற்று. வங்கநாட்டில் அசுவினி குமார தத்தர் என்ற தேச பக்தர் ஒருவர் இருப்பதாகவும், அவர் இந்தப் பிரதேசங்களில் நாம் ''சூத்திரர்'' (பெயர் மட்டில் சூத்திரர்) என்று கூறப்படும் பள்ளர்களை ஸமூக வரம்பினுள்ளே சேர்த்து உயர்வுபடுத்த முயற்சிகள் செய்வதாகவும் கேள்விப் பட்டேன். அவரைப் பார்க்க ஆசை உண்டாயிற்று.

## அத்தியாயம் - 4

கல்கத்தாவுக்கு வந்து சில தினங்கள் இருந்துவிட்டு பாரிஸாலுக்குப் போய்ச் சேர்ந்தேன். அங்கு போய் வழி விசாரணை செய்துகொண்டு அசுவினிகுமார தத்தருடைய வீட்டுக்குப் போய்ச் சேர்ந்தேன். வீட்டு வாயிலில் ஒரு வங்காளி பாபு நின்று கொண்டிருந்தார். அவரிடம் ''அசுவினி பாபு இருக்கிறாரா?'' என்று கேட்டேன். ''இல்லை நேற்றுத்தான் புறப்பட்டுக் காசிக்குப் போயிருக்கிறார்'' என்றார், ''அடடா?'' என்று சொல்லி திகைத்து நின்றேன். காஷாய உடையைக் கண்ட அந்த பாபு உபசார மொழிகள் கூறி உள்ளே அழைத்துப்போய், தாகசாந்தி செய்வித்துவிட்டு, ''யார்'' "எவ்விடம்" என்பதையெல்லாம் விசாரணை செய்தார். நான் எனது விருத்தமெல்லாம் தெரிவித்துவிட்டு, என் மனதிலிருந்த நோக்கத்தையும் சொன்னேன். "பாரும் பாபு, நம்மில் ஆறில் ஒரு பங்கு ஜனங்களை நாம் தீண்டாத ஜாதியாக வைத்திருப்போமானால் நமக்கு ஈசன் நல்ல கதி கொடுப்பாரா?'' என்று என் வாயிலிருந்து வாக்கியம் கேட்டவுடனே அவர் முகத்தில் மிகுந்த வருத்தம் புலப்பட்டது. முகத்தைப் பார்த்தால் கண்ணீர் ததும்பி விடும்போலிருந்தது. தீண்டாத வகுப்பினரின் நிலையைக் கருதித்தான் இவ்வளவு பரிதாபமடைகிறார் போலும்என்று நான் நினைத்து "ஐயா உம்முடைய நெஞ்சு போல் இன்னும் நூறு பேருடைய நெஞ்சு இருக்குமானால் நமது நாடு செம்மைப் பட்டுவிடும்" என்றேன்.

''ஸ்வாமி, தாங்கள் நினைக்கிறபடி, அத்தனை கருணையுடைய நெஞ்சம் எனக்கு இன்னும் மாதா அருள் புரியவில்லை. ஹீன ஜாதியாரைக் காக்க வேண்டும் என்ற விஷயத்தில் எனக்குக் கொஞ்சம் சிரத்தையுண்டு என்பது மெய்யே. அசுவினி பாபுவுடன் நானும் மேற்படி வகுப்பினருக்கு நன்மை செய்வதில் சிறிது உழைத்திருக்கிறேன். ஆயினும், என் முகத்தில் தாங்கள் கவனித்த துக்கக் குறி நம்மில் ஆறிலொரு பங்கு ஜனங்கள் இப்படி அவலமாய் விட்டார்களே என்பதைக் கருதி ஏற்பட்டதன்று. தாங்கள் சொன்ன வாக்கியம் சில தினங்களுக்கு முன்பு இங்கு வந்திருந்த ஒரு மந்த்ராஜி('மந்த்ராஜியம்மாள்' என்பது மதராஸ் பிரதேசத்து ஸ்தீரீ என்று பொருள்படும். 'மதராஸ்' என்பதற்கு வடநாட்டார் மந்த்ராஜ் என்பார்கள்) யம்மாளின் வாயிலிருந்து அடிக்கடி வெளிவரக் கேட்டிருக்கிறேன்.



தாம் அது சொன்னவுடனே எனக்கு அந்த அம்மாளின் நிலை ஞாபகம் வந்தது. அவளுடைய தற்கால ஸ்திதியை நினைத்து வருத்தமுண்டாயிற்று. அடடா! என்ன குணம்! என்ன வடிவம்! இவ்வளவு பாலியத்திலே நமது தேசத்தினிடம் என்ன அபரிமிதமான பக்தி!" என்று சொல்லி திடுக்கென்று பேச்சை நிறுத்தி விட்டார். அப்பால் என் முகத்தை ஓரிரண்டு தடவை நன்றாக உற்று நோக்கினார். அவருடைய பெயர் ஸதீச சந்திரபாபு என்பதாக ஏற்கனவே சொல்லியிருக்கிறார்.

"ஸதீச பாபு, ஏன் இப்படிப் பார்க்கிறீர்?'' என்று கேட்டேன்.

"ஸ்வாமீஜீ, க்ஷமித்துக் கொள்ள வேண்டும். நீங்கள்

ஸந்யாஸீ. எந்த தேசத்தில் பிறந்தவரென்பதைக் கூட நான் இன்னும் தெரிந்து கொள்ளவில்லை. ஆயினும், உங்கள் முகத்தைப் பார்க்கும்பொழுது, அதில் எனக்கு அந்த யுவதியின் உருவம் கலந்திருப்பது போலத் தோன்றுகிறது. உங்களிருவருடைய முகமும் ஒன்று போலிருப்பதாக நான் சொல்லவில்லை. உங்கள் முகத்தில் எப்படியோ அவளுடைய சாயல் ஏறியிருப்பது போலத் தோன்றுகிறது" என்றார்.

மதராஸ் பக்கத்து யுவதியென்று அவர் சொன்னவுடனேயே என் மனதில் ஏதோ ஒருவிதமான பதைபதைப்பு உண்டாயிற்று. அதன் பின்னிட்டு, அவர் சொன்ன வார்த்தைகளைக் கேட்டவுடன், அந்தப் பதைபதைப்பு மிகுதியுற்றது. ஸந்யாஸி உடை தரித்து இருந்தேன். நெடுநாளாகத் துறவையே ஆதரித்து வந்திருக்கிறேன். வேஷத்திலென்னடா இருக்கிறது கோவிந்தா, வேஷத்திலென்ன இருக்கிறது?

"மீனாம்பா?-அட, போ! மீனாம்பாள் இறந்துபோய் இரண்டு வருஷங்களுக்கு மேலாகிறதே?-ஐயோ, எனது கண்மணி என்ன கஷ்டத்துடன் இறந்தாள்?"-என்பதாக, ஒரு க்ஷணத்திலே மனப்பேய் ஆயிரம் விதமாகக் கூத்தாடிற்று.

"ஸதீச பாபு! நானும் மதராஸ் பக்கத்திலே ஜனித்தவன் தான். நீர் சொல்லிய யுவதியைப் பற்றிக் கேட்கும்போது, எனக்குத் தெரிந்த மற்றொரு பந்துவைப் பற்றி ஞாபகம் வருகிறது, நீர் சொல்லிய பெண் யார்? அவள் பெயரென்ன? அவள் இப்போது எங்கே இருக்கிறாள்? அவள் இங்கே என்ன நோக்கத்துடன் வந்திருந்தாள்? அவளுடைய தற்கால ஸ்திதியைக் குறித்து உமக்கு வருத்தமுண்டாவதேன்? அவளுக்கு இப்போது என்ன கஷ்டம் நேரிட்டிருக்கிறது? எனக்கு எல்லாவற்றையும் விவரமாகத் தெரிவிக்க வேண்டும்" என்றேன்.

கதையை விரிக்கத் தொடங்கினார் ஸதீச சந்திர பாபு ஒவ்வொரு வாக்கியமும் என் உள்ளத்திலே செந்தீக் கனலும் இரும்புத் துண்டுகளை எறிவது போல் விழுந்தது. அவர் சொல்லிய கதையினிடையே என்னுள்ளத்தில் நிகழ்ந்தனவற்றையெல்லாம் இடையிட்டுக் கொண்டு போனால் படிப்பவர்களுக்கு விரஸமாயிருக்கும் என்று அஞ்சி, இங்கு அவர் சொல்லிய விஷயங்களை மட்டிலும் குறிப்பிடுகிறேன். என் மனத் ததும்புதல்களைப் படிப்பவர்கள் தாமே ஊகத்தாற் கண்டுகொள்ள வேண்டும். ஸதீச பாபு சொல்லலாயினர்:-

"அந்த யுவதிக்குத் தாஞ்சோர்". அவள் பெயர் எனக்குத் தெரியாது. நாங்கள் எல்லோரும் அவளைத் "தீன மாதா" என்று பெயர் சொல்லியழைப்போம். அவளுடைய உண்மைப் பெயர் அகுவினி பாபுவுக்கு மாத்திரந்தான் தெரியும். ஆனால், அந்த தேவியின் சரித்திரத்தை எங்களுக்கு அகுவினி பாபு அடிக்கடி சொல்லியிருக்கிறார். அதை உம்மிடம் சொல்லுகிறேன் கேளும். அவள் ஒரு போலீஸ் பென்ஷன் உத்தியோகஸ்தருடைய குமாரியாம். அவளது அத்தை மகனாகிய ஒரு மந்த்ராஜ் நகரத்து வாலிபனுக்கு அவளை விவாகம் செய்து கொடுக்க வேண்டுமென்று தீர்மானம் செய்யப்பட்டிருந்ததாம். அவ்வாலிபன் "வந்தே மாதரம்" கூட்டத்திலே சேர்ந்துவிட்டான். அதிலிருந்து, அவள் தகப்பன் அவளை வேறொரு போலீஸ் உத்தியோகஸ்தனுக்கு மணம்புரிவிக்க ஏற்பாடு செய்தான். கடைசித் தருணத்தில் அவள் கனவில் ஏதோ தெய்வத்தின் கட்டளை பெற்று ஒரு பச்சிலையைத் தின்றுவிடவே, அவளுக்குப் பயங்கரமான ஜ்வர நோய் கண்டு விவாகம் தடைப்பட்டுப் போய்விட்டது. அப்பால், தகப்பானாரும் இறந்து போய்விட்டார். இதனிடையே அவளுடைய காதலனாகிய மந்த்ராஜ் வாலிபன், என்ன காரணத்தாலோ, அவள் இறந்துவிட்டதாக எண்ணி, ஸந்யாஸம் வாங்கிக்கொண்டு வெளியேறி விட்டானாம்-"

"ஏழை மனமே, வெடித்துப்போய்விடாதே, சற்றுப் பொறு" என்று என்னால் கூடியவரை, அடக்கிப் பார்த்தேன். பொறுக்க முடியவில்லை. "ஐயோ!, மீனா! மீனா!" என்று கூவினேன். பிறகு "ஸதீச பாபு, அவளுக்கு இப்போது என்ன கஷ்டம் நேரிட்டிருக்கிறது? சொல்லும், சொல்லும்" என்று நெரித்தேன்.

ஸதீச சந்திரனுக்கு உளவு ஒருவாறு துலங்கிவிட்டது. "இப்போது ஒன்றுமில்லை. சௌக்கியமாகத்தானிருக்கிறாள்" என்றார்.

"இல்லையில்லை. என்னிடம் நீர் உண்மை பேசத் தயங்குகிறீர். உண்மை தெரிந்தால் நான் மிகத் துன்பப்படுவேன் என்று எண்ணி நீர் மறைக்கிறீர். இதுவே என்னை நரக வேதனைக்கு உட்படுத்துகிறது. சொல்லிவிடும்" என்று வற்புறுத்தினேன்.

மறுபடியும் ஸதீச பாபு ஏதோ பொருளற்ற வார்த்தைகளைப் போட்டு குழப்பி எனக்கு ஸமாதான வசனம் சொல்லத் தலைப்பட்டார்.

"பாரத தேவியின் ஹிருதயத்தின் மீதும், பகவத் கீதையின் மீதும் ஆணையிட்டிருக்கிறேன். என்னிடம் உண்மையை ஒளியாமல் சொல்லும்" என்றேன். இந்த ஸத்தியம் நவீன வங்காளத்தினரை எவ்வளவு தூரம் கட்டுப்படுத்தும் என்பது எனக்குத் தெரியும். இங்ஙனம் நான் ஆணையிட்டதிலிருந்து அவருக்குக் கொஞ்சம் கோபம் உண்டாயிற்று.

"போமையா, மூட ஸந்யாஸி, என்ன வார்த்தை சொல்லி விட்டீர்! இதோ, உண்மை தெரிவிக்கிறேன். கேட்டுக் கொள்ளும். அந்தப் பெண், இங்கு நாமசூத்திரர்களைப் பஞ்சத்திலிருந்து மீட்கப் பாடுபட்டதில், தீராத குளிர் ஜ்வரங்கண்டு, வைத்தியர்கள் சமீபத்தில் இறந்துவிடுவாள் என்று சொல்லி விட்டனர். அதற்குமேல் அவள் காசியில் போய் இறக்க விரும்பியது பற்றி, அகுவினி பாபு அவளைக் காசிக்கு அழைத்துச் சென்றிருக்கிறார். உண்மை சொல்லிவிட்டேன். போம்" என்றார்.

"காசிக்கா?"

''ஆம்''.

"காசியில் எங்கே?"

"அஸி கட்டத்தில்"

"அஸீ கட்டத்தில் எந்த இடம்?"

"அஸிக்குத் தெற்கே "நர்வா"என்ற இடமிருக்கிறது. அதில் பல தோட்டங்களும் பங்களாக்களும் உண்டு. அதில் தைப்பூர் மஹாராஜா பங்களாவில் "அசுவினி பாபு" இறங்கியிருக்கிறார்.

"ரயில் செலவுக்குப் பணம் கொடும்" என்றேன். ஒரு பத்துரூபாய் நோட்டை எடுத்து வீசியெறிந்தார்; மானத்தைக் கண்டதார், மரியாதையைக் கண்டதார்; அங்கிருந்து அந்த க்ஷணமே வெளியேறி விட்டேன். வழியெல்லாம் தின்பதற்கு நெஞ்சத்தையும் அருந்துவதற்குக் கண்ணீரையுமே கொண்டவனாய்க் காசிக்குப் போய்ச்சேர்ந்தேன்.

## அத்தியாயம் - 5

காசியில் ஹனுமந்த கட்டத்திலே எனகுகுத் தெரிந்தவர்கள் இருக்கிறார்கள். எனது நண்பர் ஒருவருடைய பந்துக்கள் அங்கு வாசஞ் செய்கின்றர். இதைப் படிக்கும் தமிழர்கள் காசிக்குப் போயிருப்பதுண்டானால், நான் சொல்லப்போகிற இடம் அவர்களுக்குத் தெளிவாகத் தெரியும். தமிழர்களெல்லோரும் பெரும்பாலும் ஹனுமந்த கட்டத்திற்கே போய் இறங்குவதுண்டு. அங்கு கீழ் மேற்சந்து ஒன்றிருக்கிறதல்லவா? அதில் கீழ் மேற்கு மூலையிலிருந்து மூன்றாம் வீடு. அந்த வீட்டிற்குச் சிவமடம் என்று பெயர். யாத்திரைக்காரர்கள்போய் இறங்கக் கூடிய வீடுகளைக் காசியிலே மடங்கள் என்கிறார்கள். சிவமடத்தில் போய் இறங்கி ஸ்நானம் செய்துவிட்டு, மடத்தார் கொடுத்த ஆகாரத்தை உண்டபிறகு, அப்பொழுதே அந்த மடத்துப் பிள்ளைகளில் ஒருவரைத் துணைக்கு அழைத்துக் கொண்டு நர்வா கட்டத்திற்குப்போனேன். அங்கே தைப்பூர் ராஜா பங்களா எது என்று விசாரித்து, பங்களாவிற்குப் போய்ச் சேரும்போது இரவு ஏழு மணியாகிவிட்டது. வாயிலில் ஒரு குதிரை வண்டி வந்து நின்றது. அந்த வண்டி புறப்படுந் தருவாயில் இருந்தது. வண்டியின்மேல் ஆங்கிலேய உடை தரித்த ஒரு வங்காளி உட்கார்ந்து கொண்டிருந்தார். வண்டிப்பக்கத்திலே ஒரு கிழவரும் வேறு சிலரும் நின்று கொண்டிருந்தார்கள். அசுவினி குமார தத்தரின் படத்தை நான் பல இடங்களில் பார்த்திருக்கிறபடியால், அந்தக் கிழவர்தான் அசுவினி பாபு என்று தெரிந்துகொண்டேன். நான் போனவுடனே அசுவினி பாபு பக்கத்திலிருந்த மனிதனை நோக்கி, ''யாரோ ஒரு ஸந்யாஸி வந்திருக்கிறார். அவரைத் தாழ்வாரத்தில் வரச்சொல். நான் இதோ வருகிறேன்'' என்றார். தாழ்வாரத்தில் போட்டிருந்த நாற்காலிகளில் நானும் என்னுடன் வந்திருந்த வாலிபனும் போய் உட்கார்ந்தோம். அசுவினி பாபுவும் வண்டிக்குள்ளிருந்தவரும் பேசியது என் செவியில் நன்றாக விழுந்தது.

அசுவினி பாபு: ''டாக்டர் ஸாஹப்! நேற்றைக் காட்டிலும் இன்று சிறிது குணப்பட்டிருப்பதாகவே எனக்குத் தோன்றுகிறது. உமது கருத்தென்ன?"

டாக்டர்: ''மிகவும் துர்ப்பல நிலையிலேதான் இருக்கிறாள். இன்னும் இருபத்து நான்கு மணிநேரம் இருப்பது கஷ்டம், அந்த நேரம் தப்பினால், பிறகு விபத்தில்லை" என்றார்.

காதில் விஷந்தடவிய தீயம்புபோல இந்த வார்த்தை கேட்டது; "மீனா! மீனா! மீனா!" என்று அலறினேன். வண்டி புறப்பட்டுவிட்டது. அதற்குள் நான் என்னை மீறி அலறிய சத்தம் கேட்டு, அசுவினி பாபுவும் அவரைச் சேர்ந்தவர்களும் நான் இருந்த பாரிசமாக விரைந்து வந்தார்கள். அவர் வருதல் கண்டு, நான் மனதை ஒருவாறு தேற்றிக்கொண்டு எழுந்து நின்று வணங்கினேன். அவர் ''ஸ்வாமிக்கு எவ்விடம்? இங்கு வந்த கருத்தென்ன? ஏன் சத்தம் போட்டீர்கள்?" என்று ஹிந்துஸ்தானி பாஷையிலே கேட்டார்.

"பாபு, நான் ஸந்யாஸியல்ல. நான் திருடன், நான் மஹா நிர்பாக்கியமுடைய பாவி.மீனாம்பாள் தம்மிடம் கோவிந்தராஜன் என்ற பெயர் சொல்லியிருப்பாளல்லவா? அந்தப் பாவி நான்தான்" என்றேன்.

உடனே அவர் என்னை மேன்மாடத்திலுள்ள ஒரு அறைக்குத் தனியாக அழைத்துச் சென்றார். அங்கு என்னை நோக்கி, ''நேற்றெல்லாம் நான் உம்மை அடிக்கடி நினைத்துக் கொண்டிருந்தேன். நீர் இங்கு வரக்கூடும் என்ற சிந்தனை எனக்கு அடிக்கடி தோன்றிக் கொண்டிருந்தது" என்றார்.

பிறகு என்னிடம் ''கிழக்கு முகமாகத் திரும்பி உட்காரும் என்றார். அப்படியே உட்கார்ந்தேன். ''கண்ணை மூடிக்கொள்ளும்'' என்றார். இரண்டு கண்களையும் மூடிக்கொண்டேன். பிறகு எனது நெற்றியைக் கையாலே தடவி ஏதோ முணுமுணுத்துக் கொண்டிருந்தார். எனக்கு உறக்கம் வருவது போலிருந்தது.

"அடடா! இன்னும் மீனாம்பாளைப் பார்க்கவில்லை. எனது உயிரினுமினியாள் மரணாவஸ்தையிலிருக்கிறாள். அவளைப் பாக்கும் முன்பாக உறக்கம் வருகிறதே! இவர் என்னை ஏதோ மாயமந்திரத்துக்கு உட்படுத்துகிறார். எனது பிராணரத்தினத்தைப் பார்க்காதபடி கெடுத்துவிட முயலுகிறார். இந்த மாயைக்கு உட்படலாகாது. கண் விழித்து எழுந்து நின்றுவிட வேண்டும்" என்று சங்கற்பம் செய்து கொண்டு, எழுந்து நிற்க முயன்றேன். "ஹூம்" என்றொரு சத்தம் கேட்டது! விழித்து விழித்துப் பார்க்கிறேன்; கண்ணைத் திறக்க முடியவில்லை. மயக்கம் மேன்மேலும் அதிகப்பட்டது. அப்படியே உறங்கி விழுந்துவிட்டேன்.

விழித்த பிறகு, நான் இரண்டுநாள் உறங்கிக்கிடந்ததாகத் தெரிந்தது. பக்கத்திலிருந்த ஒரு



சேவகன் சொன்னான். ''மீனா எங்கே? மீனா சௌக்கியமாயிருக்கிறாளா?'' என்று அந்தச் சேவகனிடம் கேட்டேன். எனக்கு ஒன்றுமே தெரியாது" என்று மறுமொழி கூறினான். சாதாரணமாக எப்போதும் போல இருந்தேனாயின் அந்தச் சேவகனை உதைத்துத்தள்ளி, இடையே வந்தவர்களையெல்லாம் வீழ்த்திவிட்டு மீனாளிருக்குமிடம் ஓடிப்போய்ப் பார்த்திருப்பேன். ஆனால் இந்த நேரம் என்னுடலில் மிகுந்த அயர்வும், உள்ளத்தில் மிகுந்த தெளிவும், அமைதியும் ஏற்பட்டிருந்தன. மனதிலிருந்த ஜ்வரமும் நீங்கிப் போயிருந்தது. "பாரிஸால் கிழவன்" செய்த சூது என்று தெரிந்துகொண்டேன். அரை நாழிகைக்கெல்லாம், அசுவினி பாபு தாமே நானிருந்த அறைக்குள் வந்து, என் எதிரே ஒரு நாற்காலியின் மீது வீற்றிருந்தார். என்னை அறியாமல், எனது இரண்டு கைகளும் அவருக்கு அஞ்சலி புரிந்தன.

''ஓம்'' என்று கூறி ஆசீர்வாதம் செய்தார். ''பால ஸந்யாஸி, கபட ஸந்யாஸி, அர்ஜுன ஸந்யாசி, உன்பக்கம் சீட்டு விழுந்தது" என்றார். மீனா பிழைத்து விட்டாள் என்று தெரிந்துகொண்டேன்.

''முற்றிலும் சௌக்கியமாய் விட்டதா?'' என்று கேட்டேன்.

''பூரணமாக சௌக்கியமாய் விட்டது. இன்னும் ஒரைம்பது வருஷத்திற்குச் சமுத்திரத்திலே தள்ளினாலும் அவளுக்கு எவ்விதமான தீங்கும் வரமாட்டாது" என்றார்.

"அப்படியானால் நான் போகிறேன், அவள் இறந்து போகப்போகிறாள் என்ற எண்ணத்தினாலேதான் என் விரதத்தைக்கூட மறந்து, அவளைப் பார்ப்பதற்காகப் பறந்தோடி வந்தேன். இனி, அவளைப் பார்த்து அவளுடனிருக்க வேண்டும் என்ற வண்ணம் எனக்கில்லை. நான் போய் வருகிறேன்'' என்று சொன்னேன்.

அசுவினி பாபு கடகடவென்று சிரித்துவிட்டு, பக்கத்திலிருந்த சேவகனை நோக்கி, ''இவருக்கு கொஞ்சம் பால் கொணர்ந்து கொடு" என்று ஏவினார். அவன் முகம் கழுவ நீரும் அருந்துவதற்குப் பாலும் கொணர்ந்து கொடுத்தான். அந்தப் பாலை உட்கொண்டவுடனே, திருக்குற்றாலத்து அருவியில் ஸ்நானம் செய்து முடித்ததுபோல, எனது உடலிலிருந்து அயர்வெல்லாம் நீங்கிப்போய் மிகுந்த தெளிவும் சௌக்கியமும் அமைந்திருக்கக் கண்டேன்.

"இப்பொழுது என்ன சொல்லுகிறாய், புறப்பட்டுப் போகிறாயா?'' என்று அசுவினிபாபு புன்னகையுடன் கேட்டார்.

''அவளை ஒருமுறை பார்த்துவிட்டு, அவளிடம் விடைபெற்றுக் கொண்டு செல்லுகிறேன்" என்றேன்.

திடீரென்று அசுவினிபாவுவின் முகத்தில் இருந்த புன்னகை மாறி சிரத்தா ரூபம் தோன்றியது. அப்பால் என்னிடம், ''மகனே, நீ மீனாம்பாளை மணஞ்செய்து கொள்வாய், நீங்களிருவரும் சேர்ந்து வாழ்ந்து முற் காலத்தில் ரிஷியும் ரிஷிபத்தினியுமாக வேத யக்ஞம் செய்ததுபோல, உங்கள் வாழ்நாள் முழுதும் மாதாவின் ப்ரீத்யர்த்தமாக ஜீவயக்ஞம் புரியக் கடவீர்கள்" என்றார்.

"காளி தேவியின் கட்டளை என்னாகிறது?" என்று கேட்டேன். இந்த ஜன்மத்தில் 'நீ கோவிந்தராஜனை மணஞ்செய்து கொள்ளலாகாது'' என்று காளிதேவி மீனாம்பாளுக்குக் கூறி, அவளை விஷம்



# மகிழ்ச்சி செய்!

- கவிஞர் அறிவுமதி

ஆலைகள்
பெருக்கு

கனி
வளம்
உருக்கு

தொழில்
நிலை
உயர்த்து

அனைத்தும்
சரிதான்

இயற்கையை
மகிழ்ச்சி
செய் !'



---

தின்னும்படியாகக் கட்டளையிட்ட செய்தியை அவருக்கு நினைப்புறுத்தினேன்.

அதற்கு அவர், "அந்த செய்தியை யெல்லாம் நான் அறிவேன். மஹாசக்தியின் கட்டளையை மீனாம்பாள் நன்கு தெரிந்துகொள்ளாமல் உனக்குக் கடிதம் எழுதிவிட்டாள். மீனாம்பாளுடைய ஜன்மம் மாறுபட வேண்டுமென்று அம்மை சொல்லியதின் பொருள் வேறு. அவள் பச்சிலை தின்னும்படி கட்டளையிட்டது, மீனாம்பாளுக்கு ஜ்வரமுண்டாய் தந்தை எண்ணிய விவாகம் தடைபடும் பொருட்டாகவே, அதற்கு முன்பு அவளுடைய ஜன்மம் வேறு. மாதா தெளிவாகத்தான் சொல்லினாள். ஆனாள், மீனாம்பாள் தனக்கு வேண்டாத ஒருவனுடன் விவாகம் நடக்கப்போகிறது என்ற தாபத்தால் படப்படப்புண்டாகி, உனக்கு ஏதெல்லாமோ எழுதிவிட்டாள். நீயும் அவசரப்பட்டு; காஷாயம் தரித்துக் கொண்டுவிட்டாய். உனக்கு ஸந்நியாஸம் குருவினால் கொடுக்கப்படவில்லை. ஆயினும் இதுவெல்லாம் உங்களிருவருடைய நலத்தின் பொருட்டாகவே ஏற்பட்டது. உங்களிருவருக்கும், பரிபூரணமான ஹிருதய சுத்தி உண்டாவதற்கு இப்பிரிவு அவசியமாயிருந்தது. இப்போது நான் போகிறேன். இன்று மாலை நான்கு மணிக்கு பூஞ்சோலையிலுள்ள லதா மண்டபத்தில் மீனாம்பாள் இருப்பாள். உன் வரவிற்குக் காத்திருப்பாள்" என்று சொல்லிப் போய்விட்டார்.

மாலைப் பொழுதாயிற்று. நான் ஸந்யாஸி வேஷத்தை மாற்றி, எனது தகுதிக்கு உரிய ஆடை தரித்துக் கொண்டிருந்தேன். பூஞ்சோலையிலே லதா மண்டபத்தில் தனியாக நானும் எனது உயிர் ஸ்திரீ ரூபங்கொண்டு பக்கத்தில் வந்து வீற்றிருப்பது போலத் தோன்றியவளுமாக இருந்தோம். நான்கு இதழ்கள் கூடின.. இரண்டு ஜீவன்கள் மாதாவின் ஸேவைக்காக லயப்பட்டன. பிரகிருதி வடிவமாகத் தோன்றிய மாதாவின் முகத்திலே புன்னகை காணப்பட்டது.

வந்தே மாதரம்!

- "பாரதியார் கதைகள்"
தொகுப்பிலிருந்து...
வெளியீடு : வானதி பதிப்பகம்
13, தீனதயாளு தெரு,
திநகர், சென்னை-17.

# வாசகர் இதயம்



'முத்தமிழ்க் கலைஞரின் 'வியர்வை' எழுத்தோவியம், முனைவர் 'சிலம்பொலியாரின்' இலக்கியக் கட்டுரை-எல்லாமே அமுதாய்ச் சுவைத்தது.

**- செங்கை பாலதா**
*சின்னக் கலையம்புத்தூர்.*

'தமிழரசு' மே நாள் இதழில் - உழைப்பின் மேன்மை உணர்த்தும் கவிதை, கட்டுரை, கருத்துரை எல்லாமே குவித்துத் திகட்டச் செய்துவிட்டீர்கள். நன்றி.

**- சோலைப்பிரியன்**
*சோலைமா நகர்.*

அவ்வப்போது கரும்புநிகர் கலைஞர் எழுதியவை களையும் வெளியிட வேண்டுகிறேன்.

**- சூலூர் பாரதி**
*கோயம்புத்தூர்-20.*

வெளியே சொல்ல வெட்கப்படுகிற செய்தி களையும் மிக லாவகமாக வெளியிட்ட 'பிள்ளைப் பேறு' மருத்துவக் கட்டுரை பிரமாதம்.

**- சு. நாகராசன்**
*மேலப்பாதி.*

அரசாங்கச் செய்திகளையும், இன்னும் பல சுவையான செய்திகளையும் சேர்த்து 'தமிழரசு'க்கு மேலும் மெருகூட்டலாமே!

**- எம். செந்தில்குமார்**
*சந்தை புதுப்பாளையம்.*

பாவேந்தர் கண்ட பறவைகளைப் பற்றிய கட்டுரை தேனாய் இனித்தது.

**- கே. கோடீஸ்வரன்**
*தக்களூர்.*

பல வருஷமாகத் 'தமிழரசு' படித்து வருபவன் நான்; இப்போது அரசு மட்டுமல்ல - 'தமிழரசும்' புதிய பொலிவோடு இருக்கிறது; போற்றுகிறேன்!

**- கே. கோபாலன்**
*தொட்டியபாளையம்.*

'தமிழரசு' ஏன் வருகிறது என்றிருந்த நிலையை மாற்றி, எப்போது வரும் என்று ஏங்க வைத்து விட்டீர்களே!

**- தமிழ்ப்பரிதி**
*நெல்லிக்குப்பம்.*

திரு. வி.க.வுக்கு' திருநீறு கொடுத்து உபசரித்த பெரியாரின் விருந்தோம்பும் பண்பு வியக்கவைத்தது.

**- ஆரூர் அசோக்மேத்தா,**
*தேவர்கண்ட நல்லூர்.*

'தமிழரசைத்' தமிழிலேயே முகவரி எழுதி அனுப்புகிறீர்கள்; இதுகண்டு மிகவும் மகிழ்ச்சி யடைந்தேன்!

**- வே. இராசவேலன்**
*வாழியூர்.*



# மண்ணின் பண்

- சிபிச் செல்வம்





வனம் முழுதும் ரணம்
காற்றின் பாடல் காதுகளில் வலிக்க
எரிந்து கரிந்த மரங்களின் மீதம்
புல் வெளி யாவும் பாழ்.
காட்டெருமை துள்ளி வர
பதறி
விலகி ஓடும் மனிதக் கூட்டம்.
சோலைக் காடுகளில் சுந்தர மௌனம்.
கூவியழைக்கும் குயில்
குரல்களிடையில் நெரிபடும்
அடர் வனம் செயற்கை
பார்சன் பள்ளத் தாக்குகளில்
நீர் கசியும் புதர்களிடையே



பெரணி செஞ்சிவப்புக் காளான்

விஷம் விரல் படா

ஏக்கம் பிடுங்கி ரசிக்கும்.

மரம் வளர்

வளர் வனம்

வா.

ரேயான் கூழ் விற்க.

டாலர்க்கு கரன்சி மாறு கொள்வோம்.

## ஆறு

மிதந்து வரும் பிணங்கள்

சுழன்றோடி வரும் கழிவுகள்

திதிக்கு விட்ட இலைகள்

கரைந்தோடும் சாம்பல்கள்

குளித்துத் துவைத்தவர்களின்

ஆண்கள் பெண்கள்

அழுக்கு உள் வாங்கி

கரை யொதுக்கித்

தன் வழியே

தான் ஓடும் ஆறு.

## இலையுறங்கும் நேரம்

காட்டின் அடர் அமைதியில்
கவுதாரி விதவித ராகமிசைக்கும்
பறவைகளின் குரல்களில் பரவசம்
பூச்சிகள் சப்திக்கும் வெளி
எருக்கம் பஞ்சு பறந்து போகிறது
வரப்பில் புதுமண் தள்ளி எலிவளை
இலைகள் உறங்கும் நேரம்
வண்ணாத்திப் பூச்சி படபடத்து
சிறகசைத்தவாறே பூக்களுறிஞ்சி
காற்றின் வாசிப்பில் பனையோலை
துணையிருக்கும் காவல் பொம்மை.

## மைனாப் பாடல்

போதும்.
மனிதர்கள் நொறுக்கும் இறுக்கும்.
இந்தப் பாறை பிளந்து உள்ளிழுத்து மூட
அந்த மலை விழுங்கிச் செரிக்க
கடல் ஆழத்தில் அமிழ்த்தப்
போகு முன்;
ஒரு முறை யேனும்
மஞ்சள் மூக்கழகு மைனா
வாலாட்டிசைத்த பாடல் கேள்.
போதுமா யிவை?

காலடியோசை காதுகளில் அதிர
குழி முயல் குதித் தோடி மறைய
வேட்டை நாய் பாய்ந்து துரத்த
சப்பாத்திக் கள்ளி மலரிதழ் விரிக்க
அயல் மகரந்தப் பொடி பறக்க
வேலிக் கள்ளியில் படர்ந்த கொடி
குன்றிமணி வெடித்து மண்ணில் புதைய
பச்சைப் பனையோலை இசைக்கும்

நுங்கும் பதநீரும் தாகம் தீர்க்க
கள்ளும் கவிதையும்
சொல்லும் சுகமும் துளிர்க்கின்றன.
இலையுதிர்த்த மரக்கிளை நுனியிலை
தூரி யாட்ட
இன்னமும் ஒட்டியிருக்கிறது
உயிர்!


-திருஞி
*பெரிய கொல்லப்பட்டி*
*மல்ல சமுத்திரம் (அஞ்சல்)*
*சேலம் - 637 503.*

*வெளியிட்ட "சாம்பல் காடு"*
*புத்தகத்திலிருந்து.*


படிக்க...பயன்பெற...பாதுகாக்க

**தமிழரசு**

சந்தா விவரம்

'தமிழரசு' தமிழ் (மாதம் இருமுறை)

ஆண்டு சந்தா ... ரூ.72

'தமிழரசு' ஆங்கிலம் (மாதம் ஒருமுறை)

ஆண்டு சந்தா ... ரூ.36

சந்தாத் தொகையை - மணியார்டர் அல்லது
பாங்க் டிராப்ட் மூலம் அனுப்ப வேண்டிய முகவரி:
உதவி இயக்குநர்
'தமிழரசு'
அரசினர் தோட்டம், சென்னை - 600 002

இயற்கை அன்னையும் மற்ற அன்னையரைப் போலத்தான். பிள்ளைகளின் தவறைப் பொறுத்துக் கொள்ளக் கூடியவள்தான். ஆனால் குழந்தைகளின் குறும்பு எல்லை மீறும்போதீ இயற்கை அன்னை அவைகளைத் தண்டிக்கத் தயங்க மாட்டாள்.

குழந்தைகள் இன்று அன்னையையும் சேர்த்து அழிக்கக்கூடிய அணுகுண்டை வைத்தல்லவா விளையாடிக் கொண்டிருக்கிறார்கள்!

மனிதனுக்குத் தான் வாழும் தலைமுறை பற்றித்தான் கவலை. இயற்கை அன்னைக்கோ தமக்குப் பின்னும் வரப்போகும் பல ஆயிரம் தலைமுறைகள் பற்றிய கவலை.

அதனால் அவளது சீற்றங்களை, சமயங்களில் நாம் எதிர் கொள்ளத்தான் வேண்டும்.

இதைப் புரிந்துகொள்ளாததால்தான் மிகப்பெரிய நாகரீகங்கள் கூடச் சுவடு தெரியாமல் அழிந்துவிட்டன.

மரங்கள் பெருவாரியாக வெட்டப்பட்டதால், பெரும் வெள்ளங்கள் ஏற்பட்டன. பைபிள் இதைக் கடவுளின் கோபம் என்று வர்ணித்தது. இதுபோலவே பல நாடுகளில் ஏற்பட்ட வெள்ளங்களுக்கு ஆங்காங்கு உள்ள கடவுளின் கோபம் என்ற காரணம் பல புராணங்கள் மூலம் கற்பிக்கப்பட்டன.

அப்பொழுது...

ரோமாபுரியில் ரோமப் பொறியியலின் அற்புதத்தால் மனிதக் கழிவுகள் கண்களுக் கெட்டாத் தொலை விற்கு எடுத்துச் செல்லப்பட்டன. அவைகள் நகருக்கு வெளியே உள்ள நீர்வழிகளில் கலந்தன. இறந்த உடல்கள் நகருக்கு வெளியே உள்ள திறந்த குழிகளில் வீசி யெறியப்பட்டன.

விளைவு?

ரோம சாம்ராஜ்யமே நாறத்துவங்கியது; பிளேக் போன்ற கொள்ளை நோய்கள் தலைவிரித்து ஆடின.

# சூழலியல்!

## சுற்றுச் சூழல் நிர்மூலம்

எதைச் சுற்றுச்சூழல் அழிப்பு என்று வர்ணிக்கலாம்?

இப்பொழுது இருக்கும் அல்லது வரப்போகும் தலைமுறைகள் இயற்கையின் உதவியைப் பெற்று, அதோடு இணைந்து வாழும் ஒரு நம்பிக்கைக்கு அபாயம் விளைவிக்கும் எந்தவொரு செயலுமே சுற்றுச்சூழல் அழிப்புதான்.

இந்தக் கோணத்தில் பார்த்தால் வேளாண்மைச் சமுதாயங்களைத் தென்றலுக்கும், தொழில் மயமான சமுதாயங்களைப் புயலுக்கும் ஒப்பிடலாம்.

உலகப் போர்களுக்குப் பிந்தைய வளர்ச்சி கட்டுமுறையற்ற தொழில் நுட்பத்திற்கும், வரைமுறையற்ற உற்பத்திக்கும், ஏகபோக நுகர்தலுக்கும் சமர்ப்பிக்கப்பட்டது. இதனால் மேற்கத்திய முதலாளித்துவ நாடுகளும், கிழக்கு ஐரோப்பியக் கம்யூனிச நாடுகளும் ஒரேமாதிரி பாதிக்கப்பட்டன. அவை இரண்டின் உற்பத்திக் குறிக்கோள்களிலும், செயல்முறைகளிலும் பலத்த வேறுபாடு இருக்கவில்லை. அவை இயற்கையை அள்ள அள்ளக் குறையாத அட்சய பாத்திரமாகக் கருதின; அவைகளுக்குக் கழிவுகள் ஒரு பிரச்சினையாகவே தெரியவில்லை. அவைகளுக்கிடையே இருந்த ஒரே வேறுபாடு-யார் அதைக் கைப்பற்றுவது என்பதுதான்.



மொத்தத்தில்-

மனிதன் தனது குறுகியகால நலன்களுக்காக எதிர்

காலத்தையே அடகு வைக்கத் துணிந்து விட்டான்.

நாம் விரைந்து செயல்படாவிட்டால் அதை மீட்கவே முடியாது.

**செயற்கை உரம்**

மனிதன் வேதியல் பொருட்களுக்குத் தான் அடிமையானதோடு திருப்தியடையவில்லை. தனது நிலங்களையும் செயற்கை உரங்களுக்கு அடிமையாக்கி அழகு பார்த்தான். இது பொருளாதார ரீதியாக செலவு மிக்கது மற்றுமல்லாமல், சூழலியல் ரீதியாகப் பெருங்கேடு விளைவிப்பதும் ஆகும். இவைகளை அடிமைத் தளையிலிருந்து மீட்பதும் கடினம். குறுகிய காலத்தில் செயற்கை உரங்கள் அபரிதமான அறுவடையைத் தரலாம். அதனால் சோம்பேறியாகும் விவசாயி மண் வள பாதுகாப்பை அசட்டை செய்கிறான். அதனால் மண் அரிப்பு அதிகமாகி விடுகிறது. அமெரிக்காவில் 1947ல் விளைந்த அதே தானியங்களை விளைவிக்க இன்று, 5 மடங்கு அதிகமான செயற்கை உரம் தேவைப்படுகிறது.

இது போதாதென்று அடுத்துள்ள சூழலமைப்பு களையும் பாதிக்கும் பக்க விளைவுகளையும் இது ஏற்படுத்துகிறது.

**ஆரோக்கியமான உணவுச் சங்கிலிகள்**

ஆரோக்கியமாக இயங்கிவரும் ஒரு சூழலமைப்பில், தூய-வாழ்வு வாழ்ந்து வரும் ஒரு தனித்துவமான தாவரத்திற்கு என்ன நேர்கிறது ? மண்நுண்ணு யிர்களிடமிருந்து சக்தியைப் பெற்று சாதாரணமாக வளரும் ஒரு புல், பின்னர் மடிந்து, மக்கி நுண்ணுயிர்களால் துகள்துகளாக்கப்படுகிறது.

நுண்ணுயிர்கள் தாவரக் கழிவுகளை உணவாகக் கொள்கின்றன.

தாவரங்கள் நுண்ணுயிர்களைத் தீர்த்துவிடுகின்றன.

சிறுபறவை மற்றும் விலங்கினங்கள் தாவரங்களைக் கடித்துச் சுவைக்கின்றன.

சிறு விலங்கினங்களை மீன் போன்றவை விழுங்கி ஏப்பம் விடுகின்றன.

சிறு மீனைப் பெருமீன் பிடிக்கிறது.

மனிதன் ?

அவன் இதில் எதையுமே விட்டு வைப்பதில்லை!

ஆனால்... அவன் அந்த உணவுச் சங்கிலியை அறுத்து எறிகிறான்.

இறந்த உடல்களை எரிப்பதன் மூலமாகவும், சவப்பெட்டிகளில் போட்டுக் கல்லறைகளில் புதைப்பதன் மூலமாகவும் மனிதன் இந்தச் சங்கிலியை அறுத்து எறிகிறான். புல்லின் இதழ் மண்ணில் இருந்து "கடன்" வாங்கிய சத்து திரும்பவும் மண்ணிற்குப் போகாமல், தடை செய்வதன் மூலம் மனிதன் இயற்கைக்குத் துரோகம் இழைக்கிறான்.

**ஆரோக்கியமற்ற உணவுச் சங்கிலிகள்**

டிடிடி (DDT) போன்ற வேதியல் பூச்சிக் கொல்லிகள், பயிர்களைக் கொல்வதைக் காட்டிலும் அப்பூச்சிகளை உணவாகக் கொள்ளும் உயிரினங்களையே அதிகமாகக் கொல்கின்றன. மேலும் பூச்சிகளின் எண்ணிக்கை கோடிக் கணக்கில் இருப்பதால், நாளடைவில் பூச்சிக்கொல்லிகளுக்குத்தன்னைப் பழக்கப்படுத்திக் கொள்கிறது. ஆனால் அதை உணவாகக் கொள்ளும் உயிரினங்கள், எண்ணிக்கையில் குறைவாக இருப்பதால் அவைகள் வெகுவாகப் பாதிக்கப்படுகின்றன. இதனால் உணவுச் சங்கிலியில் ஒரு சில கண்ணிகள் அறுபடுகின்றன.

பூச்சிக் கொல்லிகள் இயற்கையான "உயிரியல் தடுப்புகளை அழித்துவிடுவதால், புதிய பூச்சியினங்கள் உருவாகின்றன. ஒரு பூச்சியினத்தைத் தின்று வாழும் ஆபத்தில்லாத பூச்சியினங்கள் பூச்சிக்கொல்லிகளால் அழிக்கப்படுவதால், தொல்லை தரும் பூச்சியினங்கள் கட்டுப்படுத்த முடியாத அளவு பெருகிவிடுகின்றன.

செயற்கை உரங்களைப்போலவே, பூச்சிக் கொல்லிகளும் விவசாயிகளின் வேதியல் சார்புத் தன்மையை அதிகமாக்குகிறது. இது சூழலமைப்பைப் பாதிப்பதோடு மட்டுமல்லாது. உணவுச் சங்கிலிகள் மூலமாக மனித உடம்பில் கலந்துவிடுகின்றன. பூச்சிக்கொல்லியான டிடிடி (DDT) தாய்ப்பாலில் கலந்து இருப்பதாகச் சமீபத்திய ஆய்வுகள் நிரூபித்து உள்ளன.

பெரும்பாலான வளர்ச்சியடைந்த நாடுகளில் டிடிடி (DDT) தடை செய்யப்பட்டு உள்ளது. ஆனாலும் அதன் ஒட்டு மொத்த உபயோகம் தினமும் அதிகரித்து வருகிறது. அதனுடைய விளைவுகள் காற்று மற்றும் நீர் மூலமாக உலகெங்கும் பரவி வருகிறது.

-"சூழலியல் - ஓர் அறிமுகம்" என்ற நூலிலிருந்து—
வெளியீடு : சவுத் ஏசியன் புக்ஸ்,
6, தாயார் சாகிப் 2வது சந்து,
சென்னை-2.



# மாதுளை மரம்

- திருமலை நடராசன்

மாதுளை மரம், பிஞ்சும், காயும், பழமும், மரப்பட்டையும், வேரின் பட்டையும் மருத்துவப் பயனுடையவை.

### பேதி நிற்க-பிஞ்சு

*மலக்கழிச்சல் சீதத்தால் வந்த கழிச்சல்*
*சலக்கழிச்சல் சோரியாற் சாரும்-பலகழிச்சல்*
*மாறும் புளிப்பான மாதுளம் பிஞ்சையுண்ண*
*ஆறுமுகன் மாதே அறி!.*

*- அகத்தியர் குணபாடம்.*

பூ உதிராத மாதுளம் பிஞ்சை அரைத்து தயிரில் கலக்கி உட்கொள்ள பேதி நிற்கும். மூன்று பிஞ்சு, இருநூறு கிராம் தயிர். இரண்டு வேளைகள்.

### வயிற்றுப் புண் குணமாக

விதை முற்றாத காயை அரைத்து இளநீர் விட்டுப் பிசைந்து அடை போல் தட்டி இரண்டு மணிநேரம் நிழலில் வைத்திருந்து, இரண்டு தேக்கரண்டி அளவு இருநூறு கிராம் தயிரில் குழைத்து வெறும் வயிற்றில் உண்ணவும்.

### வயிறு தொடர்பான நோய்களுக்கு மாதுளம் பூ

வாந்திபித்த தோடமொடு மாறாக் கடுப்பலைஞ்
சேர்ந்து நின்ற மூலரத்தந்
*தீர்க்குங்காண்-மாந்தளிர்க்கை*
*மாதே! யிரத்தபுஷ்டி வல்லபலன் உண்டாக்கும்*
*பூதலத்துள் மாதுளையின் பூ.*

*- அகத்தியர் குணபாடம்.*

மாதுளம் பூவை பாலில் போட்டுக் கொதிக்க வைத்து, பூ வெந்ததும் எடுத்துவிட்டு ஆறவிட்டு, பாலில் சிறிது தேன்விட்டு, காலையில் வெறும் வயிற்றில் அருந்தவும். தொடர்ந்து எட்டு நாட்களுக்கு மட்டும். இம் மருந்துண்ணும் நாட்களில் காரப்பண்டங்கள் கிழங்குளை நீக்கவும்.

### உடல் வலுவாக

மாதுளம் பூவை நிழலில் உலர்த்தி இடித்துக் கொள்ளவும். காலை உணவு முடித்து அரைத் தேக்கரண்டித் தூளை உட்கொண்டு சிறிது வெந்நீர் அருந்தலாம். தொடர்ந்து உட்கொண்டு வர உடல் நலமும் வலுவுமடையும்.

### இரத்த வாந்திக்கு மாதுளம்பூ

ஐம்பது கிராம் மாதுளம் பூவை முந்நூறு மில்லி லிட்டர் தண்ணீரில் போட்டு மூடி, சிறு தீயாக எரித்து பாதி சுண்டியதும் இறக்கி ஆறவிட்டு அருந்த, வாந்தி, இரத்த வாந்தி நிற்கும். மூன்று வேளைகள்.

### இரத்த விருத்திக்கு மாதுளம் பூ

காலையில் நான்கு மாதுளம் பூவைத் தின்று சிறிது பால் அருந்தவும். தொடர்ந்து நாற்பது நாட்கள் உட்கொண்டு வர இரத்தம் சுத்தமாவதோடு, விருத்தியுமேற்படும்.

### கழிச்சல் நிற்க மாதுளம் பிஞ்சுக் குடிநீர்

*மாதுளங் கடம்பு புன்கின்*
*வாய்த்த வேர் திப்பிலியத்தித்*
*தீதறுங் கொழுந்து சுக்கு*
*திரி பலை விரும்பிக் கூட்டி*
*நீதியா மிரண்டு நாழி*
*நீருழக் காக்கிக் கொண்டால்*
*சுரதினை முலையி னாளே*
*சுரமதி சாரம் போமே.*

*- அகத்தியர் குணபாடம்.*

*முக்மாதுளைப் பிஞ்சதிவிடயம் முத்தக்காசு*
*பெருமரத்தோர்*
*தகைசேர் சுக்கு விளங்காயின் சதையோ*
*ரொன்று*
*கழஞ்சிரண்டு*
*வகையாய்க் கூட்டிமிருந்தாழி யுழக்காய்க்*
*கர்ய்ச்சிப் போதருந்த*
*பகையாய் வருமதிசார சுரம் போகும் பாரிற்*
*பாரீரே!*

மாதுளம் பிஞ்சு ஐந்து கிராம், அதிவிடயம், முத்தக்காசு, பெருமரத்தோல், சுக்கு, விளாங்காய்த்

தோல் இவைகளை ஐந்தைந்து கிராம் எடை எடுத்து எல்லாவற்றையும் ஒன்றிரண்டாகத் தட்டி ஒரு மண்பானையில் போட்டு ஒரு லிட்டர் தண்ணீர் விட்டு மூடி சிறு தீயாக எரித்து இருநூற்றைம்பது மி.லிட்டர் அளவுக்குச் சுண்டியதும், இறக்கி ஆறவிட்டு, இரண்டு பங்காக்கி காலை வெறும் வயிற்றிலும், மாலை ஆறு மணி அளவிலும் பருகவும். மூன்று நாட்கள். மூன்று நாட்களும் மருந்தைப் புதிதாக செய்து உட்கொண்டு வர, தீராக் கழிச்சல் நிற்கும். மருந்துண்ணும் நாட்களில் கிழங்குகள், கடலைகள், வாழைக்காய் உட்கொள்ளக்கூடாது.

**கழிச்சல் நிற்க மாதுளம் பிஞ்சுக் குடிநீர்**

மாதுளம் பிஞ்சு ஐந்து கிராம். ஆலமரத்துப்பட்டை ஐந்து கிராம், மாமரத்துப் பட்டை ஐந்து கிராம், வெந்தயம் ஐந்து கிராம், சீரகம் ஐந்து கிராம், பட்டைகளைக் காய்ந்த பகுதியை நீக்கி, பச்சையாக எடுத்துக் கொள்ளவும். எல்லாவற்றையும் ஒன்றிரண்டாக இடித்து மண்பானையில் போட்டு ஒரு லிட்டர் தண்ணீர் ஊற்றி மூடி சிறுதீயாக எரித்து கால் லிட்டர் அளவுக்குச் சுண்டியதும் இறக்கி ஆறவிட்டு இரண்டு பங்காக்கி, காலை, மாலை வெறும் வயிற்றில் உட்கொள்ளவும். மூன்று நாட்கள், ஒவ்வொரு நாளும் புதிதாக மருந்தைச் செய்துகொள்ளவும். கிழங்குகள், கடலைகள், வாழைக்காய் இவைகளை நீக்கவும்.

**சீதபேதிக்கு மாதுளம் பிஞ்சு**

இருபத்தைந்து கிராம் மாதுளம் பிஞ்சை இடித்து இரண்டு லிட்டர் தண்ணீரில் போட்டு நான்கில் ஒரு பங்காக எரித்து இறக்கி, ஆறவிட்டு - காலை, மாலை இரண்டு வேளையாக, மூன்று நாட்கள் தொடர்ந்து உட்கொண்டால் சீதபேதி குணமாகும்.

கடலைகள், கிழங்குகள், வாழைக்காய் இவைகளை உண்ணக்கூடாது.

**வாந்தி நிற்க மாதுளம் பிஞ்சு**

ஒரு பிஞ்சை நான்காக வெட்டி, இரண்டு மணி நேரத்துக்கு ஒரு துண்டாக மென்று விழுங்கினால் வாந்தி நிற்கும்.

**உடல் நலத்திற்கு மாதுளம் பழச்சாறு**

*சங்கையறச் சொற்றவிர்க்குஞ் சற்றியா சஞ்சர்த்தி*
*யங்கையதி தாகஉம்மைச் சாருமோ-கங்கை*
*இருந்தாடி மக்கட் கிரத்தலைச் செய்நோய்போம்*
*இருந்தாடி மக்கனிவட் கெண்.*
*வாய் நீருறகசப்பு வாந்திவிக்கல் மந்தமிகக்*
*காய்வெப்பம் நெஞ்செரிவு காதடைப்பும்-ஒயா*
*மயக்க முந் தீர்ந்துவிடும் மாதுளம் பழத்தால்*
*தயக்க மறத்தே மொழியே! சாற்று.*
*வெடித்துவீழ் பழத்தை வாங்கி*
*மெல்லிய சீலைகட்டி*
*கடுக்கெனப் பிழிந்து கொண்டு*
*கண்டுசர்க் கரையுங் கூட்டி*
*குடித்திட வெப்பு மாறுங்*
*குளிர்ந்திடும் அங்க மெல்லாம்*
*வடித்தநன் மொழியினாளே!*
*மாதுளம் பழத்தினாலே.*

- தேரையர் குணபாடம்.

உடல்நலம் பெற மாதுளம் பழச்சாறு மிகவும் சிறந்ததாகும். மாதுளம் பழச்சாற்றை முறையாக அருந்த வேண்டும்.

மாதுளம் பழ விதைகளை மெல்லிய துணியில் வைத்துப் பிழிந்து நான்கு தேக்கரண்டிச் சாறுக்கு அரைத் தேக்கரண்டித் தேனைக் கலந்து காலையில் வெறும் வயிற்றில் உட்கொள்ள வேண்டும்.

அல்லது காலை உணவு முடித்து முப்பது நிமிடங்கள் கழித்தும் அருந்தலாம். உணவுக்கு முன் அருந்தினால் பசி ஏற்படும். உணவுக்குப் பின்அருந்தினால் உணவு எளிதில் சீரணிக்கும்.

**குழந்தைகளுக்கு (ஒரு வயதிற்கு)**

குழந்தைகளுக்கு அரைத் தேக்கரண்டிச் சாற்றுடன் ஒரு தேக்கரண்டி வெந்நீர்க் கலந்து கொடுக்க வேண்டும்.

மாலை ஆறு மணிக்கு மேல் மாதுளம் பழச்சாற்றை அருந்துவது பலருக்கு ஒத்து வருவதில்லை.

**தூரக் கோளாறுகளுக்கு**

விதை இல்லாத மாதுளம் பழத்தை உணவுக்கு முன் உட்கொள்ளலாம். மூன்று தேக்கரண்டிச் சாற்றுடன் ஒரு தேக்கரண்டி தேனைக் கலந்தும் அருந்தி வரலாம்.

இம்மருந்தை உட்கொள்ளும் போது, எண்ணெய்ப் பண்டங்கள் கிழங்குகள் உண்பதைத் தவிர்ப்பது மிகவும் நல்லதாகும்.

பெண்களுக்கு தூரக் கோளாறும் நீங்கும். தூரத்திற்கு முன் ஏற்படும் வயிற்று வலியும் குணமடையும்.

**வயிறு தொடர்பான நோய்களுக்கு மாதுளை மரத்தோல்**

மாதுளை மரத்தைச் சீவி எடுத்து நூறு கிராம் அளவு ஒரு லிட்டர் தண்ணீரில் போட்டு மூடி கொதிக்க வைத்து முக்கால் பகுதி சுண்டியதும் இறக்கி ஆறவிட்டு காலை உணவுக்கு முன் பாதியும், மாலை ஆறுமணி அளவில் மீதியைப் பருகி வர வயிறு தொடர்பான நோய்கள் நீங்குவதுடன், பேதி நிற்கும், தோலில் ஏற்படும் அரிப்பும் குணமடையும்.

தொடர்ந்து இருபது நாட்களுக்கு உட்கொண்டால், வயிற்றுப்புண் குணமடையும்.

**மூலநோய்க்கு மாதுளை மரத்தின் வேரின் பட்டை**

*மாதுளை வேர் பிஞ்சினுக்கு வாந்தியதி*
*சாரம்போம்*
*தாதுவுமாம் அக்கனிக்குத்*
*தாகம்போம்-சரதைநிகர்*
*வண்ண முலையாய்! இலைகாய்மா*
*மலர்களுக்கு சொன்னவையெலாம் போகுஞ்*
*சொல்.*

*- அகத்தியர் குணபாடம்.*

மரத்தின் வேரின் பட்டை நூறு கிராம் இடித்து ஒரு லிட்டர் தண்ணீரில் போட்டு மூடி சிறு தீயாக எரித்து முக்காலும் சுண்டியதும், இறக்கி ஒரு தேக்கரண்டி சோற்றுப்பைப் போட்டு மூடி ஆறவிட்டு, இரண்டு பங்காக்கி காலை, மாலை உணவுக்கு முன் அருந்தி வர, தள்ளு மூலம், நீர்மூலம், இரத்த மூல நோயும் குணமடையும்.

இம்மருந்தை உட்கொள்ளும் நாட்களில், கிழங்குகள், வாழைக்காய், கடலைகள் மற்றும் எண்ணெய்ப் பண்டங்களைக் கண்டிப்பாக நீக்கவும்.

குறைந்தது இருபது நாட்களுக்குத் தொடர்ந்து மருந்தை அருந்தி வரவேண்டும்.

**விரை**

*சுக்கிலத்தைக் கட்டுமந்தச் சுக்கிலதோ*
*டம்போக்கும்*
*அக்கணமே சுக்கடுப்பை*
*ஆற்றுங்காண்-எக்காலுங்*
*கோதுளத் தெண்ணாத மலர்க் கொம்பனைய*
*மாதே! செம்மாதுளத்தின் பீசவலி.*

*- அகத்தியர் குணபாடம்.*

**மாதுளம் பழம்**

| | | |
|---|---|---|
| உண்ணத் தக்கது | 68% | |
| ஈரம் | 78.0 கிராம் | |
| புரதம் | 1.6 | " |
| கொழுப்பு | 0.1 | " |
| தாது உப்புக்கள் | 0.7 | " |
| நார் | 5.1 | " |
| சர்க்கரைச் சத்து | 14.5 | " |
| சக்தி | 65 கலோரி | |
| சுண்ணாம்புச் சத்து | 10 | மி.கி. |
| பாஸ்பரஸ் | 70 | " |
| இரும்பு | 0.3 | " |
| மாவுப் பொருள் | – | |
| தையமின் | 0.6 | " |
| ரிபோஃபிளேவின் | 0.1 | " |
| நியாசின் | 0.3 | " |
| வைட்டமின்-சி | 16 | " |



**மாதுளம் பழம்**

உமிழ்நீரைச் சுரக்க வைக்கும்; வாய் நாற்றத்தைப் போக்கும்; சீரணத்தை ஒழுங்காக்கும்; எளிதில் சீரணிக்கும்; வயிற்றுப் புண்ணை நீக்கும்; மூத்திர எரிவை நீக்கும்; அன்னத்தோஷத்தை நீக்கும்; பேதியை நிறுத்தும்; இருமலை ஒழிக்கும்; மார்பு வலியை நீக்கும்; வயிற்றுக் கனத்தை நீக்கும்; இருதயத்திற்குப் பலம் தரும்; தொண்டைக் கட்டுதலை நீக்கும்; வியர்வை நாற்றத்தை நீக்கும்; தோலை மென்மையாக்கும்; ஆண்மையைப் பெருக்கும்; பெண்மை அதிகரிக்கும்; பெண்கள் மாதவிடாய் நாட்களிலும் உண்ணலாம்; பெரும்பாடு குறையும்; மூல எரிவை நீக்கும்; நீரிழிவைக் குணமாக்கும்; ஆஸ்த்துமாவை நீக்கும்; மாரடைப்பை நீக்கும்; வாய்வுப் பிடிப்பு ஏற்படாது; விந்துவைக் கட்டும்; முகம் அழகாகும்; சீதபேதியைக் குணமாக்கும்; கோழையை அகற்றும்; தொண்டைக் கம்மல் நீக்கும்; இரத்தத்தைச் சுத்தியாக்கும்; இரத்த சோகையை நீக்கும்; பாண்டு ரோகத்தைத் தணிக்கும்; பித்தப் பாண்டு நோயைக் குணமாக்கும்; பெரு வயிற்றைக் குறைக்கும்.

மாதுளம் பழத்தைக் கண்ட கண்ட நேரங்களில் உண்ணக்கூடாது. அப்படி உண்டால் தனிப்படப் பெரிய பலன் கிடைக்காது.

***-'மரங்களின் மருத்துவப் பயன்கள்'***
*என்ற நூலிலிருந்து*
*வெளியீடு : பூங்கொடி பதிப்பகம்,*
*14, சித்திரைக் குளம் மேற்கு வீதி,*
*மயிலாப்பூர், சென்னை-4.*

# மரமொழிகள் !

★ தனிமரம் தோப்பாகாது!

★ மரம் வைத்தவன் தண்ணீர் விடுவான்!

★ வெயிலின் அருமை நிழலில் தெரியும்!

★ காடு செழித்தால் நாடு செழிக்கும்!

★ தன்னை வெட்டும் கோடாரிக்குத்
தானே பிடியாகும் மரம்போல!

★ பழுத்த மரத்தில்தான் கல்லடி விழும்!

★ ஒதியமரம் பெருத்தாலும் உத்திரத்துக்காகாது!

★ எட்டி பழுத்தென்ன ஈயாதார் வாழ்ந்தென்ன!

★ பனைமரத்தின் கீழேயிருந்து பாலைக்
குடித்தாலும் கள்தான்!

★ ஆலும் வேலும் பல்லுக்குறுதி;
நாலும் ரெண்டும் சொல்லுக்குறுதி!



## குறளில் மரங்கள்

❁ பயன்மரம் உள்ளூர்ப் பழுத்தற்றால் செல்வம்
நயன்உடை யான்கண் படின்.

❁ நுனிக்கொம்பர் ஏறினார் அஃதிறந்த தூக்கின்
உயிர்க்கிறுதி ஆகி விடும்.

❁ மண்ணோ டியைந்த மரத்தனையர் கண்ணோடு
இயைந்துகண் ணோடா தவர்.

❁ உரம் ஒருவற்கு உள்ள வெறுக்கை அஃதிலர்
மரம் மக்கள் ஆதலே வேறு.

❁ மணிநீரும், மண்ணும், மலையும், அணிநிழல்
காடும் உடையது அரண்.

❁ கான முயலெய்த அம்பினில் யானை
பிழைத்தவேல் ஏந்தல் இனிது.

❁ இளைதாக முள்மரம் கொல்க; களையுநர்
கைகொல்லும் காழ்த்த இடத்து.

❁ அரம்போலும் கூர்மைய ரேனும் மரம்போல்வர்
மக்கட்பண் பில்லா தவர்.

❁ நச்சப் படாதவன் செல்வம் நடுஊருள்
நச்சு மரம்பழுத் தற்று.

❁ நாண்அகத்து இல்லார் இயக்கம் மரப்பாவை
நாணால் உயிர்மருட்டி அற்று.

❁ இரப்பாரை இல்லாயின் ஈர்ங்கண்மா ஞாலம்
மரப்பாவை சென்றுவந் தற்று.



# துன்ப சிநேகிதன்

- கவிஞர் கண்ணதாசன்

ஒரு சோலைக்கு இலையுதிர் காலத்தில் மட்டுமே ஒரு குயில் வந்து கொண்டிருந்தது.

"சோலை இழந்த இந்தக் காலத்தில் ஏன் வருகிறாய், குயிலே ?" என்று ஒரு மரம் கேட்டது.

"நான் வசந்த காலத்தை என் நண்பர்களுக்காக ஒதுக்கிவிடுகிறேன்".

"என் பகைவர்கள் கோபம் தணிந்ததற்காகக் கோடைக் காலத்தை அவர்களுக்குக் கொடுத்து விடுகிறேன்.

எவரும் தேடா இலையுதிர் காலத்தை நான் தேர்ந்தெடுத்துக் கொள்கிறேன் .

இதன் மூலம், ஏ! மரங்களே! உங்கள் துன்பத்தை நான் பகிர்ந்து கொள்கிறேன். தொல்லையில்லாத தனிமையையும் நான் அனுபவிக்கிறேன்.

இருக்கும்போது எல்லாரும் வருவார்கள்; இல்லாதபோது யார் வருவார்கள் ?"

ஒரு மரம் சொன்னது :

"கனி கொய்யும் காலத்தில் ஒருநாள் நீ வரவேண்டும். உனக்காகப் பசுமையோடு காத்திருப்போம்".

அதன் வேண்டுகோளுக்கு இணங்கக் கனி கொய்யும் காலத்தில் குயில் வந்தது.

சோலை முழுவதையும் பறவைகள் சூழ்ந்து கொண்டிருந்தன.

குயிலைப் பார்த்ததும், "யாரோ புதியவன் வருகிறான்" என்று ஒரு பறவை சத்தம் போட்டது.

எல்லாப் பறவைகளும் தாக்கத் தொடங்கின.

தங்கள் நண்பனுக்கு ஏதும் செய்ய முடியாமல் மரங்கள் கண்ணீர் வடித்தன.

"குப்" பென்று குயில் வானத்தில் பறந்தது. பறந்தபடியே சொன்னது :

"பார்த்தீர்களா, வாழும் காலத்தில்கூட நாம் துன்பத்திலேதான் கலந்துகொள்ளுகிறோம்! வழக்கம் போல, நான் இலையுதிர் காலத்திலேயே வருகிறேன்!"



- 'கவிஞர் கண்ணதாசன் குட்டிக் கதைகள்' தொகுப்பிலிருந்து
வெளியீடு : வானதி பதிப்பகம், சென்னை-17.

# ஊனமுற்றோருக்கு அரசு வழங்கும் ஒப்பற்ற உதவிகள் !

ஊனமுற்றோருக்கு உறுதுணை புரிதலில் தமிழ்நாடு அரசு மிகுந்த அக்கறை கொண்டுள்ளது; அவர்களின் இடுக்கண் களைவதில், நம்முடைய அரசு, உடுக்கை இழந்தவன் கைபோல உடனுக்குடன் உதவி வருவதை நாடறியும்.

இந்த ஓராண்டு கால ஆட்சிக்காலத்தில், தமிழ்நாடு அரசு ஊனமுற்றோர் மறுவாழ்வுத் துறை மூலம் ஆற்றப்பட்டு வரும் அரிய பணிகள் விவரம் அவ்வுதவியினைப் பெற யாரை அணுக வேண்டும் என்கிற விவரங்கள் இங்கே தொகுத்தளிக்கப் படுகின்றன:

திட்டத்தின் பெயர் : சிறப்புக்கல்வி

பெறும் பயன்கள் : சிறப்புக்கல்வி, இலவச உணவு, தங்கும் விடுதி, இலவசச்சீருடை - ஆண்டுக்கு 2 முறை



தகுதிகள்/ நிபந்தனைகள்: 5 வயதிற்கு மேற்பட்ட ஊனமுற்ற சிறுவர், சிறுமியர்

அணுக வேண்டிய அலுவலர் : மாவட்ட மறுவாழ்வு அலுவலர்கள்

தி.பெ. : புத்தகங்கள் வாங்க உதவி (1-ஆம் வகுப்பு முதல் 8ஆம் வகுப்பு வரை)

பெ.ப : புத்தகங்கள் மற்றும் நோட்டுகள் வாங்க உதவித்தொகை ரூ.25லிருந்து ரூ.100 வரை (ஒராண்டிற்கு ஒருமுறை)

த/நி : 1ஆம் வகுப்பிலிருந்து 8ஆம் வகுப்பு வரை பயிலும் ஊனமுற்ற சிறுவர் சிறுமிகள் (பெற்றோரின் ஆண்டு வருமானம் ரூ.12,000க்கு மிகைப்படாமல் இருக்கவேண்டும்)

அ.அ. : மாவட்ட மறுவாழ்வு அலுவலர்கள்

தி.பெ. : கல்வி உதவித்தொகை (9ஆம் வகுப்பும் அதற்கு மேலும்)

பெ.ப. : ரூ.85லிருந்து ரூ.240 வரை

த/நி : 9ஆம் வகுப்பிற்கு மேல் கல்வி பயிலும் ஊனமுற்ற மாணவ மாணவியருக்கு மற்றும் தொழில் பயிற்சி, தொழில் நுட்பக்கல்வி மற்றும் தொழில் கல்வி பயிலும் ஊனமுற்ற மாணவ, மாணவியர்கள் (பெற்றோரின் ஆண்டு வருமானம் ரூ.24,000க்கு மிகைப்படாமல் இருக்கவேண்டும்)

அ.அ. : மாவட்ட மறுவாழ்வு அலுவலர்கள்

தி.பெ. : பேசும் திறன் இழந்த காது கேளாத குழந்தைகளுக்கான முன்பருவக் கல்வி

பெ.ப. : இலவசச் சிறப்புக்கல்வி, இலவசத் தங்கும் விடுதி வசதி மற்றும் உணவு

த/நி : 3 வயதிலிருந்து 5 வயதிற்கு மேற்பட்ட பேசும் திறன் இழந்த காது கேளாத சிறுவர் சிறுமியர்

அ.அ. : மாவட்ட மறுவாழ்வு அலுவலர்கள்

தி.பெ. : பார்வையற்ற மாணவ, மாணவிகள் தேர்வு எழுத உதவி

பெ.ப. : பார்வையற்ற மாணவ, மாணவிகள் அரசு பொதுத்தேர்வுகளில் வினாக்களுக்கு வாய் மூலம் அளிக்கும் பதிலினை அவ்வாறே எழுதும் உதவியாளருக்கு ஒரு தாளுக்கு ரூ.15 வீதம் உதவித் தொகை வழங்கப்படும்.

த/நி : பார்வையற்றோருக்கான மேல்நிலைப் பள்ளிகளில் பயிலும் மாணவ மாணவிகள்.

- *மைதிலி கே. ராஜேந்திரன்*
இயக்குநர்,
ஊனமுற்றோர் மறுவாழ்வு இயக்ககம்.

அ-அ : மாவட்ட மறுவாழ்வு அலுவலர்கள்

தி.பெ. : <u>"பிரெய்லி" புத்தகங்கள்</u>

பெ.ப. : அரசு மற்றும் அரசால் அங்கீகரிக்கப்பட்ட பார்வையற்றோர் பள்ளிகளில் பயிலும் பார்வையற்ற மாணவ-மாணவிகளுக்கு இலவசமான "பிரெய்லி" புத்தகங்கள் வழங்கப்படுகிறது.

த/நி : பார்வையற்றோர் பள்ளிகளில் பயிலும் பார்வையற்ற மாணவ-மாணவிகள்

அ-அ : மாவட்ட மறுவாழ்வு அலுவலர்கள்

தி.பெ. : <u>பார்வையற்றோருக்கான தொழிற் பயிற்சி(ஆண்கள்)</u>

பெ.ப. : இலவச விடுதி, உணவு வசதியுடன் ஆண்டிற்கு இரண்டு ஜதை சீருடை இலவசத் தொழிற்பயிற்சி(கீழ்க்கண்ட பிரிவுகளில்)

(அ) பொருத்துநர் (ம) அடிப்படை இயந்திரம் இயக்குநர் (1 ஆண்டு காலம்)

(ஆ) புத்தகம் கட்டுபவர் (6 மாத காலம்)

(இ) மின் கம்பி சுற்றுபவர் (1 ஆண்டு காலம்)

த/நி : 8ஆம் வகுப்பும் அதற்கு மேலும் படித்த பார்வையற்ற நபர்கள் 18 வயதுக்குமேல் இருக்கவேண்டும்.

அ-அ : மாவட்ட மறுவாழ்வு அலுவலர்கள்(அ) மேலாளர், பார்வையற்றோருக்கான அரசு தொழிற்பயிற்சி நிலையம், பூவிருந்த வல்லி, சென்னை-56.

தி.பெ. : <u>பார்வையற்ற பெண்களுக்கான தொழிற் பயிற்சி</u>

இலவச விடுதி, உணவு வசதியுடன் கீழ்க்கண்ட தொழிற் பிரிவுகளில் பார்வையற்ற பெண்களுக்குத் தொழிற் பயிற்சி அளிக்கப்படுகிறது.

(அ) கைத்தறி நெசவு (6 மாத காலம்)

(ஆ) சாக்கட்டி செய்தல் (6 மாத காலம்)

த/நி : பார்வையற்ற ஆதரவற்ற பெண்கள் 18 வயதிலிருந்து 40 வயதுக்குட் பட்டவர்களாக இருக்கவேண்டும். (தாழ்த்தப்பட்டோர் மற்றும் மலை ஜாதியினருக்கு 45 வயதுவரை)

அ-அ. : மாவட்ட மறுவாழ்வு அலுவலர் (அ) கண்காணிப்பாளர் பார்வையற்ற பெண்களுக்குத் தொழிற்கூடத்துடன் கூடிய அரசு மறுவாழ்வு மையம், பூவிருந்தவல்லி, சென்னை-56.

தி.பெ. : <u>பேசும் திறனிழந்த காது கேளாதவர் களுக்குத் தொழிற் பயிற்சி</u>

பெ.ப. : இலவசத் தொழிற் கல்வி 'பொருத்துநர்' பிரிவில் பயிற்சிக்காலம் 2 ஆண்டுகள். மாத உதவித்தொகை ரூ.150.

த/நி : 18 வயதிற்குமேற்பட்ட பேசும் திறனிழந்த காது கேளாதவர்கள் 8ஆம் வகுப்பிற்கு மேல் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்.

அ-அ. : மாவட்ட மறுவாழ்வு அலுவலர்கள் (அ) முதல்வர், அரசு தொழிற் பயிற்சி நிலையம், கிண்டி, சென்னை-32.



தி.பெ. : <u>கை, கால் ஊனமுற்ற பெண்களுக்கான பயிற்சி</u>

பெ.ப. : அழகுக்கலை மற்றும் உடல்வளக் கலையில் கை, கால் ஊனமுற்ற பெண்களுக்கு இலவசமான பட்டயப் பயிற்சி அளித்தல்

த/நி : 18 வயதிற்கு மேற்பட்ட கை, கால் ஊனமுற்ற பெண்கள்

அ-அ. : மாவட்ட மறுவாழ்வு அலுவலர்கள் (அ) இயக்குநர், அழகு மற்றும் உடல் வள பயிற்சிக்கூடம் எஸ்.டி.டிரஸ்ட் தென்காசி வட்டம் திருநெல்வேலி-கட்டபொம்மன் மாவட்டம்.



**வேலை வாய்ப்பு**

தி.பெ. : இட ஒதுக்கீடு

பெ.ப. : அரசு மற்றும் அரசு சார்பு நிறுவனங்களில் எழும் காலியிடங்களில் 3% இடங்களை ஊனமுற்றோருக்காக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. 3% இடங்களில் 1% இடங்கள் பார்வையற்றோருக்காகவும், 1% இடங்கள் பேசும் திறன் இழந்த காது கேளாதோருக்காகவும், 1% இடங்கள் கை, கால் ஊனமுற்றோருக்காகவும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

த/நி : தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணை வாரியம், தமிழ்நாடு ஆசிரியர் தேர்வாணை வாரியம் (ம) வேலை வாய்ப்பு அலுவலகம் ஆகியுவற்றினால் தேர்ந்தெடுக்கப்படும் பணிகளுக்குத் தேவையான கல்வித் தகுதிகள், வயது பெற்றிருத்தல் வேண்டும்.

அ.அ. : செயலாளர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணை வாரியம், சென்னை-2.

உறுப்பினர்-செயலர் தமிழ்நாடு ஆசிரியர் தேர்வாணை வாரியம், கல்லூரி சாலை, சென்னை-6.

உதவி இயக்குநர், மாவட்ட வேலை வாய்ப்பு அலுவலர், மாவட்ட வேலை வாய்ப்பு அலுவலகம்.

தி.பெ. : கல்வி நிறுவனங்களில் பார்வையற்றோருக்கான இடஒதுக்கீடு

பெ.ப. : கல்வி நிறுவனங்களில் எழும் ஆசிரியப் பணியிடங்களில், 2% பணியிடங்களைப் பார்வையற்றோரைக் கொண்டே நிரப்பப்படவேண்டும்.

த/நி : ஆசிரியர் பணிக்குத் தேவையான கல்வித் தகுதி பெற்றுள்ள பார்வையற்ற நபர்கள் வேலை வாய்ப்புக் கோரி வேலை வாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்திருத்தல் வேண்டும்.

அ.அ. : உதவி இயக்குநர், மாவட்ட வேலை வாய்ப்பு அலுவலர், மாவட்ட வேலை வாய்ப்பு அலுவலகம்.

தி.பெ. : கல்வி நிறுவனங்களில், பேசும் திறன் இழந்த-காது கேளாதவர்களுக்கு இட ஒதுக்கீடு.

பெ.ப. கல்வி நிறுவனங்களில் எழும் ஆசிரியப் பணியில்லாத பணியிடங்களில் 2% பணியிடங்களைப் பேசும் திறன் இழந்த காது கேளாதோரைக் கொண்டு நிரப்பப்படல் வேண்டும்.

த/நி : ஆசிரியர் பணியில்லாத பணியிடங்களுக்குத் தேவையான கல்வித் தகுதி பெற்றுள்ள பேசும் திறன் இழந்த காது கேளாத நபர்கள் வேலை வாய்ப்புக் கோரி வேலை வாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்திருத்தல் வேண்டும்.

அ.அ. : உதவி இயக்குநர், மாவட்ட வேலை வாய்ப்பு அலுவலர், மாவட்ட வேலை வாய்ப்பு அலுவலகம்.

தி.பெ. : சிறப்புப் பழகுநர் பயிற்சி.

பெ.ப. : பார்வையற்றோருக்கான அரசு தொழிற்பயிற்சி மையம் பூவிருந்தவல்லியில் பயின்று தேர்ச்சி பெற்ற பார்வையற்றோருக்கும், அரசு தொழிற் பயிற்சி மையம், கிண்டியில் பயிற்சி பெற்றுத்தேறிய-பேசும் திறன் இழந்த காதுகேளாதோருக்கும் அரசு சார்பு மற்றும் தனியார் தொழில் நிறுவனங்களில் சிறப்புப் பழகுநர் பயிற்சி ஓராண்டிற்கு அளிக்கப்பட்டு வருகிறது.

பயிற்சியின்போது மாதம் ஒன்றுக்கு ரூ.400/ வீதம் பயிற்சி உதவித்தொகை வழங்கப்படும்.

சிறப்புப்பழகுநர் பயிற்சிக்குப் பின்பு-பயிற்சி பெற்று, தொழில்

நிறுவனத்திலேயே பணியிடம் காலி ஏற்படும்போது பணிவழங்கப்படும்.

பார்வையற்றோருக்கான அரசு தொழிற் பயிற்சி நிலையம் பூவிருந்தவல்லி, பயிற்சி பெற்ற பார்வையற்றர்கள் அல்லது அரசு தொழிற் பயிற்சி நிலையம், கிண்டியில் பயின்ற பேசும் திறன்இழந்த காது கேளாதோரும் பயிற்சியில் தேறியிருக்க வேண்டும்.

அ.அ. : மாவட்ட மறுவாழ்வு அலுவலர்

தி.பெ. : <u>பார்வையற்றோருக்கு வேலைவாய்ப்பு அற்றோர் நிவாரணத் தொகை</u>

பெ.ப. : பார்வையற்றோர்களுக்கு வேலை வாய்ப்பற்றோர் நிவாரணத் தொகை கீழ்க்கண்டவாறு வழங்கப்பட்டு வருகிறது.

(அ) பள்ளியிறுதி வகுப்பிற்குக் கீழ் உள்ளவர்களுக்கு மாதமொன்றுக்கு ரூ.150.

(ஆ) புகுமுக வகுப்பு & மேல்நிலைக் கல்வி தேர்ச்சி பெற்றவர்களுக்கு ரூ.200.

(இ) பட்டதாரிகள் மற்றும் அதற்குமேல் கல்வித் தகுதி உள்ளவர்கள் ரூ.250.

த/நி : (அ) பார்வையற்றவராக இருக்க வேண்டும். வேலை வாய்ப்புக் கோரி வேலை வாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்து ஓராண்டிற்குமேல் இருக்க வேண்டும்.

(ஆ) பார்வையற்றவரின் வயது 18க்கு மேல் 40க்குள் இருத்தல் வேண்டும்.

(இ) தாழ்த்தப்பட்ட வகுப்பினர் மற்றும் மலை ஜாதியினர் வயது 45 வரை

அ.அ. : உதவி இயக்குநர், மாவட்ட வேலை வாய்ப்பு அலுவலர், மாவட்ட வேலை வாய்ப்பு அலுவலகம்.

தி.பெ. : <u>சுய வேலைவாய்ப்பு</u>

பெ.ப. : கல்வித் தகுதி குறைவாக உள்ளவர்கள் மற்றும் சுய தொழில் புரிய விரும்பும் ஊனமுற்ற நபர்களுக்கு, தேசீய மயமாக்கப்பட்ட வங்கிகளில் வங்கிக் கடன் அளிக்கப்பரிந்துரை செய்யப்படும்.

வங்கிக் கடன் அளித்த பிறகு அரசு மான்யமாகக் கடன் தொகையில் 3இல் 1 பங்கு அல்லது ரூ.1000 இதில் எது குறைவோ அது அளிக்கப்படும்.

த/நி : ஊனமுற்ற மனுதாரரின் வயது 18க்கு மேல் 45 வயதுவரை இருக்க வேண்டும். வேறு எந்த நிரந்தரப்பணியிலோ இருக்கக்கூடாது.

அ.அ. : மாவட்ட மறுவாழ்வு அலுவலர்.

**உதவி உபகரணங்கள்**

தி.பெ. : <u>மூன்று சக்கர சைக்கிள்</u>

பெ.ப. : இரண்டு கால்களும் இல்லாத ஊனமுற்றோருக்கு இலவசமாக 3 சக்கர சைக்கிள் வழங்கப்படுகிறது.

த/நி : மனுதாரரின் வயது 10க்கு மேல் இருத்தல் வேண்டும். இரண்டு கால்களும் ஊனம் அடைந்திருக்க வேண்டும். குடும்ப ஆண்டு வருமானம் ரூ.30,000க்கு மிகைப்படாமல் இருக்க வேண்டும். மருத்துவச் சான்றிதழ் பெற்றிருக்க வேண்டும்.

அ.அ. : மாவட்ட மறுவாழ்வு அலுவலர்.

தி.பெ. : <u>சக்கர நாற்காலி</u>

பெ.ப. : தான் வசிக்கும் இருப்பிடத்திலேயே சென்று வர விரும்பும், கை, கால் ஊனமுற்ற நபர்களுக்கு இலவசமாக சக்கர நாற்காலி வழங்கப்படுகிறது.

த/நி : கை, கால் ஆகிய உறுப்புக்கள் செயலிழந்து இருத்தல் வேண்டும். குடும்ப ஆண்டு வருமானம் ரூ.12,000க்கு மிகைப்படாமல் இருக்க வேண்டும். தக்க மருத்துவச் சான்றிதழ் பெற்றிருத்தல் வேண்டும்.



அ.அ. : மாவட்ட மறுவாழ்வு அலுவலர்.

தி.பெ. : காது கேட்கும் கருவி

பெ.ப. : இலவசமாக, காது கேட்கும் கருவி பேசும் திறன் இழந்து காது கேட்காதவர்களுக்கு வழங்கப்படுகிறது.

த/நி : காது கேட்கும் திறன் குறைந்து இருக்க வேண்டும். மருத்துவ நிபுணரால் பரிசோதிக்கப்பட்டு, அதற்கான சான்றிதழ் பெற்றிருத்தல் வேண்டும். குடும்ப ஆண்டு வருமானம் ரூ.12,000க்கு அதிகப்படாமல் இருக்கவேண்டும்.

அ.அ. : மாவட்ட மறுவாழ்வு அலுவலர்.

தி.பெ. : கறுப்புக் கண்ணாடி

பெ.ப. : பார்வையற்றோருக்கு இலவசமாக ஊனமுற்றோர் மறுவாழ்வுத்துறை மூலமாகக் கறுப்புக் கண்ணாடி மற்றும் மடக்குக் குச்சிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

த/நி : பார்வையற்றவராக இருக்க வேண்டும்.

அ.அ. : மாவட்ட மறுவாழ்வு அலுவலர்.

தி.பெ. : சூரிய சக்தியினால் இயங்கும் பாட்டரி

பெ.ப. : காது கேளாதோர் உபயோகப்படுத்தும் செவித்துளைக் கருவியில் உபயோகப் படுத்த சூரிய சக்தியினால் இயங்கும் பாட்டரி இலவசமாக வழங்கப்பட்டு வருகிறது.

த/நி : செவித்திறன் குறையுடையோருக்கான சிறப்புப் பள்ளிகளில் பயிலும், மாணவ மாணவிகள் மற்றும் இதர செவித்திறன் குறையுடையோர்.

அ.அ. : மாவட்ட மறுவாழ்வு அலுவலர்

## இளம்பிள்ளைவாத மறுவாழ்வுத்திட்டம்

தி.பெ. : அறுவை சிகிச்சை

பெ.ப. இளம்பிள்ளை வாதத்தால் பாதிக்கப்பட்ட உறுப்பை அறுவை சிகிச்சையின் மூலம் சரி செய்து, ஊனத்தின் கடுமை குறைக்கப்படுகிறது. இலவசமாக மருத்துவ சிகிச்சை அளிக்கப்படுகிறது. மருத்துவ சிகிச்சையின்போது பயனாளியுடன் இருக்கும் குடும்ப நபருக்கான உணவுக்கான செலவிற்குப் பணம் அளிக்கப்படுகிறது. மருத்துவ சிகிச்சைக்குத் தேவையான மருத்துவப் பொருட்கள் இலவசமாக இத்துறையால் அளிக்கப்படுகிறது.



த/நி : இளம்பிள்ளை வாதத்தால் பாதிக்கப் பட்டவராக இருக்கவேண்டும். இளம்பிள்ளை வாதத்தால் பாதிக்கப் பட்டோருக்கு மறுவாழ்வு அளிக்கத் தேர்ந்தெடுக்கப்பட்ட பகுதியில் வசிப்பவராக இருக்க வேண்டும்.

அ.அ. : மாவட்ட மறுவாழ்வு அலுவலர்

தி.பெ. : தசைப் பயிற்சி

பெ.ப. : மருத்துவ சிகிச்சைக்குப் பின்போ இளம்பிள்ளை வாதத்தால் பாதிக்கப்பட்ட அறுவை சிகிச்சை தேவைப் படாதவருக்கோ தசைப் பயிற்சி அளிப்பதன் மூலம் அவர்கள் நன்கு நடந்து செயல்புரிய உதவப்படுகிறது.

த/நி : அறுவை சிகிச்சை பெற்றவராக இருத்தல் வேண்டும். தசைப் பயிற்சியின் மூலம் அவரது நடக்கும் திறன், இயக்கத் திறன் மேம்படும் வகையில் இருக்கவேண்டும்.

அ.அ. : மாவட்ட மறுவாழ்வு அலுவலர்.

தி.பெ. : காலிஃபர், அக்குள் குச்சி, 3 சக்கர சைக்கிள், சக்கர நாற்காலி

பெ.ப. : இளம்பிள்ளை வாதத்தால் பாதிக்கப்பட்ட நபர்களுக்கு உபயோகப்படும் காலிஃபர், 3 சக்கர சைக்கிள் மற்றும் சக்கர நாற்காலி போன்ற உதவி உபகரணங்கள் இலவசமாக வழங்கப்படுகிறது.

த/நி : இளம்பிள்ளை வாத மறுவாழ்வுத் திட்டத்தின் கீழ் தேர்ந்தெடுக்கப்பட்ட பயனாளிகளாக இருத்தல் வேண்டும்.

அ-அ- : மாவட்ட மறுவாழ்வு அலுவலர்.

தி.பெ. : பள்ளியில் சேர்க்கை, கல்வி உதவித் தொகை, தொழிற் பயிற்சி, சுய வேலை வாய்ப்பு, வேலை வாய்ப்பு, இடை மாறுபாட்டுப் பள்ளியில் சேர்க்கை, முதியோர் ஒய்வூதியம் (ஊனமுற்றோருக்கானது) கடும் ஊனமுற்றோர் பராமரிப்பு உதவித்தொகை

பெ.ப. : இளம்பிள்ளை வாதத்தால் பாதிக்கப்பட்ட நபர்களில் தேவைக்கேற்றவாறு பள்ளிகளில் சேர்க்கைக்கும், பள்ளியில் படிப்போருக்கும் கல்வி உதவித் தொகையும் பள்ளிப் படிப்பு முடித்தவர்களுக்குத் தொழிற் பயிற்சியில் சேர உதவியும், வயது அதிகமாக உள்ளோருக்கு ஊனமுற்றோருக்கு வழங்கப்படும் முதியோர் ஒய்வூதியமும், கடுமையான ஊனத்தினால் பாதிக்கப்பட்டோருக்குப் பராமரிப்பு உதவித்தொகையாக மாதா மாதம் பெறுவதற்கும் தக்க வகையில் உதவி செய்யப்பட்டு வருகிறது.

த/நி : இளம்பிள்ளை வாத மறுவாழ்வுத் திட்டம் அமலாக்கவெனத் தேர்ந்தெடுக்கப்பட்ட பகுதியைச் சேர்ந்தவராக இருத்தல் வேண்டும்.

அ-அ- : மாவட்ட மறுவாழ்வு அலுவலர்

**இதர உதவிகள்**




தி.பெ. : பார்வையற்றோருக்கு ரூ.10,000 திருமண உதவி.

பெ.ப. : தேசீய சேமிப்புப் பத்திரமாக ரூ.7000மும், திருமணச் செலவிற்காக ரூ.3000மும் ஆக மொத்தம் ரூ.10,000 திருமண உதவியாக அளிக்கப்படுகிறது.

த/நி : பார்வையுள்ளவர் பார்வையற்றவரைத் திருமணம் செய்துகொள்ள வேண்டும். தம்பதியரில் ஒவ்வொருவரின் வயதும் 18 வயதிற்கு மேல் இருத்தல் வேண்டும். ஆண்டு வருமானம் ரூ.12,000க்கு மிகைப்படாமல் இருத்தல் வேண்டும்.

அ-அ- : மாவட்ட மறுவாழ்வு அலுவலர்.

தி.பெ. : கடும் ஊனமுற்றோருக்குப் பராமரிப்பு உதவித்தொகை

பெ.ப. : மாதமொன்றுக்கு ரூ.150 வீதம் கடுமையாக ஊனமுற்றோருக்குப் பராமரிப்பு உதவித் தொகையாக வழங்கப்படுகிறது.

த/நி : ஊனத்தின் சதவிகிதம் 75%க்கு மேற்பட்டிருக்க வேண்டும். பெற்றோரின் ஆண்டு வருமானம் ரூ.12,000க்கு மிகைப்படாமல் இருக்கவேண்டும். அரசின் வேறு எந்த உதவியும் பெறுபவராக இருக்கக்கூடாது. ஒன்றுக்கு மேற்பட்ட ஊனமுற்றோருக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

அ-அ- : மாவட்ட மறுவாழ்வு அலுவலர்

தி.பெ. : இலவசப் பேருந்து பயணச் சலுகை

அனைத்து உடல் ஊனமுற்றோரும் வயது வரம்பின்றி 100 கி.மீ.தூரம் வரை சென்று வர அனுமதி (திருவள்ளுவர் மற்றும் ராஜீவ் காந்தி போக்குவரத்துக் கழகம் தவிர)

அரசு போக்குவரத்துக் கழக விரைவுப் பேருந்துகளில் பார்வையற்றோரும் இதர ஊனமுற்றோரும் இலவசமாகப் பயணம் செய்ய ஆண்டிற்கொருமுறை இருவழி பயணத்திற்கு இலவசப்பயணம் சலுகை அளிக்கப்படுகிறது.
(தமிழ் நாட்டிற்குள் மட்டும் பயணம் செய்ய)

பெ.ப. : பார்வையற்றோர் எவ்வித நிபந்தனைகளும் இல்லாமல் அரசுப் போக்குவரத்துக் கழகப் பேருந்துகளில்

இலவசமாகச் சென்று வர இலவசப் பயணச் சலுகை அளிக்கப்படுகிறது.

மன வளர்ச்சி குன்றியோர் மற்றும் மனநிலை பாதிக்கப்பட்டோருக்கு:

அங்கீகரிக்கப்பட்ட கல்வி நிறுவனங்களில் கல்வி/பயிற்சி பெற்றுவரும் மன வளர்ச்சி குன்றியோர், மனநிலை பாதிக்கப்பட்டோர் ஆகியோர் உதவியாளர் ஒருவருடன் அரசுப் போக்குவரத்துக் கழகப் பேருந்துகளில் இலவசமாகப் பயணம் செய்யச் சலுகை வழங்கப்படுகிறது.

பேசும் திறன் இழந்த காது கேளாதோர் மற்றும் கை, கால் ஊனமுற்றோருக்கு இலவசப் பயணச் சலுகை:

பேசும் திறன் இழந்த காது கேளாதோர்களுக்கும், கை, கால் ஊனமுற்றோருக்கும் அரசுப் போக்குவரத்துக் கழகப்பேருந்துகளில் பள்ளி / கல்லூரி / பயிற்சிக்கூடம் / மருத்துவமனை / பணியிடம் ஆகிய இடங்களுக்கு இலவசமாகச் சென்று வர இலவசப் பயணச் சலுகை வழங்கப்படுகிறது.

த/நி : பார்வையற்றவராக இருத்தல் வேண்டும்.

ஊனமுற்றோர் மறுவாழ்வுத் துறையால் அங்கீகரிக்கப்பட்ட கல்வி நிறுவனத்திலிருந்து கல்வி/பயிற்சி பெற்று வருவதற்கான சான்றிதழை அளிக்க வேண்டும்.

தன் இருப்பிடத்திலிருந்து செல்ல விரும்பும் பள்ளி/கல்லூரி/மருத்துவமனை/பயிற்சி மையம்/பணியிடம் ஆகியவற்றின் ஏதாவது ஒரு நிறுவனத்தின் தலைவரிடம் இருந்து சான்றிதழ் பெற்றிருக்க வேண்டும்.

அ.அ. : மாவட்ட மறுவாழ்வு அலுவலர்.

தி.பெ. : <u>அரசுப் பணிக்கு வயது வரம்பு விதிவிலக்கு</u>

பெ.ப. : மாநில அரசுப் பணிகளைப் பொறுத்த வரை ஊனமுற்றோர் அரசுப் பணிகளில் நுழைய மற்றவர்களுக்கு விதிக்கப் பட்டுள்ள வயது வரம்பைவிடக் கூடுதலாக 10 ஆண்டுகள் தளர்த்தப் பட்டுள்ளது.




த/நி : ஊனமுற்றோர் தனது கல்வித் தகுதி மற்றும் ஊனத்தின் தன்மை குறித்து வேலை வாய்ப்புக் கோரி வேலை வாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்திருக்க வேண்டும். தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணை வாரியம் மூலம் விளம்பரப்படுத்தப்படும் பணிகளுக்கு விண்ணப்பம் செய்து, தேர்வுகளில் கலந்துகொள்ள வேண்டும்.

அ.அ. : உதவி இயக்குநர்/மாவட்ட வேலை வாய்ப்பு அலுவலர் (அ) செயலாளர் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணை வாரியம் (அ) உறுப்பினர் - செயலர் தமிழ்நாடு ஆசிரியர் தேர்வாணை வாரியம், சென்னை.

தி.பெ. : <u>பார்வையற்றோர் பொதுத் தேர்வுகள் எழுதக் கட்டண விலக்கு</u>

பெ.ப. : பத்தாம் வகுப்பு, மேல்நிலைத் தேர்வு மற்றும் பட்ட வகுப்புகளுக்கான பொதுத்தேர்வுகளுக்குக் கட்டவிருக்கும் கட்டணங்களில் இருந்து பார்வையற்றோருக்கு விலக்கு அளிக்கப் பட்டுள்ளது.

த/நி : பார்வையற்றோர் பொதுத் தேர்வுகள் எழுதத் தகுதி பெற்றவராக இருக்க வேண்டும்.

அ.அ. : தலைமையாசிரியர் உயர்நிலை/மேல்நிலைப்பள்ளிகள்/முதல்வர், கல்லூரி/பல்கலைக்கழகம்/அஞ்சல் வழி கல்வித்துறை நிலையம்

தி.பெ. : <u>பார்வையற்றோர் அரசுப் பணிகளுக்கு விண்ணப்பிக்கும்போது தேர்வுக் கட்டணங்களில் இருந்து விதிவிலக்கு</u>

பெ.ப. : தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வு வாரியத்தின் மூலம் விளம்பரப்படுத்தும் பணியிடங்களுக்குத் தகுதி வாய்ந்த பார்வையற்றோர் விண்ணப்பிக்கும் பட்சத்தில் அவர்கள் செலுத்தவேண்டிய தேர்வுக் கட்டணத்திலிருந்து விதிவிலக்கு அளிக்கப்பட்டுவருகிறது.

த/நி : தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் விளம்பரப்படுத்தும் பணிகளுக்கான கல்வித் தகுதி, வயது ஆகியன பெற்றிருக்கும் பார்வையற்ற நபர்கள்.

அ.அ. : செயலாளர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணை வாரியம், சென்னை-2.

தி.பெ. : <u>போக்குவரத்துப் படி</u>

பெ.ப. : மாநில அரசு, அரசு சார்பு நிறுவனங்களில் பணிபுரியும் ஊன முற்றோர் அனைவருக்கும் அவரவர் இருப்பிடங்களிலிருந்து அலுவலகம் சென்றுவர, போக்குவரத்துப்படியாக மாதமொன்றுக்கு ரூ.75 வீதம் அரசால் வழங்கப்பட்டு வருகிறது.

த/நி : ஊனத்தின் தன்மை குறித்த மருத்துவச் சான்றிதழைக் குடியுரிமை மருத்துவ வல்லுநரிடமிருந்து பெற்றுச் சமர்பிக்க வேண்டும். மருத்துவச் சான்றிதழ் குறிப்பிட்ட படிவத்தில் இருக்க வேண்டும்.

அ.அ. : சம்பந்தப்பட்ட துறையின் தலைவர்/ நிர்வாக அலுவலர்




தி.பெ. : <u>ஊனமுற்றோருக்கான அடையாள அட்டை</u>

பெ.ப. : ஊனமுற்றோர் மறுவாழ்வுத் துறையால் வழங்கப்படும் வெவ்வேறு உதவிகளைப் பெறுவதற்காக அவ்வப்போது மருத்துவச் சான்றிதழ் பெறும் சிரமத்தைத் தவிர்க்கும் பொருட்டும் அடையாள அட்டையை ஊனமுற்றோர் பத்திரமாக வைத்திருக்கும்வண்ணம் நிலையான அடையாள அட்டை வழங்கப்படுகிறது.

த/நி : 40%க்கும் கூடுதலான ஊனத்தைப் பெற்றிருப்பவராக இருக்க வேண்டும்.

அ.அ. : மாவட்ட மறுவாழ்வு அலுவலர்

தி.பெ. : <u>பெட்ரோல் மான்யம்</u>

பெ.ப. : ஊனமுற்றோர் தமது சொந்தப் பெயரில் வைத்துள்ள இரண்டு/நான்கு சக்கர வாகனங்களுக்கு ஆகும் பெட்ரோல்/ டீசல் செலவில் 50% மான்யமாக வழங்கப்பட்டு வருகிறது. 2 குதிரைச் சக்தி மற்றும் அதற்குக் குறைவாக சக்தி உள்ள வாகனங்களை வைத்திருப் பவர்களுக்கு அதிகபட்சமாக மாதமொன்றுக்கு 15 லிட்டர் பெட்ரோல் அல்லது டீசல், 2 குதிரைச் சக்திக்கு மேல் உள்ள வாகனங்களை வைத்திருக்கும் ஊனமுற்ற நபர்களுக்கு அதிகப்பட்சமாக மாதமொன்றுக்கு 25லி.பெட்ரோல் அல்லது டீசல் மானியமாக வழங்கப்பட்டுவருகிறது.

த/நி : ஊனமுற்ற நபர் தனது பெயரில் வாகனத்தை வைத்திருக்க வேண்டும். பெட்ரோல் மான்யம் பெற விண்ணப்பிக்கும் ஊனமுற்ற நபரின் மாத வருமானம் ரூ.2500க்கு மிகைப்படாமல் இருக்க வேண்டும். விண்ணப்பதாரர் பெட்ரோல் மான்யம் பெறுவதற்கான விண்ணப்பத்தில் அனைத்து இணைப்புகளையும் இணைத்து விண்ணப்பிக்க வேண்டும். பெட்ரோல்/டீசல் மான்யம் பெற விரும்பும் ஊனமுற்ற நபர்கள் தான் பணி புரியும் துறையிலிருந்து எந்தப் போக்குவரத்துப் படியோ, உதவியோ பெறாதவராக இருக்கவேண்டும்.

அ.அ. : மாவட்ட மறுவாழ்வு அலுவலர் ★

ஆசிரியரும் வெளியிடுபவரும் : வெ. இறையன்பு, இ.ஆ.ப., இயக்குநர், செய்தி-மக்கள் தொடர்புத்துறை, தமிழ்நாடு அரசு.

சென்னை தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.

தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், அண்ணாசாலை, சென்னை - 600 002. தொலைபேசி : 568926, 568927

ஆசிரியர் மடல்

# சுற்றுச் சூழலைச் சற்று சிந்திப்போம்!



இயற்கை எவ்வளவு அழகானது!
அதன் ஒவ்வொரு அசைவிலும்
ஒருநூறு அழகிய உச்சரிப்புகள்!

தென்றல் அதன் சுவாசக் காற்றென்றால்
புயல் அதுவிடும் பெருமூச்சு!

மொட்டாகி இருக்கும் செடி இதழ்கள்
கொட்டாவி விடுவதால் மலர்கின்றனவோ!

வேர் வேர்க்காவிட்டால்
கிளை பூவாய்ப் புன்னகைக்க முடியுமா?

அருவி அதன் போக்கில் விழுகிறது;
ஏகப்பட்ட மின்சாரத்தையும் வாரி வழங்கிக்கொண்டே!

கடல் அலைகளாய்க் கைநீட்டுகிறது;
பூமியின் கால்களை ஈரமாய் நனைத்துக்கொண்டே!

ஆற்றின் நடையை யாராவது மாற்றமுடியுமா?

காற்றுமண்டலத்தில் கரியமிலவாயு கச்சிதமாய் 0.03% கலந்திருக்கிறது -
அதில்கொஞ்சம் அதிகரித்தாலும்
பனிமலைகள் கரைய ஆரம்பிக்கின்றது;
கடல் கரையை நீளம் தாண்டி ஊருக்குள்
கண்ணாமூச்சி விளையாடிவிடுகிறது-

வனம் சேதப்படும் பொழுதெல்லாம் வளமான மண்ணை
வாரிக்கொண்டு போய்விடுகிறது!

ஒரு மி.மீ.உயரத்திற்கு மண் உருவாகவே
ஆயிரம் ஆண்டுகள் தேவைப்படுகிறது!

வரவேற்பறைகளில் மரங்களைப்
படங்களாய்ப் பார்க்கிற காலம் வருமுன்
விதைகளோடு விரைவோம்!



தூய
பட்டு
தூய
சரிகை
ராஜகம்பீரமான ஊதா...
செந்தூரப்பூபோல் சிகப்பு...
மங்களகரமான மஞ்சள்...
வான்வெளிபோல் நீலம்...
கற்பனைக் கடங்கா
அற்புத வண்ணங்களில்
நேர்த்தியான பட்டு,
நல்குவது கோ–ஆப்டெக்ஸ்.
கோ-ஆப்டெக்ஸ்
தமிழ் நாடு கைத்தறி

தமிழரசு

பதிவு எண். M. 8676
Licence No.TN/MS(C)/PP-23



Padmavasan

